# குறவன் குறத்தி ஆட்டம்

முனைவர் கே.ஏ.குணசேகரன்



UG6179
R007I01
U.G.6179

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# குறவன் குறத்தி
# ஆட்டம்

# குறவன் குறத்தி ஆட்டம்

முனைவர் கே. ஏ. குணசேகரன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 005

ISBN : 81-7090-360-2

தமிழ்ப் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டு வெளியீடு -17

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 299

திருவள்ளுவராண்டு 2036, மார்கழி - திசம்பர் - 2005

| | | |
|---|---|---|
| நூல் | : | குறவன் குறத்தி ஆட்டம் |
| ஆசிரியர் | : | கே. ஏ. குணசேகரன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | நாடகவியல் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2005 |
| பக்கம் | : | 160 |
| தாள் | : | டி.என்.பி.எல்.மேப்லித்தோ 18.6 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டுமானம் | : | சாதாக்கட்டு |
| விலை | : | உரு. 60/- |
| படிகள் | : | 1000 |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம் தஞ்சாவூர் |

# தமிழ்ப் பல்கலைக்கழகம்
# தஞ்சாவூர்

முனைவர் சி.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

## அணிந்துரை

தமிழர் வாழ்வியல் ஆடல், பாடல் இவற்றோடு கலந்து சிறந்த ஒன்றாகும். தமிழினம் தோன்றிய நாள் முதல் தமிழ்ப் பாடல்களும், தமிழ் ஆடல் வடிவங்களும் பல்வேறுபட்ட நிலையில் வளர்ந்து தமிழினத்தின் பண்பாட்டுக் கூறுகளாகக் காண்போர் கண்ணையும், கருத்தையும் ஒருங்கே கவர்ந்துள்ளன. நிலத்தின் இயல்பால் நீர் திரிவது போல தமிழக மண் வளமும், இயற்கை வளங்களும் இத்தகைய தமிழ்க் கலைகளின் பெருக்கத்திற்குக் காரணமாக அமைந்து பிற இனங்களிடையே தமிழினத்தின் நாகரிகப் பெருமையினை ஓங்கச் செய்துள்ளன.

சங்க காலம், இடைக்காலம், சோழர் காலம், பாண்டியர் காலம், நாயக்கர்கள் காலம், மராட்டியர் காலம், ஐரோப்பியர் காலம், தற்காலம் என்ற கால நிலைகளைக் கடந்து வந்துள்ள தமிழகத்தின் ஒப்புயர்வற்ற ஆடல் வடிவங்களுள் சுதேச மக்களின் ஆடல், பாடல்கள் என்றும் அழியாச் சிறப்புடன் தமிழினத்தின் கலை மரபு அடையாளங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

தமிழகம் என்ற நிலையில் வடவேங்கடம், தென்குமரி ஆகிய இடங்களுக்கு இடையே உள்ள நிலப்பரப்புச் சுட்டப்பட்டாலும் அவை ஐந்து பெரும் பகுப்புகளாக நிலவியல் அடிப்படையில் வகுக்கப்பெற்று அந்நில வகுப்புகளுக்கு இயைபுடைய கருப்பொருளையும் உரிப்பொருளையும்

முதற்பொருளையும் அறிவியல் அடிப்படையில் வகுத்துக் காட்டிய நுண்ணாய்வுத் திறம் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழகத்தில் இருந்து வந்தமைக்கு உரிய சான்றுகளாகத் தொல்காப்பியத்தையும், தொல்காப்பியப் பாயிரம் உணர்த்தும் முந்து நூல்களையும் காணமுடிகிறது.

அத்தகைய ஐம்பெரும் நிலப்பகுப்புகளில் குறிஞ்சி மலையைச் சார்ந்தும், முல்லை காட்டினைச் சார்ந்தும், மருதம் வயல்வெளிகளைச் சார்ந்தும், நெய்தல் கடலைச் சார்ந்தும் உள்ள நிலப்பகுதிகளாகக் கொள்ளப்பெற்றிருக்கின்றன. இவையன்றி, பருவக் காலத்தின் மாறுபாட்டால், குறிப்பாக கோடை, வெம்மையின் பலனாக முல்லையும், குறிஞ்சியும் ஒருங்கே வறட்சியுற்று கடுமையான பாலைநிலமாக உருவாக்கம் கொண்டமையையும் பண்டைத் தமிழர் ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன.

மண் வளத்திற்கு ஏற்ப மன வளம் பெற்றிருந்த மக்கள் தாம் வாழ்ந்தும் வரும் இயற்கைச் சூழலுக்கும் உள்ளப் பண்பாட்டிற்கும் ஏற்ப வாழ்வியல் செயன்மைகளைக் கொண்டுள்ளமை உலக இயற்கையியல் மற்றும் மாந்தவியல் வல்லுநர்களால் புலப்படுத்தப்பட்ட உண்மையாகும். அவ்வகையில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்களைக் குறவன், குறத்தி எனவும், முல்லை நிலத்து மக்களை ஆயர் எனவும், மருத நிலத்துக் குடிகளை உழவன் எனவும் நெய்தல் நிலத்து மக்களை நுளையர் எனவும் அடையாளம் கண்டு அவர்களின் வாழ்வியல் செயன்மைகளை உரிப்பொருளாக புணர்தலும், புணர்தல் நிமித்தமும்; இருத்தலும், இருத்தல் நிமித்தமும்; ஊடலும், ஊடல் நிமித்தமும்; இரங்கலும் இரங்கல் நிமித்தமும் என்பனவாகக் கொள்ளப்பட்ட வாழ்வியல் அடையாளங்களை இன்றும் உணர முடிகிறது. அவ்வுணர்வுகளுக்கு ஏற்ற இயற்கைச் சூழல் அமைப்பு பிரெஞ்ச் அறிஞன் மாப்பசான் உணர்த்துவது போல அகவாழ்க்கையின் உந்து சக்திகளாக இயங்கிய தகைமையைத் தமிழர் வாழ்வியலை உற்று நோக்கக் கூடிய எவரும் உணர்ந்து கொள்ளலாம்.

அவ்வகையில் மலை சார்ந்த நிலத்து முதல் மக்களாகிய குறவன் குறத்தி என்ற வேடர் இன மக்கள் கொண்டிருந்த ஆடற் கலை வடிவங்களுள் 'வெறியாட்டு அயர்தல்' என்ற ஓர் ஆடல் வகை சங்க இலக்கியங்களாலும் பிற குறிப்புகளாலும் சுட்டப்பெறுகின்றன. 'வேலன் தைஇய வெறி அயர் களனும்' எனத் திருமுருகாற்றுப்படை இதனைச்சுட்டும். தமிழ்க் கடவுளாகிய சேயோன் முருகனை குறிஞ்சி நிலத் தெய்வமாகச் சுட்டுவது மரபு. அம்முருகோனும் அத்தகைய வெறியாட்டு அயர்ந்தமை பல்வேறு சங்க இலக்கியக் குறிப்புகளில் காணக் கிடைக்கிறது. இவ்வாடல் வகை கையில் வேல் ஏந்தி ஆடுதல், வில் அம்பு கொண்டு ஆடுதல், துள்ளிக் குதித்தும் தவ்வியும் ஆடுதல் என்பனவாம்.

இவ்வாடலில் குருவி ஒட்டியும் கிளி கடிந்தும் பாடிய ஆலோல ஒலிக் குறிப்புச் சொற்களை இடையிடையே கொண்டு, புணர்தல் - புணர்தல் நிமித்தம் என்ற பொருள் தழுவியதாகப் பாடப்பெற்று அதற்கேற்ப ஆடப்பெற்ற சூழலை உணர முடிகிறது. இவ்வாறு பண்டைத் தமிழகத்தில் மூத்த குடிமக்களாகிய குறிஞ்சி நில மக்கள் ஆடிய ஆடல் வடிவம் அவர்களுடைய புலம்பெயர்வு நிகழ்தலின்போது முல்லை நிலத்தையும் மருத நிலத்தையும், நெய்தல் நிலத்தையும், சார்ந்தபோது அவர்களால் ஆடப்பெற்றதாயினும், அவ்வாடல் வடிவங்களை அப்பிற நிலத்து மக்கள் தமக்குரிய ஆடல் வடிவங்களினின்றும் தாழ்ந்ததாகவே கருதி உள்ளனர். கால வளர்ச்சியில் பாலியல் உணர்வுகளை வெளிப்படையாகப் பேசுதல் பண்பன்று என்ற கருத்துச் சூழலில் வேடர் ஆடிய வெறியாட்டுகள் சற்றுத் தாழ்வுற்ற நிலையில் மக்களால் புறந்தள்ளப்பட்ட போக்கினையும் உணர முடிகிறது.

மேலும், வேடர், வேடுவர், குறவர் குறத்தியர் என்ற முதல் உண்மை நிலை மாறி நாடோடி இனத்தைத் தழுவிய சூழலில் குறவன் குறத்தி ஆட்டம் தமிழ்ச் சமுதாயத்தில் தாழ்வுற்று இருந்த பிரிவினராலே மேற்கொள்ளப்பட்டும் சுவைக்கப்பெற்றும் காப்பாற்றப்பட்டு வந்துள்ளதை அறிய முடிகிறது.

இத்தகைய பண்பாட்டுக் கூறுகளையெல்லாம் பாதுகாக்கும் ஒரு

ஆய்வு நிறுவனமாக 1981-இல் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்பெற்றது. இப் பல்கலைக்கழகத்தில் கலைப்புலத்தைச் சார்ந்த நாடகத் துறையினர் அருமையான ஆய்வுகளை எல்லாம் இத்தகைய பண்டை, இன்றைய நிகழ்த்துக் கலைகளில் நிகழ்த்தி உலகோரின் கவனத்தைத் தம்முடைய ஆய்வுகளால் ஈர்த்து வருவதை நாடு நன்கு அறியும். அத்தகைய ஒரு முயற்சியில் முனைவர் கே.ஏ.குணசேகரன் என்பார் மேற்கொண்ட ஒரு குறு ஆய்வுதான் இந்த 'குறவன் குறத்தி ஆட்டம்' என்ற இந்த ஆய்வு நூலாகும். தாமே ஒரு நிகழ்த்துக் கலைஞராகவும் நிகழ்த்துக் கலைஞரிடையே பெரும்பான்மை வாழ்வியல் காலத்தை கடத்தி வருபவரும் ஆகிய இவ்வாய்வாளர் மிகத் திறமையாக இத்தலைப்பினை நான்கு பெரும் குறுந்தலைப்புகளின் கீழ் தெளிவாக ஆய்வு செய்து இந்நூலைப் படைத்துள்ளார்.

குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் பற்றியும், குறவன், குறத்தி ஆட்ட அசைவுக் கூறுகள் குறித்தும், ஆட்டப் பாடல்கள் குறித்தும் குற்றாலக் குறவஞ்சியும் குறவன் குறத்தி ஆட்டமும் என்ற ஒப்பீட்டின் வழியும் களப்பணித் தரவுகளை முதன்மையாகக் கொண்டும் பகுப்பியல் ஆய்வு அணுகல் முறையுடன் செய்யப்பட்டிருக்கும் இவ்வாய்வு நூலை இப்பொருளில் அமைந்த அரிய ஆய்வுகளுள் ஒன்றெனக் குறிக்கலாம். இந்நூலை மிகச் சிறப்பான முறையில் அச்சேற்றி வெளிக்கொணர்ந்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை இயக்குநருக்கும் பதிப்புத்துறையைச் சார்ந்த அனைவருக்கும் என் இனிய நல்வாழ்த்துக்கள்.

அன்புடன்

**(சி.சுப்பிரமணியம்)**

# 1. குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள்

## முன்னுரை

### 0.1. குறவர் இனச் சமூகப் பின்னணி

குறவன் குறத்தி ஆட்டம், குறவர் இனத்தவர்களால் திருநெல்வேலி மாவட்டத்திலும், குறவர் இனத்தைச் சிறுபான்மை யாகவும், தாழ்த்தப்பட்ட இனத்தவராகிய பறையர், சக்கிலியர் போன்றவர்களைப் பெரும்பான்மையாகவும் கொண்டு பிற பகுதி களிலும் ஆடக் காண முடிகிறது. குறவன் குறத்தி ஆட்டம் என்று அனைவராலும் வழங்கப்பெறும் இந்த ஆட்டம் 'குருவிக்காரன் ஆட்டம்', 'குளுவமார் ஆட்டம்' என்று மதுரையிலும், திருநெல்வேலியிலும் முறையே அழைக்கப்படுகின்றது.

குறவன் குறத்தி ஆட்டம் குறவன், குறத்தி, கோமாளி, தோழி என நான்கு பாத்திரங்களைக் கொண்டு அமைகிறது. இந்நான்கு பாத்திரங்களும் சிறு சிறு சம்பவங்கள், சிறு சிறு கதைகள் ஆகியவற்றைப் பேசியும், பாடியும் ஆடுகின்றனர். இந்த ஆட்டம் விடிய விடிய இரவு வேலைகளில் நாட்டுப்புறங்களில் நடத்தப்படக் கூடிய ஒரு நாட்டுப்புற நிகழ்த்துக்கலை வடிவம் ஆகும். மேற் சொன்ன இந்நான்கு கலைஞர்களுக்கும் கரகாட்டத்தில் வாசிக்கும் நையாண்டி இசைக் கருவியாளர்களே துணை நிற்கின்றனர். இந்த ஆட்டம் கரகாட்டக் கலை நிகழ்ச்சியின் துணை நிலை ஆட்டங்களுள் ஒன்றாகும். எனவே, கரகாட்டத்திற்கு வாசிக்கப்படும் தவில், பம்பை, தமுக்கு, உறுமி, நாயனம் ஆகிய நையாண்டி இசைக்

கருவிகளே இதிலும் இடம் பெறுகின்றன. தொழிற் கலைஞர்கள் நிகழ்த்தும் இந்த ஆட்ட நிகழ்ச்சிக்கு ரூ. 800 முதல் 2,000 வரை கூலி பேசி ஆடச் செல்கின்றனர். சில இடங்களில் ஒவ்வொரு இசைக் கருவியும் இரண்டு வீதமும், ஆட்டக்கலைஞர்கள் இருவர் வீதமும் இடம் பெறக் காண முடிகிறது.

## 0.1.1. குறவர்கள்

'அறையுறு தீந்தேன் குறவர் அறுப்ப' [1] என்று எட்டுத் தொகையில் ஒன்றான அகநானூறு குறிக்கும்.

'வாங்கு அமை மென் தோள் குறவர் மட மகளிர்' [2] என்று கலித்தொகையில் குறிஞ்சிக் கலி கூறும்.

'அகலுள் ஆங்கண் அறியுநர் வினாயும்' [3] என்று குறிஞ்சிப் பாடல் வரிகள் காட்டும்.

'அறியுநர்' என்பதற்குப் பிறர் அறியவியலாதவற்றைக் குறியானுணரும் கட்டு வித்திவேலன் முதலிய அறிவோரை [4] என்று பொ.வே. சோமசுந்தரனார் உரை தருவார்.

**குருவியோப்பியும் கிளி கடிந்தும்**
**குன்றத்துச் சென்று வைகி**
**அருவி யாடியும் சுனை குடைந்தும்**
**..........................................**
**..........................................**
**குன்றவரும் கண்டு நிற்பக்** [5]

என்று சிலம்பின் குன்றக் குரவைப் பாடல் வரிகள் சுட்டும்.

மலைக்குன்றில் வாழும் வேடுவர் ஆன கண்ணப்ப நாயனாரை 'குன்றவர்' அதாவது குறவர் சமூகம் என்றே கொள்ளுமாறு பெரிய புராணம் [6] காட்டும்.

குறவர் இனத்தார் முற்காலத்தில் தென்னிந்திய மலையின மக்களாக இருந்துள்ளனர். இவர்களே குறும்பர்களோடும், வேடர் அல்லது வேடுவரோடும் தொடர்புடையவர்களாக இருந்திருப்பர் என்றும் கருத இடமுண்டு. [7]

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியங்களில் 'கு' என்பதற்குக் 'குன்று' என்றும், குன்றில் வாழும் மகளிரைக் 'குறமகள்' என்றும்பொருள் கொள்ளத் தக்க குறிப்புகள் காணப்படுகின்றன. [7ii]

'குறி' கூறும் போது குறத்தி அரிசி கொண்ட சொளகு, வெற்றிலைப் பாக்கு, பிரம்பிலிருந்து கீற்றி எடுக்கப்பட்டக் கூடை பின்னுவதற்கான ஓலைகள் ஆகியவற்றைத் தன் பக்கத்தில் வைத்திருக்கக் காணமுடிகிறது. குறி கேட்பவரின் கையைப் பிடித்துக் கீழே வைத்துள்ள சொளகுக்கு மேலே தூக்கியவாறு இசைப் பாங்குடன் தனக்குத் தெரிந்த எல்லாச் சிறு தெய்வங்களையும் வணங்கிக் குறத்தி குறி கூறுகிறாள். நேரங்களுக்குத் தக்கபடி குறத்தி குறி பார்ப்பவரின் கையைப் பிடித்துத் தம் கைக்கோல் கொண்டுத் தொட்டுக் கொடுத்த நிலையில் குறி கூறுகிறாள். மிகவும் தந்திரம் கூடிய அறிவோடு செய்திகளைக் கோர்வை செய்து குறிகேட்ப வர்க்குக் குறத்தி குறி கூறுவதைக் கவனிக்க முடிகிறது. [7iii]

இவை போன்ற குறவர் பற்றிய செய்திகள் மானுடவியல் அறிஞர் எட்கார் தர்ஸ்டன் அவர்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்றன.

குறவர் என்ற சொல்லுக்கு மலைக் குன்றுகளில் வாழ்பவர் என்று பொருள் கொள்ளலாம் என்பது மொழியியலார் கூறும் கருத்து. [8]

குறுவ நாடகம் பற்றிக் குறிப்பிட்டுப் பேசும் போது குறவர் இனத்தின் ஒரு பிரிவினரே குளுவர் என்று கூறி இவர்கள் பறவைகளை வேட்டையாடிப் பிழைக்கும் மலையின மக்கள் என்பார் அறிஞர் ஏ.என். பெருமாள். [9]

இவர்கள் இந்தத் தேசம் முழுவதும் வசிக்கும் ஒருவகைக் கள்ள சாதியார். இவர்கள் மொழி தமிழ் தெலுங்கு கலந்தது. இவர்கள் பல தொழில் செய்வர். இவர்கள், தோகை மலைக் குறவர், கள்ளக் குறவர், கூத்தாடிக் குறவர் எனப் பலவகைப்படுவர் என்று எட்கார் தர்ஸ்டன் துணை நின்று 'அபிதான சிந்தாமணி' [10] விளக்கம் தரும்.

திருநெல்வேலி மாவட்ட அரசினர் விவரச் சுவடியிலும் (Gazetteer), வட ஆற்காடு மாவட்ட அரசினர் விவரச் சுவடியிலும்

(Gazetteer), குறவர் இன மக்களின் தொகையைச் சுட்டுகின்றன.[11] மலையல்லாத இடங்களில் குறவர் இனம் அதிகமில்லை என்ற கருத்தும் நாம் கொள்ளுமாறு மக்கள் தொகைக் கணக்கு காட்டுகின்றது.

மேற்கூறிய செய்திகளிலிருந்து கீழ்க்காணும் கருத்துக்களைக் கொள்ள இடமுண்டு.

1. தமிழ் இலக்கியங்களும், ஏனைய குறிப்புச் சான்றுகளும் மலையில் வாழும் மக்களையே குறவர் என்று குறிப்பிடுகின்றன.

2. குறவர் மலைகளிலும், காடுகளிலும் வேட்டையாடிப் பிழைக்கும் தொழிலை முதன்மையாகக் கொண்டவர்கள். எனவே, இவர்களை வேடுவர் என்றும் குறிப்பிடக் காணலாம்.

3. குறி சொல்லுதல் என்பதும் குறவர் இன மகளிரிடையே ஒரு தொழிலாக விளங்கி வந்துள்ளது.

இன்று குறவர்கள் பறவை வேட்டையாடும் தொழிலுடை யோராகவும், கூடை முடைவோராகவும், நகரச் சுத்தம் செய்வோ ராகவும், பன்றி மேய்ப்போராகவும், மலையில் கிடைக்கும் பொருட்களை விற்போராகவும், சிறுபான்மைக் குறவர் இனப் பெண்கள் குறி சொல்வோராகவும் விளங்குகின்றனர்.

பார்வையாளர்களை இரசிக்க வைக்கும் நோக்கத்தில் நரிக் குறவர்களைப் போலத் தொழிற் கலைஞர்கள் தம் குறவன் குறத்தி ஆட்டத்தில் ஆடுகின்றனர்.[12] குறவரோடு தாழ்த்தப்பட்ட இனத்தார் கொண்டுள்ள இணைவு நிலைக் கலையை இங்கு சுருக்கமாக அறிய முயற்சிக்கலாம்.

குளுவர், குறவர் என்று சொல்லக் கூடியவர்கள் குறவன் குறத்தி ஆட்டம் ஆடுகின்றனர் என்று சொல்ல வருவதற்கே இந்த ஆய்வாளரால் இவ்வினத்தாரைக் குறிப்பிட நேர்ந்தது.

குளுவர், குறவர், குற்வர்களுள் வகை போன்ற விபரங் களுக்கு மானிடவியல் வரலாற்று ஆய்வு விரிந்த நிலை ஆய்வாக மேற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

### 0.1.2. தாழ்த்தப்பட்ட இனத்தாரில் குறவர் - பறையர் இணைந்தாடுதல்

மக்கள் மன்றங்களில் பாட்டும், கூத்தும் நிகழ்த்தப் பெறத் தொடங்கிய காலம் ஏறக்குறைய பதினெட்டாம் நூற்றாண்டு முதல் எனக் கருதலாம். இராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணக் கதைகள், பக்திக் கருத்துக்கள் ஆகியவை அக்காலக் கலை நிகழ்ச்சிகளில் மிகுந்த செல்வாக்கு கொண்டிருந்தன எனலாம். இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் காரணமாக, இந்து சமய மறுமலர்ச்சியும் தோன்ற ஏதுவாயிற்று. அதனால் அப்போது பல கோயில் விழாக்களும், அவ்விழாக்களில் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. தென்னிந்தியாவில் தெருக்கூத்து, யட்சகானம், வீதி நாடகம் ஆகியவையும், ராம் லீலாவும் நடைபெற்று வந்த காலம் அது. அத்தகைய மக்கள் கலை வளர்ச்சிக்குரிய வாய்ப்புக்கள் நேர்ந்த போதுதான் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட இனங்களைச் சேர்ந்த கலைஞர்கள் தங்களுக்குள் தனித்தனிக் குழுக்களை அமைத்துக் கொள்ள வாய்ப்புக்கள் உண்டாயின.

ஒரு கலைக்குழுவில் ஒரே தாழ்த்தப்பட்ட இனத்தார் என்ற நிலைமையும் மாறி, அக்குழுவில் பிற இனத்தாரும் சேர்ந்து கொள்ளும் நிலைமையும் ஏற்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு. தமிழ்நாட்டில் தெருக்கூத்துக் கலைக் குழுக்களைப் போலவே கரகாட்டம், ஒயிலாட்டம், ஒயில் கும்மி ஆட்டம் போன்ற கலைக் குழுக்கள் உருவாகி, சடங்கு நிகழ்ச்சிகளுக்கு அழைக்கப் படும் நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடும். அவ்வாறு கோயிலும், விழாவும், சடங்கும் சார்ந்த நிலையில் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சி களை நடத்திக் காட்டக்கூடிய குழுக்களில் இருந்த பல கலைஞர் களுக்கும் வாழும் வாய்ப்புக்கள் அமைந்தது. அவர்களில் தொழிற் கலைஞர்கள் என்ற பிரிவுகளும் காலப்போக்கில் தோன்றியிருக்க வேண்டும்.

அத்தகைய சூழ்நிலையில் அன்றைய ஊர்ப்புறங்களில் சமய நிறுவனங்களின் ஆதரவு பெற முடியாத சில கலைஞர்கள் தங்களுக்குள் புதிய கலைக்குழுக்களை ஏற்படுத்திக் கொள்ளவும் முயன்றுள்ளனர்.

## 1.0. வட்டாரங்களில் ஆட்ட நிகழ்வுகள்

வட்டாரத்துக்கு வட்டாரம் குறவன் குறத்தி ஆட்டம் நிகழ்கின்றது. இவற்றில் பெரிய வேறுபாடுகள் எவற்றையும் காண முடியவில்லை. எனினும் ஒரு சில கூறுகள் மட்டும் சில வட்டாரங்களில் மாறி உள்ளன.

திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர் ஆகிய மாவட்டங்களில் பெண்கள் தவிர, ஆடவர்களும் குறவன் குறத்தி ஆட்டத்தில் குறத்தியாகப் பெண் வேடமிட்டு நடித்துப் பாடி ஆடுகின்றனர்.

தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி, சேலம் ஆகிய பகுதிகளில் குறவனோடு இணைந்தாடும் குறத்தி வேடத்தில் பெண்கள் மட்டுமே பங்கெடுத்து ஆடுகின்றனர். சாமி திருவிழாக் களில் இந்த ஆட்டம் பரவலாக நடைபெறுகின்றது. கோவில்களும், கொண்டாட்டங்களும் அதிகம் நடைபெறும் காவிரி பாய்ந்து வளம் சேர்க்கும் தஞ்சாவூரில் இந்த ஆட்டத்திற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன.

கரகாட்டத்தின் துணை நிலை ஆட்டங்களுள் ஒன்றாக இருந்த இந்த ஆட்டம் இன்று தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் அரசியல் விழாக்கள், வேறு பொது விழாக்களில் நிகழ்த்தப் பெறுகின்றது. குறவன் குறத்தி ஆட்டம் இன்று தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சி போன்ற இடங்களில் இரண்டு குறவன், இரண்டு குறத்தி, இரண்டு கோமாளி எனும் கணக்கில் இடம் பெற்று விடிய விடிய நடைபெறக்கூடிய தனிநிலை ஆட்டமாகவும் அமைந்துள்ளது.

கயிறுகளால் இழுத்துக் கட்டப்பட்ட வட்ட வடிவ அரங்கில் இத்தனி நிலை ஆட்டத்திற்கு ஒலி பெருக்கிக் கருவிகள், மின் விளக்கு வசதிகள் ஆகியவற்றை பார்வையாளர்களான ஊரார் ஏற்பாடு செய்கின்றனர்.

மதுரைப் பகுதிகளில் குறிப்பாகக் கருமாத்தூர், உசிலம்பட்டி, தேனி, கம்பம், திருமங்கலம் ஆகியவற்றில் குறவன் குறத்தி ஆட்டம், ஏனைய பகுதிகளை விடக் குறைந்த அளவிலேயே அமையக் காணலாம். அவ்வாறு அமைத்தாலும் குறவன் குறத்தி

ஆட்டக் கலைஞர்கள் பாலுணர்வு உண்டாகும் வகையில் ஆட்ட அசைவுக் கூறுகள் செய்தாலோ, அல்லது வசனங்கள் பேசினாலோ, கலைஞர்கள் ஆட்டம் உடனடியாக நிறுத்தப்படுவதுடன் சம்பளமும் தரப்படுவதில்லை.[13] இதுபோலவே (நவீனயமயம் ஆக்கப்படாத) மரபு சார்ந்துள்ள பழமையான கிராமங்களில் பெரியவர்கள் வாழும் இடங்களில் பாலுணர்வு ஊட்டுவதான கலைகள் தடை செய்யப்படுகின்றன.

பல கிராமங்களிலும், பல நகர்ப்புறங்களிலும், நகர் சார்ந்த கிராமங்களிலும் இந்தக் குறவன் குறத்தி ஆட்டம் பாலுணர்வுபட அமையுமானால் தடையேதும் இருக்கவில்லை எனக் கள ஆய்வில் ஆய்வாளரால் நேரில் காண முடிகிறது. ஆடவர்கள் குறத்தி வேடமிட்டு ஆடும் வட்டாரங்களில் பாலுணர்வு ஊட்டுவதான வசனம், பாடல், உடலசைவுகள் இல்லை. இந்த ஆண் கலைஞர்கள் 40 வயதிற்கும் மேற்பட்டவர்களாகவே உள்ளனர். குறவனாக ஆடுவோரும், குறத்தியாகப் பெண் வேடமிட்டு ஆடுவோரும் ஓரளவு வயது முதிர்ந்தவர்களாகவே உள்ளனர். குறத்தி வேடமிட்டாடும் ஆண் கலைஞர் பெண் குரல் போல் பேசிடவும், பாடவும் செய்கின்றனர். குறத்தி வேடமிட்டாடும் ஆண் கலைஞர்களுக்குக் குடும்பம், பிள்ளை குட்டிகள் என்று இருக்கின்றார்கள். மதுரை வட்டாரத்தில் குறத்தி வேடத்தை அலிகள் சிலர் ஏற்று ஆட முன் வந்துள்ளனர். குறத்தி வேடமிட்டாடும் ஆண் கலைஞர்களிடமும், குறத்தி வேடமிட்டாடும் 'அலி' கலைஞர் களிடமும் பெண் குரலைப் போலச் செய்வதால் குரல் இயல்புநிலை குன்றிச் செயற்கைத் தன்மை பெற்றுள்ளது.

இசுலாம் இனம் சார்ந்த பெண்கள், கள்ளர், ராவ் இனத்தார், கவுண்டர் இனத்தார் ஆகியோரில் சிலர் குறத்தி வேடமிட்டு ஆடும் தொழிற்கலைஞர்களாகத் தஞ்சாவூரில் விளங்குவதைக் காண முடிகிறது. (காண்க: பின் இணைப்பு - 5 பிற இனத்தார் பட்டியல்.)

## 1.1. கலைஞர்கள், வாத்தியார்கள் பங்கு

தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு இடங்களிலும் குறவன் குறத்தி ஆட்டம் பரவலாக நடைபெறக் காணலாம். அறுவடைக் காலத்தில் சாமி விழாக்களில் நடைபெறும் இக்கலை வடிவத்தில் நையாண்டி மேளக் கலைஞர்கள் தவிர்த்து குறவன், குறத்தி, தோழி, கோமாளி என நால்வர் அவசியம்

இடம் பெறும் இதில் இரட்டையாகக் கலைஞர்கள் இடம் பெறுவதும் உண்டு. பாரம்பரியமான இக்கலை வடிவம் முதலில் சடங்கு முறையாகவும், காலப்போக்கில் தொழிற்கலையாகவும் பரிணமித்துள்ளது.

அண்மைக்காலம் வரை ஆடவர்களே குறத்தி வேடமிட்டு ஆடி வந்தனர். (இன்றும் கல்லடிதிடல், அளவிடங்கான் தாலுக்கா - இராமநாதபுரம் மாவட்டம்) பிச்சை எனும் ஆடவர் குறத்தி வேடமிட்டு ஆடுகிறார். குறத்தி வேடம் தாங்கிய பெண்கள் ஆட முன்வந்தது, சங்கரதாஸ் சுவாமிகள் நாடகம் பட்டி தொட்டி களெல்லாம் நடைபெறத் தொடங்கியதன் தாக்கத்தால் 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருக்கலாமெனக் கருதப்படுகிறது.

ஆசீர்வாதம், காந்தி அண்ணாவி போன்றவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்திலும் (இவர்கள் அனைவரும் இராமநாதபுரம் மாவட்டத்தைப் பூர்வீகமாகக் கொண்டோர் ஆவர்.), பழனியப்பன், முத்து எனும் முத்தையா போன்ற வாத்தியார்கள் புதுக்கோட்டை மாவட்டத்திலும்; அழகர்சாமி வாத்தியார், குமரன் போன்றோர் இராமநாதபுரம் மாவட்டத்திலும்; பச்சையப்பன், ஓம் பெரியசாமி, அங்குப்பிள்ளை போன்ற வாத்தியார்கள் மதுரை மாவட்டத்திலும்; செல்லையா, பரமசிவம் மற்றும் இவர்களது தந்தைமார்களும் இவர்களது உறவினர்கள் ஆகியோர் திருநெல்வேலி மாவட்டத்திலும் இக் குறவன் குறத்தி ஆட்டத்தின் குறிப்பிடத்தகுந்த வாத்தியார்களாக விளங்குகின்றனர். அண்மைக் காலத்தில் எந்த ஆசிரியர்களு மில்லாமல் இளைஞர்கள்தற்குறியாக குறவன் குறத்தி ஆட்டம் ஆட முன் வந்துள்ளனர், முன்வருகின்றனர். இடைக்காட்டூர் கருப்பையா, தஞ்சாவூர் மல்லிகா, கிளியூர் ஜெயா, பிச்சை முத்து போன்றோர் தாமாகவே ஆட முற்பட்டுள்ளனர். இவர்தம் ஆட்டங்களில் சினிமாத் தாக்கங்கள் நிறைய உள்ளன என்பதும் இங்கு கணக்கில் கொள்ளத்தக்கதாக உள்ளது.

தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் விளங்கும் இரண்டு குழுக்களை (பெரும்பாலும் பழமையில் உள்ள) முறையே தெரிந்து எடுக்கப்பட்டுள்ளது.

உடை ஒப்பனையின் இணைப்பில் காட்டியுள்ள தகர டப்பா, சிறிய அளவுள்ள பாவாடை, கட்டிய தாவணி, டிரவுசர், வெறுமனே

ஆன உடம்பு போன்றவையே முக்கிய உடைகள் ஆகும். தலையில் செருகிய பறவை முடி, கழுத்துப்பாசி, மணி போன்ற ஒப்பனைகள் பழமையின் எச்சங்கள் ஆகும்.

கொறவா, கொறத்தி, அட, அட, சாமியோவ் என்பன போன்ற பேச்சு மொழிகள், பின் இணைப்பில் காட்டப்பட்டுள்ள படியான குறவன் குறத்தி பேசிக் கொள்வது போன்ற பாடல்கள் அங்க அசைவுகள், பழமையான தெம்மாங்கு மற்றும் நையாண்டி இசைப் பாடல்கள் ஆகியன பழமையான குழுக்களைத் தேர்ந்தெடுக்கத் துணை செய்துள்ளன.

மேற்கண்ட பழமையான கூறுகள் கொண்டவற்றை அளவு கோலாகக் கொண்டு தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, நெல்லை ஆகிய பகுதிகளில் ஆட்டக் குழுக்களைக் கவனிக்கும்போது உடை ஒப்பனை அங்க அசைவுகள் ஆகிய இரண்டும் சினிமாத் தாக்கத்தால் மாற்றம் பெற்றுள்ளன. இம் மாற்றங்கள் தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி என முறையே படி நிலைகள் கொண்டுள் ளன. தஞ்சாவூரிலும், புதுக்கோட்டையிலும் அங்க அசைவுகள் (Sex) பாலியல் உணர்வுகளைத் தூண்டும் வகையில் அமைகின்றன. ஏனைய பிற இடங்களில் பாலியல் உணர்வு படப் பேசும் பேச்சுக்கள், பாடல்கள், அங்க அசைவுகள் ஆகியவற்றைப் பொதுமக்கள் அங்கீகரிக்கப்பதில்லை. தஞ்சாவூர் பகுதிக் கலைஞர்கள் இப்பகுதி களுக்குப் போகும்போது கவனமாக ஆடிப்பாடி வர மனங்கொண்டு செல்கின்றனர்.

## 1.2 வாழ்க்கைக்கான கலை

குறவர்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் பாசி, மணி, ஊசி மற்றும் விலங்கினப் பொருட் களைக் கொடுத்து ஆட்டம் ஆடியும், பாட்டுப் பாடியும் மக்களை மகிழ்ச்சிப்படுத்தி அவர்கள் தரும் உணவுப் பொருட்களை வாங்கி உண்டனர். அந்தக் காலக்கட்டத்தில் இந்த இன மக்களின் கலை தங்களின் பொருட்களைப் பண்டமாற்றுச் செய்து கொள்ளவும், சில வேளைகளில் விற்பனை செய்து கொள்ளவும், பல நேரங்களில் பசியைப் போக்கிக் கொள்ளவும் பயன்பட்டது. குறவன் குறத்தி ஆட்டப் பாடல்களில் இது இடம் பெறக் காணலாம்.

குறவன் : பட்டுநூல் காரத் தெருவுமாச்சு
பசி பட்னி தீக்கலாச்சு - அய்யா

குறத்தி : சோறு போடுன்னு சொன்னா
சொரக் குடுக்கை ரொம்பிப் போகும் - அம்மா

குறவன் : கஞ்சி போடுன்னு சொன்னா
கைப் போவானி ரொம்பிப் போகும். [14]

இந்தப் பாடல் வரிகள் மேற்சொன்ன கருத்தை உறுதிப் படுத்தத் துணை செய்வனவாய் உள்ளன.

நாட்டுப்புற ஆட்டங்களை ஆய்வு செய்துள்ள ஆய்வாளர் ஆட்டக் கலையின் வளர்ச்சி நிலைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளது இங்கு எண்ணுதற்குரியதாகும்.

1. போலிச் செயல் மந்திர முறை நோக்கத்தில் ஆட்டம் அமைதல்.

2. தொழில் பயிற்சி பெறும் நோக்கத்தில் ஆட்டம் உருவாதல்.

3. பொழுது போக்கும் நோக்கத்தில் ஆட்டம் நடைபெறல்.

4. சமூகத் தேவைக்கான ஆட்டம் நிகழ்த்தப்படல். [15]

மேற்சொன்னவற்றில் 'போலிச் செயல் மந்திர முறை நோக்கத்தில் ஆட்டம் நடைபெறல்' எனும் படிநிலை தவிர்த்தப் பிற நிலைகள் யாவும் குறவன் குறத்தி ஆட்டத்தில் விளங்கக் காணலாம். எனினும், 'தொழில் பயிற்சி பெறும் நோக்கத்தில் ஆட்டம் உருவாதல்' எனும் நிலையே இங்கு பொருத்தமாகிறது. குறவர்களின் மலைப்பொருள்களான பாசி, மணி, பவளம் போன்றவைகளை மக்களிடம் விற்பனை செய்து பிழைக்க இவர்களின் ஆட்டக்கலை துணை செய்வதாக அமைந்துள்ளது.

இன்றைய நிலையில் தொழிற்கலைஞர்கள் கூலி பேசி ஆடும் ஆட்டமும் இந்தப் படிநிலையில் ஒத்துவரக் காணமுடிகிறது.

இந்த ஆட்டக்கலை இன்று பல இடங்களில் பொழுது போக்கும் நோக்கத்தில் ஆட்டம் நடைபெறல் எனும் நிலையையே பார்வையாளர் கொண்டுள்ளனரேயன்றி, 'சமூகத் தேவைக்கான ஆட்டம் நிகழ்த்தப்படல்' எனும் நிலைக்குக் கலைஞர்களோ, பார்வையாளர்களோ இன்னும் வளராதுள்ளனர் என்றே கொள்ள நேரிடுகிறது.

## 1.3. தொழிற்கலை

நாம் ஏற்கனவே கண்டுள்ளபடி முன்னர் குளுவர் எனும் குறவர் இனத்தவர் ஆடினர்.[16] பின்னர் குளுவர்களும் பிற இனத்தவர்களும் இதனைத் தொழிற்கலையாகக் கொண்டு இன்றளவும் நிகழ்த்தி வருகின்றனர். பிற இனத்தவர் எனும்போதும் தாழ்த்தப்பட்ட இனத்தில் பல பிரிவினரான பறையர், சக்கிலியர் போன்றவர்களே பெரும்பாலும் பங்கு பெறுகின்றனர். உறவு நிலையில் பெண் கொடுத்தல், பெறுதல் என்பது குறவர், பறையர், சக்கிலியர் ஆகியோரிடையே இல்லை என்பதும் இங்கு எண்ணுதற்குரியது. ஆயினும் மூன்று சாதியினரும் தாழ்த்தப்பட்ட சாதியினரே என்பது அறியலாகும் செய்தி ஆகும். குளுவர்கள் குறவர் இனம் சார்ந்தவர்கள். குளுவர்களைக் குறவர்கள் என்றே மக்களும் அழைக்கின்றனர். இக்குளுவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டுமே தொழிற் கலைஞர்களாக (சுமார் 200 பேர்கள்) விளங்குகின்றனர். இவர்களுள் 'குறத்தி' வேடமிட்டு நடித்தாடும் பெண்களே அதிகம் உள்ளனர். ஆட்டக் கூலியாக ஆடவர்கள் ஒரு நிகழ்ச்சிக்கு ரூ. 50 முதல் 100 வரையும், பெண்கள் ரூ. 80 முதல் 200 வரையும் பெறுகின்றனர். எனவே, குறவன் குறத்தி ஆட்டத்தில் பங்கு கொள்ளக் குளுவப் பெண்கள் நெல்லை மாவட்டத்தில் மட்டும் அதிகம் உள்ளனர்.

நெல்லை இரயிலடியில் உள்ள சிறு சிறு குடியிருப்புக்கள், தாமிரபரணி ஆற்றை ஒட்டி அமைந்துள்ளன. எனினும் குற்றாலம், தென்காசி பகுதிகளில் குளுவர்கள் இன்னும் பாய்முடைதல், கூடை முடைதல், பன்றி மேய்த்தல், மலை வேட்டை செய்தல் போன்ற தொழில்களைச் செய்து வாழ்கின்றனர்.[17]

## 1.4. பிற தொழில்கள்

திருநெல்வேலியில் ஆடும் குளுவ இனத் தொழிற் கலைஞர்கள் ஆட்ட நிகழ்ச்சி அல்லாத பிற நேரங்களில் கூடை, சுளகு, படல் போன்றவற்றை மூங்கில் நார் கீற்றுக்களாலும், சில வகைக்

கோரைப் புல்களாலும் பின்னித் தொழில் செய்து பிழைக்கின்றனர். சில பெண்கள் வீடுகளில் வீட்டு வேலை செய்வோராக உள்ளனர். ஆடவர்களுள் பலர் பன்றிகள் மேய்க்கின்றனர். பன்றிச் சாணங்கள் திரட்டி உரம் வேண்டுவோர்க்கு விற்பனை செய்கின்றனர். சிலர் நகரச் சுத்தம் செய்வோராக பஞ்சாயத்து மற்றும் நகரப் பஞ்சாயத்து அலுவலகங்களில் மாதச் சம்பளத்துக்குப் பணியாளர்களாக உள்ளனர்.

குளுவ ஆடவர்களில் சிலர் தொழிற் கலைஞர்களை வெவ்வேறு பகுதிகளிலிருந்து வரவழைத்து நிகழ்ச்சி ஏற்படுத்திக் கொடுக்கும் இடைத்தரகர்களாக அமைகின்றனர். [18] குறவன் குறத்தி ஆடும் குளுவர் அல்லாத பிற இனத்துத் தொழிற் கலைஞர்கள் நிகழ்ச்சி இல்லாத பிற காலங்களில் கூலி விவசாயிகளாக உள்ளனர். வேறு தொழில் ஏதும் செய்யத் தெரியாத கலைஞர்களும் உள்ளனர். இவர்கள் தங்கள் நிகழ்வுக்காலம் (சீசன்) [19] வரும் வரை தங்களிடம் உள்ள பொருள்களை அடகு வைத்து, கடன் பெற்று, விற்றும் பிழைப்பு நடத்துகின்றனர்.

## 1.5. பேசும் மொழி

இவர்கள் பேசுவதில் மரியாதை குறைந்த சொற்களும், இடக்கரடக்கலாகச் சொல்ல வேண்டிய சொற்கள் வெளிப்படையான மொழிகளாகவும் அமையக் காணலாம்.

அடி குறத்தி, அட குறவா, மூனு புருசன் கேக்குறாளே, ஏ புருசா, அறிவு கெட்டுப் பேசாதடா போன்ற மதிப்புக் குறைந்த சொற்கள் [20] குறவன் குறத்தியிடையே அமைகின்றன.

**‘குசு நங்கு நங்குன்னு போட்டவளே**
**மேவூட்டுக்கும் கீ(ழ்) வூட்டுக்கும்**
**பூல் பூல்னு போட்டவளே’ [21]**
என்றும்,

**‘வெரட்டி விட்டான் ராமசாமி**
**வயித்துப் புள்ளை யோட’ [22]**

என்றும்,

இவை போன்ற நாகரிகம் அற்ற பேச்சு மொழிகள் இந்த ஆட்டக் கலைஞர்களுடைய ஆட்டப் பாடல்களிலும் பயன்படுத்தப்

படுகின்றன. மேலும், ஏ! மாவோவ், யோவ், டேய், போடா போன்ற உறவு முறை விளிப்புச் சொற்களும்[23] மரியாதையற்றுக் காணப்படு கின்றன.

அவையோரை அழைக்கும்போது, 'சாமியோவ், பாருங்க சாமி, அய்யா' போன்ற மரியாதையான சொற்களையே கவனமாகப் பயன்படுத்துகின்றனர்.

ஆட்ட நிகழ்ச்சி தவிர்த்தப் பிற நேரங்களில் இக்கலைஞர் களுடன் பழகும் நபர்களை ஏ சாமி, ஏய் நீ, என்ன சாமி நீ இப்படிக் கேக்குறே போன்ற சொற்களையே கூறுகின்றனர். குளுவ இனத் தொழிற் கலைஞர்களிடம் இவ்வித வழக்கத்தினைக் காண முடிகிறதேயன்றித் தாழ்த்தப்பட்ட இனம் சார்ந்த பிற இனத் தொழிற் கலைஞர்கள் மரியாதையான வாங்க, போங்க போன்ற சொற்களையே தங்களின் பேச்சு மொழிகளில் பயன்படுத்துகின்றனர்.

இக்கலைஞர்கள் கலை நிகழ்ச்சி தவிர்த்த பிற நேரங்களில் ஒருவருக்கொருவர் பழகிக் கொள்ளும் வேளையில் இயல்பாகக் கொச்சை மொழிகளைப் பேசிக் கொள்கின்றனர். இவர்களிடம் பழகும்போது களப்பணியில் கிடைத்த இந்த அனுபவத்தைச்[24] சான்றாக இங்கு சொல்ல முடியும்.

## 1.6. ஆட்டத்தில் பங்கு பெறுவோர்

வாழ்க்கையோடு இயைபு பெற்றிருந்த குறவன் குறத்தி ஆட்டத்தில் பெண்களின் பங்கு இருந்தது. அதற்குப் பின்னர் இக்கலை தொழிற் கலையாக மாறி மாறி வளரத் தொடங்கிய கால கட்டத்தில் பெண் வேடத்தை ஆடவர்களே ஏற்று நிகழ்த்தினர். தொழிற் கலையின் வளர்ச்சி நிலையில் பெண் வேடத்தை (குறத்தி)ப் பெண்களே எடுத்து நிகழ்த்துகின்றனர்.

குறவன் குறத்தி ஆட்டத்தில் பொதுவாகக் குறவன், குறத்தி, கோமாளி ஆகிய மூவர் இடம் பெறுகின்றனர். சில வேளைகளில் நையாண்டி இசைக் கருவியாளர்களும் பார்வையாளர்களாகப் பங்கெடுத்துக் கொள்கின்றனர். இவர்களது பங்கு வேடமின்றிப் பாடலின்றிச் சிறு சிறு வசனங்கள் பேசுவதாக மட்டும் அமைகிறது. தர்க்கம், ஏசல் ஆகிய நேரங்களில் இவர்கள் வருகை அமையும்.

சில நேரங்களில் இசைக் கருவியாளர்களின் உறவினர்களே ஆடுவோராக அமைவதுண்டு. தஞ்சையில் இராசேந்திரன் [25] என்னும் குறவன் ஆட்டக் கலைஞர் தன் கூடப் பிறந்த சகோதரியுடன் குறத்தி வேடமிட்டு நிகழ்ச்சிகளுக்குச் செல்கின்றார். இதுபோலவே ரெட்டிபாளையம் (தஞ்சாவூர்) கிராமத்தில் வாழும் நையாண்டி இசைக் கலைஞர்களுள் தவில் இசைக் கலைஞர் கரகம் ஆடும் ஒருத்தியைத் தன் மனைவியாக ஆக்கியுள்ளார். தவில் கலைஞரின் தந்தை நாயனக் கலைஞராக உள்ளார். [26] இவ்வாறு ஒரு குடும்பத் திலேயே பல்வேறு கலைத் தொழில் செய்யும் குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் பங்கு பெறுகின்ற நிலையினை இத்தொழிற் கலை உலகில் பரவலாகக் காண முடிகிறது.

## 1.7. பயிற்சி நிலை

குறவன் குறத்தி ஆட்டம் ஆடப் பயிற்சி எடுத்துக் கொள்ளும் கால அளவு ஒரு வருடத்திலிருந்து இரண்டு வருடங்கள் வரை ஆகும். இந்த ஆட்டக் கலையை சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்கள் ஆடவர்களாகவே உள்ளனர். இந்த ஆசிரியர்கள் கரகாட்டம் மற்றும் கரகாட்டத்தின்போது ஆடப்படும் ஏனைய தொழிற் கலைகள் யாவும் கற்றுக் கொடுக்கும் திறன் கொண்டவர்களாக விளங்குகின்றனர். ஆட்டப் பாடல்கள், ஆட்ட அசைவுக் கூறுகள் ஆகியன ஆசிரியர் களால் கற்றுக் கொடுக்கப்படும் அளவுக்குப் பேசும் வசனங்கள் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை. எனினும் சமயோசித முறையில் பேசிக்கொள்ளும் பயிற்சி இந்த ஆசிரியர்களால் பயிற்சியாளர் களுக்கு அளிக்கப்படுகிறது. ஆட்டப் பயிற்சிகள் பெரும்பாலும் நாட்டுப்புறங்களில் இரவு நேரங்களிலேயே நடைபெறுகின்றன. பெண்களுக்கு எட்டு வயது தொடங்கி பதினைந்து வயதுக்குள்ளாக வும், ஆடவர்க்குப் பதினைந்து வயதிலிருந்து இருபது வயதுக் குள்ளாகவும் ஆசிரியர்கள் பயிற்சி அளிக்கின்றனர்.

இப்பயிற்சிக்காக பயிற்சி பெறுபவர்கள் ஆசிரியர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபாய் 250 வரை அளிக்கின்றனர். சிலர் தங்கள் வீடுகளில் தங்கச் செய்து பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்கின்றனர். அரங்கேற்றத்தின் போது வேட்டி, துண்டு மற்றும் இதரச் செலவுகள் அளித்து ஆசிரியர் பாராட்டப்படுகின்றார். அவரவர் வசதிக்கேற்றாற் போல் ஆசிரியர்கள் சன்மானம் பெற்றுக் கொள்கின்றனர்.

குறவன் குறத்தி ஆட்டம் ஆடப் பயிற்சி ஏதும் மேற் கொள்ளாமல், தற்குறியாகவே அதாவது பார்த்த அனுபவத்திலேயே ஆட சிலர் முன்வருகின்றனர்.[27] இதனால் முறையான ஆட்ட அசைவுக் கூறுகள் இவர்களிடம் அமையாமல் போகின்றன. கோமாளிப் பாத்திரங்கள் செய்யும் சிலரும் இதே நிலையினைக் கொண்டுள்ளனர்.

குறவன் குறத்தி ஆட்டத்திற்கு வாசிக்கும் நையாண்டி இசைக் கலைஞர்களுக்குப் பயிற்சிக் காலம் ஒரு வருடத்திலிருந்து மூன்று வருடங்கள் வரை ஆகின்றது. பம்பை, உறுமி, தமுக்கு ஆகிய இக் கருவிகள் வாசிப்பதற்கு ஒரு வருடம் போதுமானதாகிறது. ஏடறியேன் எழுத்தறியேன் என்னும் நிலை கொண்ட இக் கலைஞர்கள் கேள்வியறிவு கொண்டே பயிற்சி மேற்கொள்கின்றனர். எழுத்தறிவு இருக்குமேயானால் இவர்களின் பயிற்சிக்கால அளவு குறைய வாய்ப்புண்டு.

## 1.8. பிற ஆட்டங்கள் தெரிந்த நிலை

குறவன் குறத்தி ஆடும் இத்தொழிற் கலைஞர்கள் கருப்பாயி ஆட்டம், மூக்காயி ஆட்டம், ராசாராணி ஆட்டம் போன்ற துணைநிலை ஆட்டங்கள் பலவற்றைத் தெரிந்து வைத்துள்ளனர். இவை தவிர்த்த பிற சடங்குமுறை ஆட்டங்களான கும்மி, ஒயில் கும்மி, மாரடிப்பு போன்ற ஆட்டங்களையும் தாம் ஆடும் ஆட்டங்களின் இடையிடையே இணைத்துக் கொள்ளவும் தெரிந்து வைத்துள்ளனர்.

இவ்வாறு தெரிந்து வைத்துள்ளமையால் இவர்கள் ஆடும் குறவன் குறத்தி ஆட்டத்தில் நேரம் போக்கிக் கொள்ளவும், இரசனை முறையை வேறுபடுத்திக் கூட்டிக் கொள்ளச் செய்யவும் பிற ஆட்டக் கூறுகள் பாடலிசைக் கூறுகள் ஆகியவற்றை இணைத்துக் கொள் கிறார்கள்.

*'கூட்டம் ரொம்பக் கூடிருச்சு - நம்ம*
*கொறவர் கொலம் ஆட்டம் பாக்க*
*ஆளு வந்து கூடிருச்சு ஏனன்னானே - நம்ம*
*அழகர்சாமி செட்டப் பாக்க னானன னன்னானே'* [28]

இவை குறவன், குறத்தி ஆட்டப் பாடல் வரிகள் ஆகும்.

'கூட்டம் ரொம்பக் கூடிருச்சி - நம்ம
ராசாராணி ஆட்டம் பாக்க
ஆளு ரொம்பக் கூடிருச்சு ஏனன்னானே - நம்ம
ஆசிர்வாதம் பார்ட்டியப் பாக்க னானன னன்னானே.'[29]

என்று இவையே ராசாராணி ஆட்டத்திலும் இடம் பெறுவதைக் காணலாம். இந்நிலை எல்லா ஆட்டக் கலைஞர்களும் எல்லா வகை ஆட்டக் கலைகளிலும் இணைத்துக் கொள்வதை தாழ்த்தப்பட்ட இனம் சார்ந்த தொழிற் கலைஞர்களிடையே விளங்குகின்றது. இக்கலைஞர்கள் பல கலைகளைத் தெரிந்து ஈடுபடுவதால் இந்த வகைக் கொடுக்கல் வாங்கல் நிலை காணப்படுகிறது.

குறவனும், குறத்தியும் கைகோர்த்து நின்ற நிலையில் ஆடுகளத்தைத் தொட்டு வணங்கி முன்னும் பின்னும் ஐந்தடி முதல் பத்து அடிகள் வரை இணைந்து நடந்து காலடி வைப்புச் செய்து தொடக்க நிலை ஆட்டம் ஆடுவதை ராசாராணி ஆட்டம், மூக்காயி ஆட்டம் போன்ற ஆட்டங்களிலும் காணலாம்.

## 1.9. குடும்ப உறவு நிலை

குறவன் குறத்தி ஆடும் ஆட்டக் கலைஞர்களின் குடும்ப உறவு நிலையைக் கவனிக்கும் போது எளிமையான, இனிமையான வாழ்க்கை நடத்துபவர்களாக உள்ளனர். இவர்களது வாழ்க்கை அவ்வப்போது பொருளாதாரச் சூழ்நிலைகளால் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது.

கள ஆய்வில் கிடைத்த செய்திகளின்படி 'சீசன் நேரம்' என்று இக்கலைஞர்கள் கூடும் அறுவடைக் காலத்தின் போதும், விதைப்புக் காலத்தின் போதும் இவர்களது குடும்பம் பொருளாதார நிலையில் சீராக உள்ளது. பொருளாதார நிலையில் சற்றுச் சீர் நிலை ஏற்படும் இக்கால கட்டத்தில் குடும்ப உறவு நிலையில் சீர்கேடு ஏற்பட வாய்ப்பாகவும் அமைய நேரிடுகிறது.

சீசன் நேரத்தில் அடிக்கடிப் பல ஊர்களுக்குப் பயணம் செய்தும், பல பெண் கலைஞர்கள் ஆண் கலைஞர்களோடும், பல ஆண் கலைஞர்கள் பெண் கலைஞர்களோடும் கலந்து கலை நிகழ்ச்சி செய்யும் வாய்ப்பு அமைகிறது. இவர்கள் இரவு வேளைகளில் பல இடங்களில் தங்க நேரிடும் காரணங்களால் தவறான ஒழுக்கங்கள்,

தவறான உறவுகள் இவர்களிடையே ஏற்பட வாய்ப்பாகின்றது. இதனால் குடும்ப உறவில் பாதிப்பு நிலை ஏற்படுகிறது.

சில இளைய பெண்கள் முதிய ஆடவருடன் திருமணம் செய்து கொள்கின்றனர். [30] ஏற்கெனவே திருமணம் முடித்த ஆடவர் ஆடவந்த பெண்களை வைப்பாட்டிகளாக வைத்துக் கொள்ளவும், சில நேரங்களில் மறுதாரங்களாக ஆக்கிக் கொள்ளவும் செய்கின்றனர். இக்காரணங்களால் கலைஞர்களின் இயல்பான குடும்ப உறவு நிலைகள் அடிக்கடிச் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன.

இந்த ஆட்டத்தில் இளம் பெண்களே தொழிற் கலைஞர் களாக விளங்குவது பெரும்பான்மையாக உள்ளது. இந்த இளம் பெண்களின் சம்பாத்தியக் கரங்களை இன்னொரு இளைஞனுக்குத் திருமணம் செய்து கைப்பிடிக்கச் செய்ய ஏழ்மையில் உள்ள கலைக்குடும்பத் தலைவன் தயாராக இல்லை. எனவே, திருமணத்தைத் தள்ளிப் போடுகிறான். உரிய வயதாகியும், திருமணம் பெற்றோரால் தள்ளிப் போடப்படுவதை உணரும் ஆட்டக்கலை இளம் பெண்கள் தாங்களாகவே கணவனைத் தேடிக் கொள்ளும் பொறுப்பினை எடுத்துக் கொள்கின்றனர்.

சில தொழிற் கலைஞர்களது குடும்பங்களில் இருவரோ அல்லது இருவருக்கும் மேற்பட்டவர்களோ இணைந்து தொழில் செய்ய வருவதுண்டு. ஏனைய கலைஞர் குடும்பங்களைவிட இதுபோன்ற நிலைக் குடும்பங்களில் உறவு நிலைக் கொஞ்சம் சுமூகமாகவும், சுமாராகவும் விளங்கக் காண முடிகிறது.

இத் தொழிற்கலைஞர்களின் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றனர். எப்படியும் தன் தொழிலைத் தன் பிள்ளைகளுக்குப் பயிற்றுவித்து கஷ்டப்படும் நிலையை அளிக்கக்கூடாது என எண்ணுகின்றனர். சிலர் தம் எண்ணப்படிப் பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்ப்பினும் குடும்பத்தின் பொருளாதாரச் சிக்கல் என்ற காரணத்தால், இன்னும் இரண்டு கைகள் உழைத்துப் போட வேண்டும் என்ற வாழ்க்கைத் தேவையால் படிக்கும் பிள்ளைகளையும் கலைத் தொழிலுக்கு இழுத்துப் போடுகின்ற நிலையினை நேரில் கள ஆய்வில் காண முடிகிறது. [31]

இளவட்டக் கலைஞர்கள் காலம் பொறுத்துக் கல்யாணம் செய்து கொள்வதோ, பொருளாதார ரீதியைச் சரி செய்து கொண்டு திருமணம் செய்து கொள்வதோ இல்லை.

கலைத் தொழிலில் சம்பாதித்து வந்த பெண் கலைஞர்களைக் கலைத் தொழில் அல்லாத பிற இளைஞர்கள் திரும்மணம் செய்ய முன் வருவது குறைவாக உள்ளது. அவ்வாறு திருமணம் நடைபெறினும் திருமணத்திற்குப் பின் பெண் கலைஞர் மீண்டும் கலைத் தொழில் செய்யச் செல்வதில்லை. பெண் கலைஞர் விரும்பினும் கணவரின் அனுமதி கிடைக்கப் பெறுவதில்லை. [32]

சிறு வயது முதல் இளம் வயது வரை ஆட்டத் தொழில் ஒன்றையே தெரிந்து வைத்திருக்கும் இந்த வகைத் தொழிற் கலைஞர்களில் மணமான பெண்கள் வேறு தொழில்களைச் செய்யச் செல்வதில்லை. பலர் பாராட்ட ஆட்டம் ஆடிய பெருமையை மனத்துள் நினைத்துக் கொண்டு ஆட்டம் இல்லாத காலங்களில் பிற கூலி வேலைக்குச் செல்வது மதிப்பு குறைவு என்று கருதிச் செல்லாமல் இருப்பதும், குடும்ப வருமானம் குறைந்து குடும்ப உறவு நிலையில் சிக்கல்கள் ஏற்பட ஏதுவாகின்றன.

பெரும்பாலான தொழிற் கலைஞர்களின் குடும்பங்களில் பெண் பிள்ளைகள் ஆட்டக் கலைஞர்களாகவும், ஆண் பிள்ளைகள் தோலிசைக் கருவிகள், நாயனம் ஆகியவற்றை வாசிக்கும் கலைஞர்களாகவும் உள்ளனர். தொழிற் கலைஞர்கள் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் இருக்கும் குடும்பங்களில் அக்குடும்பத் தலைவர் அல்லது குடும்ப வருமானத்தைச் செலவு செய்யும் தகுதி பெற்றவர் ஆட்டத் தொழிலுக்கான இடைத்தரகராகவும் (Agent) விளங்குகின்றார். [33]

## 1.10. பழக்க வழக்க நிலை

ஆண் தொழிற் கலைஞர்கள் பொதுவாக வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டை, வெள்ளைத் துண்டு ஆகியவற்றையே அணிய விரும்புகின்றனர். நாட்டுப்புறத் தொழிற் கலைஞர்களான இவர்களின் சமூக மதிப்பை உயர்த்திக் கொள்ள வேண்டிச் செவ்வியல் கலைஞர்களின் நடை, உடை பாவனைகளைப் பின்பற்றுகின்றனர். [25]

நாட்டுப்புறங்களில் நாட்டாண்மைகளையும், நிகழ்ச்சி அமைத்துக் கொடுக்க வாய்ப்புத் தரும் ஊர்ப் பெரியவர்களையும் இரு கை கூப்பி வணங்குவது வழக்கம். தவிர்க்க இயலாமல் பல இயல்பான நபர்களைச் சந்திக்கும் போதும் அவர்களுக்கு இரு கை கூப்பி வணங்கும் வழக்கத்தை இன்றளவும் இக் கலைஞர்கள் கொண்டுள்ளனர். ஆயினும் மூத்த கலைஞர்கள், சொல்லிக் கொடுத்த ஆசான்கள் ஆகியோரைச் சந்திக்கும்போது அவர்கள் தம் கால்களில் விழுந்து வணங்கி ஆசி பெறுகின்றனர்.

ஆண் கலைஞர்களும், பெண் கலைஞர்களும் பொதுவாக வெற்றிலை பாக்குப் போடும் வழக்கம் கொண்டுள்ளனர். இவர்களுள் பெரும்பாலோர் புதுக்கோட்டை, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, திருச்சி போன்ற பகுதிகளிலேயே காணப்படுகின்றனர். ஆண் கலைஞர்களில் பலர் புகைப் பிடித்தலைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

தொழில் செய்யச் செல்லும் இடங்களில் கலைஞர்கள் தங்களுக்குள் மட்டுமே பேசிக் கொள்வதற்காக வேண்டிச் சில குழூஉக்குறிச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். [35] இந்த ஆய்வறிக்கையின் பின் இணைப்பில் இக்குழூஉக்குறிச் சொற்கள் தரப்பட்டுள்ளன. பெரும்பாலும் இக்குழூஉக்குறிச் சொற்கள் சம்பளம், பழக்க வழக்கங்கள், கலை நிகழ்ச்சி, கலைஞர்கள், பார்வையாளர்கள் ஆகியவற்றையே விளக்குகின்றன.

கடைகளில் விலை கொடுத்து வாங்கிக் கொள்ளும் முகப்பூச்சுப் பொடிகளைச் சிறு சிறு டப்பாக்களில், அதாவது தகரத்தாலான புட்டிகளில் கலைஞர்கள் வைத்துக் கொள்கின்றனர். ஒப்பனை செய்து கொள்ளப் பயன்படுத்தும் கண்ணாடி, சீப்பு, தேங்காய் எண்ணெய், சோப்பு போன்ற பொருள்களைக் கலைஞர்களே தங்கள் பொறுப்பாக வைத்துக் கொண்டு நிகழ்ச்சிகளுக்குச் செல்கின்றனர். சில வேளைகளில் ஆடவர்க்குப் பெண்டிரும், பெண்டிற்கு ஆடவரும் வேடமிட்டுக் கொள்கின்றனர். ஒப்பனைப் பொருள்களான ஊக்கு, பித்தான், ஜிகினா போன்றவற்றைத் தங்கள் உடைகளில் பளிச்சிடும் வண்ணம் தாங்களே ஓய்வு நேரங்களில் தைத்துத் தயார் செய்து கொள்கின்றனர்.

கலை நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் கலைஞர்களின் சம்பளம், போக்குவரத்துச் செலவு நீங்கலாகப் பேசப்படுகிறது. கலைநிகழ்ச்சி

முடிந்ததும் இடைத்தரகராக இருந்தவரோ அல்லது கலை நிகழ்ச்சி பேசிக் கூட்டி வந்த கலைஞரோ சம்பளத்தைப் பகிர்ந்தளிக்கின்றனர். சம்பளம் பகிர்ந்து கொள்ளும் சமயங்களில் சில கலைஞர்களிடையே மனவேறுபாடுகள் ஏற்படுகின்றன.

குறவர்கள், தாழ்த்தப்பட்ட இனம் சார்ந்தவர்கள் ஆகியோர் பங்குபெறும் இந்தக் குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்களுள் நாயனக் கலைஞர்களை மதிக்கும் அளவுக்கு ஏனைய ஆட்டக் கலைஞர்களை ஊரார் பெரிதாக மதிப்பதில்லை. ஊர் இளைஞர் களுள் சிலர் பெண் கலைஞர்களுக்கு வேண்டிய சலுகைகளைப் பெறத் துணை நிற்கின்றனர். கலைஞர்களது ஆட்டம் சிறப்பாக அமைய வேண்டி டீ, காபி, சோடா, கலர் போன்றவைகளை இடையிடையே கலைஞர்களுக்கு நிகழ்ச்சி அமைப்பாளர்கள் அளிக்கின்றனர்.

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைஞர்களான இந்தக் குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் ஊர்ப்பள்ளிக் கூடம் அல்லது ஊராரால் அமைக்கப்பட்ட அரங்க இணைப்பின் கொட்டகைகளில் தங்கிட நிகழ்ச்சி அமைப்பாளர்கள் ஏற்பாடு செய்கின்றனர். நகர்ப்புறங்கள், நகர் சார்ந்த கிராமங்கள் தவிர்த்த கிராமங்களுக்குச் செல்லும் இக் கலைஞர்கள் சாதியப் பார்வையில் குறைந்த மதிப்பில் நடத்தப் படுகின்றனர். அதற்கு இயைந்தாற்போல அவர்களது பேச்சும் நடைமுறையும் அமைகின்றன.

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்களுள் எவருக்குமே இதுவரை விண்ணப்பித்தும் அரசு உதவித் தொகை கிடைக்கப்பெறவில்லை. தமிழக அரசு வழங்கும் 'கலைமாமணி' பட்டமும் இதுவரை இந்தக் கலைஞர்களுக்கு அளிக்கப்படவில்லை. எனினும் இந்த அரசு உதவியையும், விருதையும் பெற வேண்டுமென்ற வேட்கை இவர்களிடம் தணியாமல் இருக்கிறது. இவை கிடைக்காவிடினும் தங்கள் கலை நிகழ்வுகளை நடத்திக் காட்டுவதில் இவர்கள் சிறு தளர்ச்சியும் அடைவதில்லை. நிகழ்ச்சிக்குச் செல்லும் இடங்களில் படித்தவர் களைக் கண்டால் இவை பற்றி எடுத்துக் கூறி அரசுக்கும் தெரிவிக்க ஆவண செய்யுமாறு வேண்டுகின்றனர்.

கலைஞர்கள் தங்களுக்குள் மரியாதை செய்து கொள்கின்றனர். நாயனக் கலைஞர்களை அண்ணா, அண்ணாவி, வாத்தியார் என்றெல்லாம் அழைத்துக் கொள்கின்றனர்.

குறவன் குறத்தி ஆட்டத் தொழிற் கலைஞர்கள் களவு மணம் செய்தலையே விரும்புகின்றனர். இத்தொழிற் கலைஞர்களுக்கிடையே முறையான பேச்சு செய்து முறைப்படித் திருமணம் செய்தல் என்பது அரிதாகவே காணப்படுகின்றது.

## 1.11. கலைஞர்கள் ஈடுபாடு

மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளில் வாழும் குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் தங்களுடைய ஆசிரியர்கள் திருநெல்வேலிப் பகுதிக் கலைஞர்கள் வழியையே பின்பற்றுவதாகக் கூறுகின்றனர்.[36] மேற்சொன்ன பகுதிகளில் ஆட்டம் ஆடி ஓய்வு பெற்றுள்ள முதிய கலைஞர்களை அணுகிக் கேட்கும் பொழுது திருநெல்வேலிப் பகுதியிலேயே வாழும் கலைஞர்களிடமே பழமையான ஆட்டம் பாட்டுக்கள், பேச்சு நடைகள் இன்னும் உள்ளன என்றும், அவர்களிடமிருந்தே ஆட்டம் பாட்டுக்களை இன்றளவும் ஒன்றிரண்டு தெரிந்து வருவதாகவும் கூறுகின்றனர்.[37] நையாண்டி மேளக் கலைஞர்கள் நையாண்டி இசைவகை, தெம்மாங்கு இசைவகை ஆகியவற்றையும், நையாண்டி மேள நடை வகைகளையும், திருநெல்வேலிப் பகுதி மேளதாள (பறையர் மற்றும் சக்கிலியர்) கலைஞர்களிடமிருந்தே கற்றுக் கொண்டதாகவும் கூறுகின்றனர்.[38]

சிங்கி, சிங்கா, குறவர், கொறவா, சாமியோவ், நரிப்போகுது சாமி போன்ற பல பேச்சு மொழிகளையும், குறவன் குறத்தி பேசும் பேச்சுக்களையும், உடை ஒப்பனை முறைகளையும் பாடல் முறைகள், மெட்டு முறைகள் போன்ற பல்வேறு கூறுகளைக் கருத்தில் கொண்டும் நோக்கும்பொழுது திருநெல்வேலி மாவட்டத்தின் குளுவர், குறவர் இனத்தவரே அங்கு முறையாக முதலில் இந்த ஆட்டக் கலை வடிவத்தைத் தொடங்கி காலப்போக்கில் தொழிற் கலையாக வடிவப்படுத்தவும் பெரும் பங்கு வகித்துள்ளனர் என்ற கருத்துக்கு வர முடிகிறது.

தொடக்கக் காலத்தில் திருநெல்வேலி மலைப் பகுதியை ஒட்டிய குளுவர் என்னும் குறவர் சமூகம் பாசி, மணி, கொம்பு போன்ற பொருட்களைப் பண்ட மாற்றுச் செய்து கொள்ளவும்,

விற்கவும், ஆட்டம் ஆடினர். இன்று இதனைத் தொழிற் கலையாகச் செய்து பிழைத்து வருகின்றனர். காலப்போக்கில் பறையர், சக்கிலியர் போன்ற தாழ்த்தப்பட்ட இனத்தவரும் இதனைத் தொழிற் கலையாகக் கொண்டனர்.

இன்று தமிழகத்தில் குறவன் குறத்தி ஆட்டம் பரவலாக நடைபெறும் பகுதிகள் தஞ்சாவூர், திருநெல்வேலி, புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம், திருச்சி, மதுரை, சேலம் ஆகியவை ஆகும். பிற பகுதிகளில் சிறப்பாக இந்த ஆட்டம் நிகழ்த்தப் பெறுவதில்லை. இந்த ஆட்டம் ஆடும் தொழிற் கலைஞர்கள் திருநெல்வேலிப் பகுதியில் குளுவர் எனும் குறவர் சாதி மக்களாக உள்ளனர். பிற பகுதிகளில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் கூடுதல் எண்ணிக்கையில் பங்கெடுக்கின்றனர்.

ஆட்டக் கலைஞர்களில் இருபாலர்கள் எண்ணிக்கையில் குறவர் சமூகத்தில் கிட்டத்தட்ட 300 பேர்கள் திருநெல்வேலிப் பகுதியிலும் சுமார் 100 பேர்கள் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் உள்ளனர். இவ்வாறு களப்பணியின்போது தகவலாளர்கள் தந்த கூற்றின் வழி அறிய முடிகிறது.[39] தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டைப் பகுதிகளில் சுமார் 1000 பேர்கள் தொழிற்கலைஞர்களாக உள்ளனர். தாழ்த்தப்பட்ட இனத்தவர்களே இத்தொழிலில் கூடுதலான பங்கு வகிக்கின்றனர்.

கள்ளர், கவுண்டர், இசுலாமிய இனத்தவர் எனப் பல பிரிவினர் இன்று தஞ்சாவூரில் மட்டும் குறவன் குறத்தி ஆட்டத்தில் ஆட முன்வந்துள்ளனர்.[40] இப்பிரிவினரில் பெண்களின் பங்கே பெறிதும் உள்ளது. இப்பிரிவிலிருந்து வரும் பெண் கலைஞர்களின் குடும்பங்கள் நலிவுற்றிருக்கக் காண முடிகிறது. தாழ்த்தப்பட்ட இனத்தார் கைக்கொண்டுள்ள இக்கலையில் கள்ளர், கவுண்டர், இசுலாமியர் போன்ற பல பிரிவினரும் முன் வந்துள்ளமையினை சமூகப் பொருளாதார நிலைகளுடன் கூடிய ஆய்வு தனித்து செய்யப்பட வேண்டியதாகும்.

மதுரை, பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து கலை நிகழ்ச்சிகளுக்கான அதிக வாய்ப்புகள் உள்ள தஞ்சாவூருக்கு அடிக்கடி வந்து போகும் கலைஞர் களாக உள்ளனர். தஞ்சாவூர், ரெட்டிப்பாளையத்தில் உள்ள தாழ்த்தப் பட்ட இனத்தவர்களான (பறையர்) நையாண்டி இசைக் கலைஞர்கள்

சுமார் 80 குடும்பத்தினரின் பூர்வீக இடம் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ளது.[41]

திருநெல்வேலி, புதுக்கோட்டை, தஞ்சாவூர் போன்ற இடங்களில் உள்ள நையாண்டி இசைக் கலைஞர்கள் மற்றும் ஆட்டக் கலைஞர்களில் பெரும்பாலோர் கலை நிகழ்ச்சி வேண்டுவோர் எளிதில் கண்டு முன்பணம் அளித்து நிகழ்ச்சி அமைத்திடும் வாய்ப்பினை மனதிற்கொண்டு நகரங்களில் பேருந்து நிலையங்களின் அருகாமையிலேயே வாடகைக்கு அறைகள் எடுத்துக் கொண்டு தங்கியிருக்கின்றனர்.

நாட்டுப்புறங்களில் சடங்குகளை நிறைவேற்றும்பொருட்டு சடங்குமுறைக் கலைஞர்களால் கூலி பேசி நிகழ்த்தப்படும் ஆட்டங்களில் மதச்சடங்கு மற்றும் தெய்வ நம்பிக்கை ஆகியவை குறைவாக உள்ளன.[42]

## 1.12. உடை, ஒப்பனை

குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெறும் உடை, ஒப்பனை மிகவும் எளிமையாக உள்ளது. காதணி, மூக்குத்தி, கழுத்துப் பாசி மணிக் கோர்வை, நரித்தோலால் ஆன பை, வாங்கி உண்ணுவதற்கு ஏற்றார்போல் தோளில் தொங்கவிடப்பட்டிருக்கும் தகர டப்பா போன்றவை குறவன் குறத்தி ஆகியோரிடம் விளங்கக் காணலாம்.

குறவன் வேடமணிந்தோர் பெரும்பாலும் கோவணம் மட்டும் அணிந்து வெறுமனே ஆன மேனியுடனும், தலையில் அள்ளி முடிந்த கூந்தலுடனும் விளங்குவர். நெற்றியில் பொட்டும், முகத்தில் மீசையும் கொண்டுள்ள குறவன் ஆட்டக் கலைஞர்கள் கால் மணிக்கச்சம் அணிந்தும், குடக்கையில் (கை புஜப் பகுதி) காப்பு அணிகலன் அணிந்தும் ஒப்பனை செய்திருப்பர்.

அள்ளி முடிந்தக் கூந்தல், கைவளையல், கை விரல் மோதிரம், கால் மணிக்கச்சம், சுருக்கம் சுருக்கமாகத் தைக்கப்பட்ட முழங்கால் வரையிலான இடுப்புப் ப்பாவாடை, ஜாக்கெட் எனப்படும் மேல்சட்டை, மார்பகங்களை மறைத்திடும் ஒட்டு மாராப்புச் சேலை, தலைக் கொண்டையில் செருகப்படும் கொக்கு இறகுகள் ஆகியவை குறத்தி வேடமிட்டாடும் கலைஞர்கள் அணிந்துகொள்ளும் ஒப்பனைப் பொருள்கள் ஆகும்.

குறவன் குறத்தி ஆகிய இரு பாத்திரங்களும் தங்கள் முகங்களில் முத்து வெள்ளை என்று சொல்லக்கூடிய வெள்ளை நிறப் பொடி, ரோஸ் பொடி ஆகிய இரு வண்ணப் பொடிகளின் கலவையால் முகப்பூச்சு செய்து கொள்கின்றனர்.

கொக்கின் இறகு, மலைகளில் கிடைக்கும் பாசி, மணி, காடுகளில் வேட்டையாடுதலில் கிடைக்கும் நரித்தோல் ஆகியவை குறவன் குறத்தி ஆட்டத்தில் விளங்கும் குறியீட்டு ஒப்பனை முறையாகும்.[43]

ஒப்பனையில் அணிகலன்கள் எனக் காணும்போது குறவன் குறத்தி ஆட்டத்தில் இடையணிகலன்கள் இல்லை. முக ஒப்பனை எனும்படிப் பார்க்கையில் உதட்டுச் சாயம் இட்டுக் கொள்வது குறவன் குறத்தி ஆட்டத்தில் பெரும்பான்மையாக இல்லை. இது போலவே நகம், விரல்கள் ஆகியவற்றில் ஒப்பனை செய்திருக்கும் செவ்வியல் கலைஞர்கள்போல் குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் நகம் மற்றும் விரல் ஆகியவற்றில் ஒப்பனை செய்து கொள்வது கிடையாது. தமிழ் இலக்கிய மாந்தர்களோடு ஒப்பிடும் போது குறவனும் குறத்தியும் மேற்கொள்ளும் உடை ஒப்பனையில் வளர்ச்சி இல்லை.

## 1.13. பார்வையாளர் இரசனை முறை

நாட்டுப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நடைபெறும் இந்த நாட்டுப்புற நிகழ்த்துக் கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்திற்கான பார்வையாளர்கள் வேறுபட்டமைகின்றனர். நாட்டுப்புறங்களின் பார்வையாளர்கள் குடும்பம் குடும்பமாய் தாங்கள் கொண்டு வந்த பாய், துணி ஆகியவற்றை விரித்து அமர்ந்து இரசிக்கின்றனர். தாய், மகள், மருமகள் எனக் கூட்டாக அமர்ந்து பார்க்கும் இவர்கள் குடும்பத்தைச் சார்ந்த ஆடவர்கள் தனித்த நிலைப் பார்வையாளர்களாக உள்ளனர். இந்த ஆட்டத்தில் ஆடவர், பெண்டிர் என்ற பிரிவில் பார்வையாளர்கள் அமைகின்றனர். இப்பிரிவினையை ஊராரால் நியமிக்கப்பட்ட மேற்பார்வைக்குழு ஏற்பாடு செய்கின்றது. பார்வையாளர்கள் இரசித்துக் கொண்டிருக்கும் வேலையில் ஊர்க்காவல் செய்யச் சிலர் பொறுப்பேற்கின்றனர்.

குமரிப் பெண்கள் குழுவாக இருந்து இரசிக்கின்றனர். இதுபோல இளவட்ட ஆடவர்களும் குழுவாக இருந்து இரசிக்

கின்றனர். முதியோர் சில நேரங்களில் அமர்ந்தும், பல நேரங்களில் படுத்தும் குடும்பங்களின் அமர்வுகளோடு இருந்து இரசிக்கின்றனர். கோமாளி வசனம், பாட்டு, ஆட்டம் ஆகியவை கலகலப்பாக உள்ள நேரங்களில் மட்டும் சிறு பிள்ளைகள் கண்விழித்து இரசிக்கின்றனர். பாலுணர்வுபடப் பேசும் வசனங்கள் இடம் பெறுமளவுக்கு ஆட்ட அசைவுகள் நாட்டுப் புறங்களில் பார்வையாளர்கள் மத்தியில் குறைந்து காணப்படுகின்றன.

மதுரை, திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி போன்ற நகரங்களில் நாட்டுப்புறங்களைப் போல் குடும்பம், குடும்பமாய் அல்லாமல் தனித்த நிலையில் பார்வையாளர்கள் அமைகின்றனர். நின்ற நிலையிலேயே பார்வையாளர்கள் பெரும்பாலும் இரசிக்கின்றதைக் காண முடிகிறது. முதியோர், இளவட்டப் பெண்கள், வாழ்க்கைத் தரம் உயர்ந்தவர்கள், நன்கு படித்த இளைஞர் கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியைக் காணப் பெரிதும் முன்வருவ தில்லை. ஆடவர்களில் ஏனைய இளைஞர்களின் பங்கு பெரிதும் உள்ளது. ஆட்டக் கலைஞர்கள் ஆடிக் கொண்டிருக்கும்பொழுது அவர்களுக்கு ரூபாய் நோட்டுக்கள், பூமாலைகள், முறுக்கு மாலைகள் ஆகியவற்றை அன்பளிப்புச் செய்கின்றனர். இளைஞர்கள் குறிப்பாகப் பெண் கலைஞர்களின் நெஞ்சுக்கு மேல் உள்ள சட்டைப் பகுதியில் தங்கள் கைகளாலேயே ரூபாய் நோட்டுக்களைக் குண்டூசியால் குத்தி அன்பளிப்புச் செய்கின்றனர். நகர்ப்புற ஆடவர்களில் பெரும்பாலும் குடித்துவிட்டுச் சந்தோசமாகவும், குறும்புத்தனமாகவும் இரசிக்கின்றனர். நாட்டுப்புறங்களின் பார்வையாளர்களைவிட நகரங்களின் பார்வையாளர்கள் பாலியல் உணர்வுடன் ஆடத்தூண்டும் வகையில் அன்பளிப்புச் செய்து ஆட்ட அசைவுக் கூறுகள் இருக்கும்படியாகச் செய்து இரசிக்கின்றனர். தெருவில் நின்று இரசிக்கும் முறையினை நகரத்திலுள்ள முதியோர், நன்கு படித்த இளைஞர்கள், இளவட்டப் பெண்கள், வாழ்க்கைத் தரம் உயர்ந்தவர்கள் ஆகியோர் விரும்புவதில்லை.

### 1.14. கலைக் கூறுகளில் ஏற்பட்டுள்ள சில மாற்றங்கள்

குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் இசைத் தட்டுக்களில் வெளியாகியுள்ள பக்திப் பாடல்களையும் பாடிக் கொள்கின்றனர். விநாயகர், முருகன், சரஸ்வதி போன்ற பெருந்தெய்வங்களின் துதிப் பாடல்களைப் பாடுவதை இன்று அனைத்துத் தொழிற் கலைஞர் களும் தமது குறவன் குறத்தி ஆட்டத்தில் கொண்டுள்ளனர்.

தமிழ்த் திரையிசைப் பாடல்களையும் இன்று குறவன் குறத்தி ஆட்டத்தில் கலைஞர்கள் பாடுகின்றனர். குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்களுள் பலர் இன்று 'டிஸ்கோ டான்ஸ்', 'கிளப் டான்ஸ்' சினிமாக்களில் இடம் பெறும் ஆட்டம் ஆகியவை போல் ஆடிக் கொள்கின்றனர். இவை போன்ற ஆட்டங்களின்போது இயன்றவரை திரைப்படங்களில் இடம் பெறும் கலைஞர்கள் போல் உடை ஒப்பனை செய்து கொள்கின்றனர்.

ஆடும் கலைஞர்கள் இன்று 'பிளாஸ்டிக்' என்ற பொருளி லிருந்து செய்யப்பட்ட உடை, ஒப்பனைக்கான கைப்பட்டை, இடுப்புப்பட்டை போன்றவற்றை அணிந்து கொள்கின்றனர். குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் இன்று அவ்வப்போது வெளியாகும் தமிழ்த் திரைப்படங்களின் நடிகர், நடிகைகளைப் போல உடை, ஒப்பனை செய்துகொண்டு ஆடுகின்றனர். சில குறத்தி ஆட்டக் கலைஞர்கள் முழங்கை இறக்கம் வரை மேல்சட்டை அணிந்தும் பளப்பள என மின்னுமாறு ஜிகினாப் பொருளான ஜமிக்கியை பாவாடை, சட்டைகளில் தைத்த நிலையிலும் ஆடுகின்றனர்.

சில இடங்களில் 'தமுக்கு', 'சிங்கி' ஆகியவை வாசிக்கப் பயன்படுத்துவது இல்லை. பேசும் சம்பளத்தில் இக்கலைஞர் களுக்குச் சம்பளம் அளிக்க வாய்ப்பில்லாமல் போவதால் இவ்விரு இசைக் கருவியாளர்களையும், கருவிகளையும் இவர்கள் தவிர்த்துக் கொள்கின்றனர். [44] நாயனக் கலைஞர்களுக்கு ஒத்திசை வாசித்த ஒத்தூதிக் குழலுக்குப் பதிலாக சுதிப் பெட்டி இன்று இடம் பெற்றுள்ளது.

நையாண்டி நாயனக் கலைஞர்கள், இன்று செவ்வியல் நாயனக் கலைஞர்களைப்போல வேட்டி கட்டிய இடுப்பின் மேல் பட்டுத்துணி எனும்படியான துண்டு ஒன்றினைக் கட்டி வாசிக் கின்றனர். [45] நாயனத்தில் கட்டப்பட்டுள்ள கயிற்றில் செவ்வியல் கலைஞர்களின் நாயனத்தில் அணிவிக்கப்பட்டிருக்கும் 'மெடல்கள்' போலச் செய்து கோர்வை செய்து மாட்டியுள்ளனர். தெம்மாங்கு நையாண்டி இசை, சிந்து இசை போன்ற நாட்டுப்புற இசை வகைகளை வாசிக்கும் நாயனக் கலைஞர்கள் இன்று இடையிடையே கீர்த்தனை வகைகள், இசைத்தட்டுப் பக்திப் பாடல்கள், திரையிசைப் பாடல்கள் ஆகியவற்றின் சந்தங்களை வாசித்துக் கொள்கின்றனர். கீர்த்தனை போன்ற சந்தங்களை நாயனத்தில் கலைஞர்கள் வாசிக்கும்

போது குறத்தி ஆட்டக் கலைஞர்கள் பரத நாட்டியம் ஆடுவதுபோல பாவனை செய்தாடுகின்றனர்.

## 1.15. முடிவுரை

இதுகாறும் கண்டவற்றால் கீழ்க்காணும் முடிவுகளைப் பெற முடிகிறது.

குறவன் குறத்தி ஆட்டம், குறவர் இனத்தவர்களால் திருநெல்வேலி மாவட்டத்திலும், குறவர் இனத்தைச் சிறுபான்மை யாகவும், தாழ்த்தப்பட்ட இனத்தவராகிய பறையர், சக்கிலியர் போன்றவர்களைப் பெரும்பான்மையாகவும் கொண்டு பிற பகுதிகளிலும் ஆடக் காண முடிகிறது.

திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர் ஆகிய மாவட்டங்களில் பெண்கள் தவிர ஆடவர்களும் குறத்தி வேடமிட்டாடுகின்றனர். மதுரை வட்டாரத்தில் குறத்தி வேடத்தை அலிகள் சிலர் ஏற்று ஆட முன்வந்துள்ளனர். தஞ்சாவூரில் இசுலாம், கள்ளர், கவுண்டர் ஆகிய சாதிய சமயப் பிரிவிலுள்ள பெண்கள் சிலர் குறத்தி வேடமிட்டாடு கின்றனர்.

குறவன் குறத்தி ஆட்ட நிகழ்விற்குக் காவிரி பாய்ந்து வளம் சேர்க்கும் தஞ்சாவூரில் பரவலாக எண்ணிறைந்த வாய்ப்புகள் உள்ளன.

தொழிற் கலையாக வளர்ச்சியடைந்துள்ள இக்குறவன் குறத்தி ஆட்டத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களே பெரும்பான்மை யாக ஈடுபட்டுள்ளனர்.

அறுவடைக்காலம், விதைப்புக்காலம் ஆகியவற்றில் நடைபெறும் நாட்டுப்புற விழாக்களில் இந்த ஆட்டம் பரவலாக நடைபெறுகின்றது.

கரகாட்டத்தின் துணை நிலை ஆட்டமான இக்குறவன் குறத்தி ஆட்டம் இன்று தனி நிலை ஆட்டமாகப் பரிணமித்து வரக் காண முடிகிறது.

நகரம் சாராத பழமையான கிராமங்களில் பாலுணர்வு ஊட்டுவதான ஆட்ட அசைவுக் கூறுகளையோ, ஆட்டப் பாடல் களையோ, வசனங்களையோ, இக்குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெற மக்கள் அனுமதிப்பதில்லை.

இக்கலைஞர்கள் ஆட்டத்தின் இடையே பேசும் பேச்சில் மரியாதை குறைந்த சொற்கள் காணப்படுகின்றன. இடக் கரடக்கலாகப் பேச வேண்டிய சொற்களை வெளிப்படையான சொற்களாகப் பேசிக் கொள்கின்றனர்.

கரகாட்டத்தின் ஏனைய துணை நிலை ஆட்டங்களையும் தெரிந்து வைத்துள்ள இக்கலைஞர்களின் குறவன் குறத்தி ஆட்டத்திலும் சில கலைக் கூறுகள் பயின்று வரக் காண முடிகிறது.

இரவு நேரங்களிலேயே ஆட்டப் பயிற்சி அமைகின்றது. பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள் ஆடவர்களாகவே உள்ளனர். பெண்களுக்கு *8* வயது தொடங்கி *15* வயதுக்குள்ளாகவும், ஆண்களுக்கு 15 வயது தொடங்கி 20 வயதுக்குள்ளாகவும் பயிற்சி பெரும்பாலும் அமைகிறது. பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கல்வியறிவு கொண்டவர்களாக இருப்பார்களேயானால் பயிற்சியின் கால அளவு குறையும்.

வறுமையில் வாடும் இக்கலைஞர்களுக்கு 'சீசன் நேரம்' எனும் நிகழ்ச்சி வாய்ப்புக் காலம் மட்டிலுமே குடும்பம் சீர் பெறுகிறது. அதிலும் அச்சமயத்தில் குடும்ப உறவுகள் சரியில்லாமலும் போக நேரிடுகிறது.

இக்கலைஞர்கள் தாங்களாகவே உடை, ஒப்பனை செய்து கொள்கின்றனர்.

இன்னும் ஒரு சில இடங்களில் இக்கலைஞர்கள் சாதியப் பார்வையில் குறைந்த மதிப்பில் நடத்தப்படுகின்றனர்.

குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்களுள் ஒருவரும் அரசு உதவித்தொகை இதுவரை பெறுவாரில்லை.

ஏறக்குறைய 18 ஆம் நூற்றாண்டு முதல் இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் காரணமாக இந்து சமய மறுமலர்ச்சியும் தோன்ற

ஏதுவாயிற்று. அதனால் கோயில் விழாக்களும், அவ்விழாக்களில் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மக்கள் கலை வளர்ச்சிக்குரிய வாய்ப்புக்கள் நேர்ந்தபோது தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட இனங்களைச் சேர்ந்த கலைஞர்கள் தங்களுக்குள் தனித்தனியாக குழுக்களாக அமைத்துக்கொள்ள வாய்ப்புக்கள் உண்டாயின. அவர்களில் தொழிற் கலைஞர்கள் என்ற பிரிவுகளும் காலப்போக்கில் தோன்றி யிருக்கலாம். ஒருவரை ஒருவர் சார்ந்த நிலையில் குறவன் குறத்தி யுடன் பறையர் இனம் சார்ந்த நையாண்டி இசைக் கலைஞர்களும் ஒன்று கூடிக் குழு அமைத்திருக்க வாய்ப்புண்டு.

குறவன் குறத்தி ஆட்டத்தில் குறவர்களுள் இருபாலரும் எண்ணிறைந்து பங்கெடுக்கும் பகுதி திருநெல்வேலியாகும். குறவர் (குளுவர்) சமூகம் பாசி, மணி, கொம்பு போன்ற பொருட்களைப் பண்ட மாற்றுச் செய்து கொள்ளவும், விற்கவும் ஆட்டம் ஆடினர். காலப் போக்கில் இதனை இச்சமூகத்தாரும், பிற தாழ்த்தப்பட்ட இனத்தாரும் தொழிற்கலையாக்கி உள்ளனர்.

மலைகளில் கிடைக்கும் பாசி, மணி, காடுகளில் வேட்டையில் கிடைக்கும் கொக்கின் இறகு, நரித்தோல் ஆகியவை குறவன் குறத்தி ஆட்டத்தில் விளங்கும் குறியீட்டு ஒப்பனை முறையாகும்.

நாட்டுப்புற மக்கள் குடும்பம் குடும்பமாக அமர்ந்த நிலையில் இந்த ஆட்டத்தை இரசிக்கின்றனர். இளவட்டப் பெண்கள் குழுவாகத் தனித்தும் இதற்குப் பார்வையாளர்களாக அமைகின்றனர். நகரங்களில் பார்வையாளர்கள் நின்ற நிலையில் இரசிக்கின்றனர். குடும்பம் குடும்பமாக வந்து காண்பதில்லை. படித்து அரசு வேலை பார்ப்போர், நன்கு படித்த இளைஞர்கள், வாழ்க்கைத் தரம் உயர்ந்தவர்கள் ஆகியோர் தெருவில் நின்று இரசிக்கும் முறையினை மதிப்புக் குறைவாக எண்ணுகின்றனர்.

உடை, ஒப்பனை, ஆட்டத்தில் இடம் பெறும் பாடல்கள், நாயனத்தில் இடம்பெறும் மெட்டுக்கள், வசனங்கள், ஆட்ட அசைவுக் கூறுகள் ஆகியவற்றில் நவீனக்கலை வடிவங்களின் குறிப்பாகச் 'சினிமா' தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

### அடிக்குறிப்புகள்

1. அகநானூறு, தித்திலக்கோவை, ௩௨௨
2. குறிஞ்சிப்பூக்கள், கலித்தொகை, 3வது பாடல், வரி-16, ப. 106
3. குறிஞ்சிப்பாட்டு, க-ரு, பத்துப்பாட்டு வரிசை, 8.
4. மேலது, உரையாசிரியர் பொ.வே. சோமசுந்தரனார்.
5. சிலப்பதிகாரம், குன்றக்குரவை
6. திருத்தொண்டர் புராணம், பெரியபுராணம், கண்ணப்ப நாயனார். அ௨எ - க0சாச (முதற்காண்டம் பெரிய புராண உரை இரண்டாம் தொகுதி) 551 - 1265 சி.கே. சுப்பிரமணிய முதலியார் உரை, முருகன் அச்சகம், இரண்டாம் பதிப்பு, 1986.
7. i) It has been suggested that the kuravas are one of the early tribes of Southern India, and one with the Kurumbas of the Tamil country, and closely allied to the Vedans Castes and Tribes of southern India, E. Thurston, P. 123.

   ii) Tamil word of the root ku, a mountain, and in Tamil work of the nineth centruy kurru or kura (kuramagal) is given as the name of a hill tribe.

   iii) When telling fortunes, the korava woman places on the basket of winnow, rice, betel leaves and oreca nuts and the wickertray holding her client's hand over the winnow, and moving if about, she commences to chant, and name all sorts of deities. From time to time she touches the hand of the person whose fortune is being told with the stick. The korava women are very clever in extracting information concerning the affaris of a client before they proceed to tell her fortune. Castes and tribes of Southern India (iii - K) Thurston, p. 465.
8. Kunru is the shortened from the kurru which means hill in Tamil. The people who live on the hill is known as kunravar or kuravar, Yerukala dialect. Dr. G. Srinivasa Varma. p. ii.
9. 'நிந்தனை உலையில் சின்ன மகிபன் குளுவ நாடகம்' சின்ன மகிபன் குறுவ நாடகம், டாக்டர் ஏ.என். பெருமாள். பக்கம். 1
10. அபிதான சிந்தாமணி, ப. 489
11. 

| Kuravan | Males | Females | Total |
|---|---|---|---|
| 1. Tinnevelly | 1825 | 1720 | 3435 |
| 2. North Arcot | 4713 | 3385 | 8098 |

(Tinnevelly District, Madras District Gazetteers, Vol. II. 1917. North Arcot District, Vol. II)

12. காண்க பி.இ. சுய அறிமுகப் பாடல். 1. (நரி போகுது சாமி, நரிக்குறவர் நாங்களே சாமி போன்ற வரிகள். 23 - 34

13. தகவலாளர் : சந்தனம், கோமாளிக் கலைஞர், மதுரை, வடபழஞ்சி, வயது 45, நாள் : 25.6.1987

14. காண்க பின் இணைப்பு பாடல் 1 வரி. 55 - 60.

15. நீலகிரி மலையின மக்கள் ஆட்டங்கள் (தோடர், கோத்தர், இருளர்), குறுகிய கால (1985 டிசம்பர் - 1986) ஆய்வுத் திட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு, மலையின மக்கள் ஆய்வு மையம், உதகை - 2. (அச்சில் வெளிவரப் பெறாதது), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 613 005, கே.ஏ. குணசேகரன் பக்கம் 78 - 81 (வளர்ச்சி நிலைகள் எனத் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது இந்த ஆய்வாளரால், 1987)

16. குளுவ நாடகம் என்னும் பிரிதொரு நூலும் உண்டு. அது குறவனாகிய குளுவனைப் பற்றியும், குறப் பெண்ணைப் பற்றியும் எழுதப் பெற்றது. ஒரு குளுவன் தன் கையாளாகிய குறவனுடன் (பாங்கன்) வேட்டையாடுவதும், தன் மனைவியாகிய குறத்தியை நினைத்துப் புலம்புதலும், அப்பொழுது கையால் குறத்தியின் அடையாளங்களைக் கேட்டறிந்து குறத்தியைத் தேடிச் சென்று அவளைக் கண்டு திரும்பி வந்து சொல்வதும், பிறகு குளவன் குறத்தியைக் கண்டு ஐய்யுற்று வினாவி உரையாடி அவள் ஊடலைத் தீர்த்து ஒன்றுபடுவதும் குளுவ நாடகத்தின் அமைப்பாகும். குறத்தி குறி கூறும் நாடகமும், குளுவ நாடகமும் சேர்ந்ததே குறவஞ்சி யென்னும் பிரபந்தமாகும். தியாசேகர் குறவஞ்சி, ப.ஆ. டாக்டர் வே. பிரேமலதா, (தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் வெளியீடு - 130) ப. 29.

17. தகவலாளர் : முத்துலெட்சுமி (ஆட்டக்காரப் பெண்), தென்காசி, குளுவர் குடியிருப்பு, வயது 36, நாள் : 22.6.1987

18. (1)தகவலாளர் : முருகேசன், ஏ.பி. 'ஆட்டச்செட்டு' அமைப்பாளர், தரகர். நெல்லை மாவட்டம், கைலாசபுரம், வயது 54, நாள் : 21.6.1987.

(2) சுப்பையா பாண்டியன் (வாத்தியார்), கோமாளி ஆட்டக் கலைஞர், தரகர், நெல்லை மாவட்டம், கைலாசபுரம், வயது 48, நாள் : 20.6.1987.

19. அறுவடைக்காலம் (தை, மாசி, சித்திரை), விதைப்புக் காலம் (ஆடி, ஆனி) ஆகிய காலங்களில் கிராமங்களில் விழாக்கள் நடத்துவர். அப்போது தொழிற்கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகமாகும். இந்தக் காலங்களை 'சீசன்' என்று தொழிற் கலைஞர் கூறுவர்.
20. காண்க : குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெறும் தர்க்கப் பாடல்.
21. காண்க : பின் இணைப்பு : சொளவம் - 1.
22. மேலது.
23. காண்க : குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெறும் வசனப் பகுதி - 2.
24. 'ஆத்தாடி, அக்கா! இவரு என்னைய என்னமோ பண்ணவுல கூப்புடுறாரு போல'
'சும்மா கேளுங்க, ஒங்களுக்குக் கொழுந்தியா மொறைன்னு வச்சிக்கிருங்க'
'அக்கா! போட்டா புடிச்சி மயக்கிக் கூப்பிடப் பாக்குறாறோ' என்பன போன்ற பேச்சுக்களைச் சரளமாகவும், இயல்பாகவும், வெட்கப்படாமலும் பேசுகின்றனர்.
25. இராஜேந்திரன் குறவன் ஆட்ட கலைஞர் தன் சகோதரி தஞ்சை (கீழவாசல்) மல்லிகாவுடனும், சகோதரி சாவித்திரியுடனும் ஆடுகிறார். வயது 30, நாள் 10.8.1987
26. ஏசுதாஸ், நாயனக் கலைஞர், ரெட்டிப்பாளையம், தஞ்சாவூர் மாவட்டம். இவரது மகன், மருமகளுடன் கலைத் தொழில் செய்கிறார். இடைத்தரகராகவும் விளங்குகிறார். வயது 46, நாள் 3.8.1987
27. 1. வீரம்மாள் : மேட்டுத்தெரு, சரஸ்வதி நகர், தஞ்சாவூர், 33 வயது நாள் : 8.8.1987
2. ராணி : மேலது
3. மணி : (குறவன் கலைஞர்), பாபநாசம், தஞ்சாவூர், 34 வயது நாள் : 8.8.1987
4. ராஜ் : (குறவன் கலைஞர்), கீழவாசல், தஞ்சாவூர், 22 வயது, நாள் : 14.8.1987
28. தகவலாளர் : புலியபூதம்மம் செல்வம், குறவன் ஆட்டக் கலைஞர், இராமநாதபுரம் மாவட்டம், வயது 32, நாள் : 28.6.1987.
29. தகவலாளர் வி. வேலு : கிராமியக் கலைச் சங்கம், மதுரை - 1. வயது 35, நாள் : 24.7.1987.

30. மல்லிகா, (குறத்தி ஆட்டக் கலைஞர், கரகக் கலைஞர்), கீழவாசல், தஞ்சாவூர், 22 வயது, திருமணம் செய்து கொண்ட நாயனக் கலைஞருக்கு 45 வயது.
வசந்தா (குறத்தி), 23 வயது, 50 வயதானவரைத் திருமணம் செய்து கொண்டு கீழவாசல், தஞ்சாவூரில் வாழ்க்கை நடத்துகின்றனர்.
31. காந்தி அண்ணாவி (நையாண்டி நாயனக் கலைஞர்), சிவகங்கை. இவர் தன் மகனைப் படிக்க வைத்து, இடையில் நாயனக் கலைஞனாகவே ஆக்கியுள்ளார்.
அம்மச்சி, கரக ஆட்டக் கலைஞர், (வீராமதி, திருப்பத்தூர் தாலுக்கா), தன் மகள் பஞ்சுவைப் படிப்பதிலிருந்து நிறுத்தி கரகம், குறத்தி ஆட்டக் கலைஞராக ஆக்கியுள்ளார்.
32. காண்க. மேலது 21.
33. மேலே கண்ட தகவலாளர் கலைச் செல்வியின் தந்தை (21.1) ஆட்டம் அமைத்துக் கொடுக்கும் இடைத்தரகராக உள்ளார்.
34. நையாண்டி இசைக் கலைஞர்கள் வெள்ளை வேட்டி, வெள்ளைச் சட்டையினையே அணிந்திருப்பது கண்கூடாகும். குறிப்பாக நாயனக் கலைஞர்களிடம் இந்த வழக்கத்தைப் பெரிதும் காண முடிகிறது.
35. காண்க. பின் இணைப்பு, 'குழூஉக்குறிச் சொற்கள்'
36. அழகர்சாமி வாத்தியார், புதுக்கோட்டை பழனிச்சாமி வாத்தியார் ஆகியோர் கூறக் கேட்ட செய்தி, நாள் : 22.6.1987.
37. தஞ்சாவூர் தேன்மொழி, புதுக்கோட்டை பஞ்சு, தஞ்சாவூர் சித்தார்த்தன், புதுக்கோட்டை பிச்சைமுத்து ஆகிய குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் வழி பெற்ற செய்தி,
நாள் : 20.5.1987.
38. காந்தி அண்ணாவி, நாயனக் கலைஞர், அகிலாண்டபுரம், சிவகங்கை. நாள் : 12.4.1987.
39. பரமசிவம், சீனியாபுரம், நாயனக் கலைஞர், வீரவநல்லூர், நெல்லை மாவட்டம், வயது 42. நாள் : 27.6.1987
செல்லையா, திருநாங்கோவில், நெல்லை மாவட்டம், வயது 39, நாள் : 28.6.1987.
40. காண்க. பின் இணைப்பு - 5, பிற இனத்தார் பட்டியல்.
41. ரெட்டிப்பாளையத்தில் உள்ள நையாண்டி இசைக் கலைஞர்கள் அனைவரும் இந்த ஆய்வாளரின் உறவினர்கள்.
1. கரகாட்டம், இ.ஆ. டாக்டர் மா. நவநீதகிருட்டிணன்,
2. கே.ஏ. குணசேகரன், பக். 44.

42. பின் இணைப்புப் பாடல்களில் மதச் சடங்கு மற்றும் தெய்வ நம்பிக்கை.

43. காண்க. 'முக ஒப்பனை', 'நக ஒப்பனை', 'ஒப்பனையில் அணிகலன்கள்' ஆகிய இயல்கள், தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன், வெ. வரதராசன்.

44. தகவல் 1. துரைசிங்கம், தவில் கலைஞர், சிவகங்கை, வயது 58, நாள் : 11.9.1987.

    2. அம்மச்சி ஆட்டக் கலைஞரின் கணவர், விராமதி, திருப்பத்தூர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், வயது - 63, நாள் : 10.6.1987.

    3. கள ஆய்வில் பல நிகழ்ச்சிகளில் தமுக்கு, சிங்கி இசைக் கருவிகள் இடம் பெறவில்லை.

45. கற்களத்தூர் மூக்கையா நையாண்டி நாயனக் கலைஞர் இராமநாதபுரம் மாவட்டம், சகோதரர்கள்; சிவகங்கை காந்தி அண்ணாவி; பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், ரெட்டிப்பாளையம் சீனிவாசன்; மதுரை ராமராயர் மண்டபக் குடியிருப்பைச் சேர்ந்த பெருமாள் நாயனக் கலைஞர் ஆகியோர் நையாண்டி நாயனம் வாசிக்கும்போது தங்கள் இடுப்புகளில் பட்டுத்துணி போன்ற ஓர் ஆடையை தாங்கள் கட்டியுள்ள வேட்டிக்கு மேல் கட்டிக் கொள்கின்றனர்.

# 2. குறவன் குறத்தி ஆட்ட அசைவுக் கூறுகள்

## 0.2. முன்னுரை

ஆட்ட அசைவுக் கூறுகளை வகைப்படுத்தியும் ஒருங்கிணைத்தும் காண்பது ஆட்டத்தின் தன்மையைக் காண வாய்ப்பளிக்கும். வகைப்படுத்திக் காணும் பொருட்டு ஆட்ட அசைவுக் கூறுகளைக் கூறுபடுத்திக் காணலாம். நமது வசதி கருதி ஆட்ட அசைவுகளைக் கூறுபடுத்தி விளக்கலாம்.

## 2.0. ஆடல் முறைகள்

ஆடல் முறை என்பது ஆட்ட அசைவுக் கூறுகள், ஆட்ட அசைவுகளுக்கும் பார்வையாளர் இரசனை முறைக்கும் உள்ள தொடர்பு முறைகள், இசைக் கருவிகள் இணைவு முறைகள் ஆகியவற்றை உள்வாங்கியதாக ஆடல் முறைகளை அறியலாம்.

ஆட்ட அசைவுக் கூறுகள் குழுவுக்குக் குழு வேறுபடலாம். எனினும் பொதுவாக எல்லாக் குழுக்களிடமும் விளங்கும் ஆட்ட அசைவுக் கூறுகளைக் கணக்கில் கொண்டே இங்கு எடுத்துக் காட்டி விளக்கப்படுகிறது.

## 2.1. ஆட்ட அசைவு நிலைகள்

நின்றாடல் முறை, அமர்ந்தாடல் முறை என்றும் உருண்டாடல் முறை என்றும் நாம் காணவிருக்கும் நாட்டுப்புற ஆட்டமான குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெறும் ஆட்ட

அசைவுக் கூறுகளை வகைப்படுத்தி இங்கு அறியலாம். இந்த வகைப் பார்வை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள ஆட்டத்தை எளிதில் கண்டுணர வாய்ப்பளிக்கும்.

## 2.1.1. நின்றாடல் முறை

1. வலது கால் ஒரு அடிவரை உயரத்தூக்கி இடக்கால் இயல்பு நிலையில் இருக்க இரு கைகளால் சபை வணக்கம் செய்விக்கப் படுகிறது. இதனைச் சபை வணக்கம் என்கின்றனர். சில கலைஞர்கள் தூக்கிய வலக்காலின் பாதத்தை மட்டும் மெல்ல அசைத்தாடு வதுண்டு. (காண்க : வரைபடம்). சிலர் வலப்புறத்தே ஓர் அடி தள்ளி வைத்தும் கால் பெருவிரல் தரையைத் தொடுமாறும் செய்வர். மீண்டும் அதே காலை எடுத்து இடப்புறத்தே ஓரடி எடுத்து வைத்து ஆடுவர். இடம் வலம் எனவும் நடுப்புறத்தே நேராகவும், ஓர் அடித் தூரம் இருக்குமளவுக்குக் காலடி வைப்புச் செய்து பெருவிரல் தரையில் தொடுமாறு செய்யப்படு கிறது. சிலர் பெருவிரலால் தரையைத் தொடுவதற்குப் பதிலாக முன்பாதப் பகுதியை வைத்தும் ஆடுவர். இவ்வாறு வலம், இடம், நடுப்பகுதி எனக் காலடி வைப்புச் செய்தாடுவது தொடர்ந்தாற்போல் வேக நிலைக்கும் அமைத்துக் கொள்ளப்படுகிறது.

2. தரையை வலக்கால் பெருவிரல் பகுதியோ, முன் பாதப் பகுதியோ தொட்டு ஆடி முடித்ததும் குனிந்து தரையைத் தொட்டு வணங்குதல் (காண்க : நிழற்படம் - 1). குனிந்த நிலையிலேயே வட்டமாய் அமர்ந் திருக்கும் பார்வையாளர்களை வணங்குதல்; அரை வட்ட வடிவமாய் நின்ற நிலையில் வாசித்துக் கொண்டிருக்கும் இசைக் கருவியாளர்களை ஒவ்வொருவராகத் தொட்டு வணங்குதல்; வணங்கிய நிலையில் ஆடிச் செல்லும் இச் சமயத்தில் தோள்களை யும், தலையையும், வணங்கிய நிலையில் உள்ள கைகளையும் அசைத்துக் கொண்டு காலடி வைப்புச் செய்து கொள்ளப்படுகிறது.

3. குறவனும் குறத்தியும் கையை இணைத்துப் பிடித்த நிலையில் வலக்கால் மூன்று அடிகள் முன் வைத்துப் பின்னர் உடலை முழுவதும் திருப்பம் செய்து மூன்று அடிகள் வலக்காலால் முன் வைப்புச் செய்து இயல்புநிலைக்குத் திரும்பி நிற்கின்றனர். இந்த முறையில் வேகம் படிப்படியாக ஏற்படுமாறு ஓரிருமுறை செய்தாடு கின்றனர்.

4. வலக்காலை ஓரடி அகட்டி வலது பக்கவாட்டில் எடுத்து வைத்து, இடுப்பை வலப்புறத்தே ஒரு வெட்டு வெட்டி இடக் காலைத் தூக்கி வலக்காலை ஒட்டி வைத்து ஒரு சுழற்சி செய்தாடு கின்றனர். இதைப்போல இடக்காலை ஓரடி அகட்டிப் பக்கவாட்டில் எடுத்து வைத்து இடுப்பை இடப்புறத்தே ஒரு வெட்டு வெட்டி இடக்காலைத் தூக்கி வலக்காலை ஒட்டி வைத்து ஒரு சுழற்சி செய்தாடுகின்றனர்.

5. இரு கால்களையும் அகல வைத்து வலப்பக்கவாட்டில் வலக்காலையும், இடப்பக்க வாட்டில் இடக்காலையும் வைத்து இடுப்பைச் சற்று வலமும் இடமும் என முறையே ஒரு வெட்டு வெட்டி உடம்பைக் குனிந்த நிலையில் வைத்து நகர்ந்தபடி ஆடுகின்றனர். இவ்வாறு ஆடும்போது இரு கைகளையும் தலைக்கு உயரே தூக்கி அசைத்துக் கொள்கின்றனர்.

6. இடுப்பை வலமும், இடமும் வெட்டு வெட்டிய நிலையில் சற்று ஒருக்களிப்புச் செய்து இரு கால்களையும் தொய்வு நிலையில் இருக்குமாறு அசைத்துக் கொண்டு இரு கைகளையும் இடுப்புக்கு மேல் தூக்கி ஆடுதல்.

7. இயல்பு நிலையில் நின்றவாறு வலக்காலை ஓரடி உயரே தூக்கி ஒரு வெட்டு வெட்டி, உதறிய நிலையில் இடக்காலை வலக்காலுடன் இணைத்து ஒரு குதிப்புச் செய்து கொள்ளப்படுகிறது.

8. நின்ற நிலையில் வலக்கால் இயல்பு நிலையில் இருக்க இடக்கால் ஓரடி முன்வைத்துக் குதிகாலை முன் ஊன்றுதல்; பின் இயல்புநிலைக்கு வருதல்; இடக்கால் இயல்பு நிலையில் இருக்க வலக்கால் ஓரடி முன் வைத்துக் குதிகாலை முன் ஊன்றுதல் பின் இயல்பு நிலைக்கு வருதல்.

இவ்வாறு முன்னோக்கிய நிலையில் குதிகாலடி வைப்புச் செய்தாடிச் செல்லும்போது குனிந்த நிலையில் இரு கைகளையும் பக்கவாட்டில் இடுப்பு வரை தூக்கிய நிலையில் அசைத்துக் கொள்ளப்படுகிறது. இந்த நிலை ஆட்ட அசைவின்போது இடுப்பைச் சற்று ஒடித்தாடுதலும், குனிந்து நிமிர்ந்தாடுதலும் தொடர்ந்து நடைபெறுகின்றன.

9. தவில் இசைக்கருவி, 'தத்தக்குத் தத்தக்கு' எனத்தாளம் தரும் போது இயல்பு நிலையில் உள்ள இரு கால்களில் ஒரு கால் ஓரடி உயரத் தூக்கிய நிலையில் ஒரு வீச்சு செய்யப்பட்டுத் திரும்ப இயல்பு நிலைக்கு எடுத்து வைக்கப்படுகிறது. இந்த ஆட்ட அசைவு மறு காலாலும் செய்யப்பட்டுத் தொடர்ந்து வேக நிலையில் அமைக்கப்படுகிறது.

10. நின்ற நிலையிலிருந்து குனிந்து இரு கைகள் முன் ஊன்றி ஒரு காலை நடுவில் வைத்து வலக்காலை வலப்புறத்தே அகட்டி வைத்துத் திரும்ப இயல்பு நிலைக்கு வரல். இரு கை முன் ஊன்றுதல், காலை நடுவில் வைத்து வலக்காலை மட்டும் அகட்டி வைத்தல். இந்த ஆட்ட அசைவுக் கூறுகள் தொடர்ந்து செய்யப்படும்போது தாளக்கூறுகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. பின்னர் கைகளிரண்டையும் ஊன்றிக் கால்களை இயல்பு நிலைக்குக் கொண்டு வரும்போது குதித்த நிலையில் நிற்றல்.

மேற்சொன்ன முறைகள் இடக்கால், வலக்கால் என மாற்றிச் செய்து கொள்ளப்படுகின்றன. இந்த அசைவுக் கூறுகளையும் மெல்ல மெல்லப் படிப்படியாக வேகநிலைக்குக் கொணர்வதும் உண்டு.

11. நின்ற நிலையிலிருந்து குனிந்து இரு கைகளையும் தரையில் ஊன்றி இரு கால்களையும் பின்னே நீட்டி வைத்து ஆடுதல். இந்த ஆட்ட அசைவு முறை செய்தலும் உடன் நின்ற நிலைக்கு எழுந்து இயல்பு நிலைக்கு வருதலும் தொடர்ந்து செய்யப்படு கின்றன. தாள வேகத்திற்கேற்ப இந்த ஆட்ட அசைவும் அமைகிறது.

12. இடப்புறத்தேயும், வலப்புறத்தேயும் ஓர் அடிக்குக் குறையாமல் குதிக்கும் சமகாலத்தில் இடுப்பை வலப்புறத்தேயும், இடப்புறத்தேயும் முறையே சுழற்சி செய்யும்போது முன்னுக்குக் கொண்டு வருவதுபோல் வெட்டி அசைத்துச் சுழற்சி செய்தாடு கின்றனர்.

13. இரு கால்களையும் ஒன்றரை அடிக்குக் குறையாமல் அகட்டி வைத்து இடுப்பை வெட்டிச் சற்றுக் குனிந்து நிமிர்ந்தாடுதல்.

14. இரு கால்களும் இயல்பு நிலையில் நின்றவாறே இடக்காலை முன் வைத்தும், வலக்காலைப் பின்வைத்தும் இரு கை தூக்கிய நிலையில் முன்னும் பின்னும் நகர்த்தி ஆடுதல். இச்சம

காலத்தில் தலையைக் குனியச் செய்தும், நிமிரச் செய்தும் கொள்கின்றனர். இந்த ஆட்ட அசைவின்போது சிலர் இடுப்பையும் பக்கவாட்டில் வெட்டிக்கொள்வர். இம்முறை வலக்கால், இடக்கால் என மாற்றி மாற்றி வைக்கப்பட்டு ஆடப்படுகிறது.

*15.* நின்ற நிலையிலிருந்து வலக்காலை நெற்றி வரை ஒரு வீச்சுச் செய்தலுடன் உயரே தூக்கி கால் பெருவிரல் படுமாறு செய்து கால் இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டதும் ஒரு குதிப்புச் செய்து இயல்பு நிலைக்கு வந்ததும் உடம்பை ஒரு சுழற்சி செய்து கொள்ளப்படுகிறது. இம்முறை இடக்கால் வலக்கால் என முறையே நடைபெறுகின்றது.

*16.* இரு கைகளையும் நெஞ்சின் பக்கவாட்டுகளில் மடித்து வைத்துக் கொண்டு தலையை முன்னும் பின்னும் அசைத்து, வலக்காலைத் தூக்கி ஒரு வீச்சு செய்து அதே காலை இயல்பு நிலைக்குக் கொணரும்போது முன்பாதத்தாலோ, குதிகாலாலோ தரையில் ஒரு குத்துச் செய்தாடப்படுகிறது.

*17.* குறவனும் குறத்தியும் தோள்களில் கை போட்டுக் கொண்ட நிலையில் கால்களை முன்னுக்கும், பின்னுக்கும், பக்கவாட்டுகளிலும் அசைப்புச் செய்து கொண்டு மறு கையினை பக்கத்தில் நீட்டி அசைத்துக் கொள்கின்றனர். சில வேலைகளில் கால்கள் வீச்சு நிலை கொள்வதுண்டு. *(காண்க : நிழற்படம் - 2)* .

*18.* குதித்த நிலையில் இருகைகளையும் தரையில் ஊன்றிக் கால்களைப் பின்னுக்கு நீட்டிப் பின்னர் இரு கைகளையும் ஊன்றி நிலையில் தரையைப் பார்த்தபடியே இடுப்பை ஒட்டகச் சிவிங்கியின் முதுகுபோல் உயர்த்தியும், நிமிர்த்தியும் ஆடி இயல்பு நிலைக்கு வரல்.

*19.* குதித்த நிலையில் பக்கவாட்டுக்காலில் கைகளை மடித்துத் தலையை நிமிர்த்தியும், குனியச் செய்தும் ஆடுதல். வலக்கால் ஓரடி முன்னெடுத்து வைக்கும்போது வலக்கை நெஞ்சுக்கு நேர் மடித்தபடி ஆட்ட அசைவு அமைகிறது. இடக்கால் ஓரடி முன்னெடுத்து வைக்கும்போது இடக்கை நெஞ்சுக்கு நேர் மடித்து வைக்க ஆட்ட அசைவு அமைகிறது.

20. குதித்த நிலையில் வலப்புறச் சுழற்சி செய்து தொடர்ந்து இயல்பு நிலைக்கு வந்ததும், ஒரு குதிப்புச் செய்து இடப்புறச் சுழற்சி செய்து கொள்கின்றனர்.

## 2.1.2. அமர்ந்தாடல் முறை

1. குறவனும் குறத்தியும் வலது கைகளைப் பிடித்து மண்டியிட்டு உட்கார்ந்து பின்னர் குதித்த நிலையில் எழுகின்றனர். விடுபட்ட கைகளால் குறவன் குறத்தி இடுப்பையும் குறத்தி குறவனது இடுப்பையும் பிடித்த நிலையில் இடுப்பை வெட்டி அசைத்துக் கொள்வர். சிலர் இடுப்பை வெட்டிக்கொண்டே ஓரிரு அடிகள் முன்னுக்கு வைத்து ஆடுவர். அப்போது கைகளை முன்னும் பின்னும் நெஞ்சுவரை வீச்சுக்கள் செய்து கொள்கின்றனர்.

2. மண்டி நிலையில் உட்கார்ந்து வலக்காலை மட்டும் பின்னுக்கு இழுத்து வைத்துக் கொண்டு தாளத்திற்கேற்பச் சட்டென இயல்பு நிலைக்குக் கொணர்வர். உடன் முன்னுக்குக் காலை நீட்டி வைத்துக் கொண்டு தாளத்திற்கேற்பச் சட்டென இயல்பு நிலைக்குக் கொணர்வர்.

3. நின்ற நிலையிலிருந்து சட்டெனக் குத்த வைத்த நிலையில் உட்கார்ந்து குதித்த நிலையில் எழுந்து வலக்காலைத் தூக்கி ஓர் உதறு உதறி இயல்பு நிலைக்கு வந்து ஆடுதல் (காண்க : நிழற்படம் - 3).

4. உட்கார்ந்த நிலையில் (இரு கால்களையும் இணைத்து வைத்துத் தரையில் உட்காராமல்) வலக்காலைப் பக்கவாட்டில் ஒருக்களித்து, இரு கைகளையும் தரையில் ஊன்றி படக்கெனத் துள்ளிக் குதித்து இயல்பு நிலையில் நிற்றல். இந்த ஆட்ட அசைவுக்கூறு இடப்புறக்கால் துவக்கத்திலும் அமையும்.

5. இரு கால்களையும் இயன்ற மட்டில் இடம், வலம் என விரித்துத் தரையில் சப்பென உட்கார்தல். பின்னர் கைகளால் ஊன்றிக் குதித்த நிலையில் இயல்பு நிலைக்கு வரல்.

6. உட்கார்ந்த நிலையில் வலக்காலின் முன்பாதம் மட்டும் தரையில் ஊன்றி வைத்து, இடக்காலின் முழங்கால் மடிந்த நிலையில் தரையில் ஊன்றுதல், கைகள் தரைக்கு மேல் தூக்கிய நிலையில் அசைத்துக் கொள்ளப்படுகின்றன.

7. இருகைகள் தரையில் ஊன்றித் தரையில் அமர்ந்த நிலையில் வலக்காலை முன்னுக்கு நீட்டி வைத்துப் பின்னர் சாய்ந்து இடக்காலை உயரே நீட்டிய நிலையில் தூக்குதல். இம்முறை வலக்கால், இடக்கால் என மாற்றி மாற்றிச் செய்து கொள்ளப் படுகிறது.

8. அமர்ந்த நிலையில் ஒரு கால் முன்னுக்கும், மறுகால் பின்னுக்கும் நீட்டி அகட்டி வைத்து இரு கைகள் தூக்கிய நிலையில் ஆட்ட அசைவு அமைகிறது.

9. நின்ற நிலையிலிருந்து சட்டென இரு குதிகால்களின் ஆதரவில் உட்கார்தல். உட்கார்ந்த நிலையிலிருந்து எழுதல். இவ்வாறு அமர்ந்தும், எழுந்தும் ஆடும்போது இடுப்பைச் சற்று ஒரு வெட்டு வெட்டிக் கொள்கின்றனர். அமர்ந்த நிலை ஆட்டத்தின் போது சிலர் வலக்காலையோ அல்லது இடக்காலையோ நீட்டியும், மடக்கியும் செய்து கொள்கின்றனர். கைகள் இரண்டும் பக்கவாட்டு களில் புவியீர்ப்பைச் சமன் செய்து கொள்ளும் பொருட்டு அசைத்துக் கொள்ளப்படுகின்றன.

## 2.1.3. உருண்டாடல் முறை

இரு கைகளையும் தரையில் ஊன்றி உட்கார்ந்து இரு கால்களையும் முன்னுக்குக் கொணர்ந்து பின்னர் இடப்புறத்தே புரண்டு ஆடுதல். இரு கைகளையும் தரையில் ஊன்றி உட்கார்ந்து இரு கால்களையும் முன்னுக்குக் கொண்டு வந்து பின்னர் வலப்புறத்தே புரண்டு ஆடுதல்.

உட்கார்ந்து முன்னே பல்டி அடித்துத் தரையில் உடம்பு புரண்ட நிலையில் இயல்பு நிலைக்கு வரல். (காண்க: நிழற்படம் - 4). பின்னர் உட்கார்ந்த நிலையில் பின்புறம் பல்டி அடித்துத் தரையில் உடம்பு புரண்ட நிலையில் இயல்பு நிலைக்கு வரல்.

உருண்டாடல் முறையினைப் பெண்கள் செய்து கொள்வதில்லை. ஆடவர்கள் மட்டுமே ஆடிக்கொள்ளும் இந்த அசைவு முறையில் தாளம் தப்புவதற்கான வாய்ப்புக்கள் நிறைய அமைவதால் சில கலைஞர்களிடம் தாளம் கெட்டு விட நேரிடுகிறது.

## 2.1.4. பாலுணர்வு ஊட்டத்தக்க ஆட்ட அசைவுக் கூறுகள்

பொதுவாகக் குறவனும் குறத்தியும் ஆட்ட அசைவுக் கூறுகளைப் போட்டி மனப்பான்மையோடு ஆடுகின்றனர். இதனால் இருவரும் கைகோர்வை செய்து இணைந்தாடும் ஆட்ட அசைவு தவிர்த்தப் பிற ஆட்ட அசைவுக் கூறுகள் யாவற்றிலும் ஒருவர் ஆட மற்றொருவர் அதனையே திரும்ப ஆடும் முறையினை மேற்கொள்கின்றனர். ஆடவரான குறவன் ஆட்டக் கலைஞரே முன்னெடுத்து ஆட குறத்தி திரும்ப ஆடும் முறை அமைகிறது. இவ்வாறு ஒவ்வொரு ஆட்ட அசைவுக் கூறினையும் ஆடி முடித்ததும் குறவன் குறத்தியிடம் தன் இடுப்பை முன்னுக்குத் துருத்தி ஆடுவதும், பதிலுக்குக் குறத்தியும் அவ்வாறே செய்வதும் பாலியல் உணர்வினைத் தூண்டத்தக்கதாக அமைகிறது.

குறவன் வேடமிட்ட சிலர் குறத்தியைத் தன் இரு கைகளாலும் தூக்கி ஆடுவதுண்டு. வேறு சிலர் குறத்தியின் இடுப்பைப் பிடித்துத் தூக்கிக் குறத்தியைக் குதிக்கச் செய்தும், உடம்பை ஒட்டியும், சில வேளைகளில் கட்டிப் பிடித்தும் ஆடுவதுண்டு.

பெண்கள் ஆடவர்களைப் போலவே போட்டி உணர்வுடன் ஆடிப்பாடிப் பார்வையாளர்களின் பாராட்டுதலைப் பெற வேண்டி ஆடவர்களின் உடல் வாகுக்கேற்றார்போல் ஆடக்கூடிய ஆட்ட அசைவுக் கூறுகளையெல்லாம் உடல் வாகுக்கேற்காத பெண்கள் (குறத்தி வேடமிட்டவர்கள்) ஆடுகின்றனர். கால்களை அகட்டி ஆடுதல், கால்களை உயரே தூக்கி நீட்டி அசைத்து ஆடுதல், குதித்து ஆடுதல், கைகளை உயரே தூக்கி இடுப்பை வெட்டியும், சுழற்சி செய்தும் ஆடுதல், இருபாலரது உடம்பும் இடுப்புக்கு நேர் அடிக்கடி இணைவதுபோலவும், சில நேரங்களில் இணைத்தும் ஆடுதல், கட்டிப்பிடித்து ஆடுதல், புரண்டாடுதல் போன்ற ஆட்ட அசைவுக் கூறுகள் பாலுணர்வு ஊட்டுவதாக அமைகின்றன.

## 2.1.5. ஆட்ட அசைவுக் கூறுகள் - ஒரு மதிப்பீடு

நின்றாடல் நிலையில் குதித்தாடும் முறை குறவன் குறத்தி ஆட்டத்தில் அடிக்கடி இடம் பெறக் காண முடிகிறது. கால் அடிவைப்பு முறைகளிலும், உடம்பு அசைவு முறைகளிலும் உள்ள கவனங்கள் கை அசைவு முறைகளில் காணப்படவில்லை.

இடப்புறம் வலப்புறம் என ஆட்ட அசைவுக்கூறுகள் முறையே அமைகின்றன. முன், பின், பக்கவாட்டுக்கள் எனக் காலடி வைப்புக்கள் செய்வதும், அமைதி நிலையில் தொடங்கி ஒவ்வொரு ஆட்ட அசைவுக்கூறும் வேக நிலையில் செல்லும் நடைமுறை பெரும்பாலும் காணமுடிகிறது.

கால்கள் உயரத் தூக்குதல், நின்றாடுதல், அமர்ந்தாடுதல், குதித்தல் போன்ற ஆட்ட அசைவுக் கூறுகள் தாளத்திற்கேற்ப அமைத்தாடும்போது ஆட்டக்கலைஞர்கள் தங்கள் உடம்பைச் சமன்[1] செய்துகொண்டு வேகத்திற்கிசைய ஆட்டத்தைத் தொடரும் பாங்கு சிறப்பாகக் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

கிழக்கு - மேற்கு, தெற்கு - வடக்கு, வட்ட வலத்தில் இடப்புறம், வலப்புறம் எனத் திசை முக ஆட்டங்கள்[2] இயல்பாக நடைபெறக் காணமுடிகிறது.

கரகாட்டம், தெருக்கூத்து போன்ற ஏனைய நாட்டுப்புற நிகழ்த்துக் கலை வடிவங்களோடு குறவன் குறத்தி ஆட்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 'கிர்க்கி'[3] எனும் வேகச் சுழற்சி ஆட்டம் குறைந்த அளவிலேயே இதில் உள்ளது.

கால்களை உயர்த்தி நெற்றிக்கு நேர் தூக்கி ஆடுவது, பல்டி அடித்தாடுவது போன்ற அசைவுக்கூறுகளில் 'சர்க்கஸ்' விளையாட்டினை நினைவு படுத்துகின்றன. இந்த ஆட்ட அசைவுக் கூறுகள் அண்மைக் காலத்தில் 'தற்குறியாக' அதாவது ஆசானின்றி ஆட முன்வந்தோரால் அறிமுகப்படுத்தப்பட்டன என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கதாகும்.[4] ஆட்ட அசைவுக் கூறுகள் 'சர்க்கஸ்' விளையாட்டுப் போல இருப்பினும் நேரம், தாளம் ஆகியவற்றின் ஒருங்கிணைவில் அமைந்திருக்கின்றன. இசைக்கருவியின் நடை, இசை, பாடல், ஆட்ட அசைவுக் கூறு ஆகியவற்றின் ஒருங்கிணைவுத் தன்மைகளையும் குறவன் குறத்தி ஆட்டத்தில் அமைந்துவரக் காண முடிகிறது.

இடை உறுப்பின் மத்தியிலிருந்து சுழற்றித் திருப்புதலான 'சின்னம்', பின்னிருந்து முன் பக்கமாக இடையைச் சுழற்றுதலான 'நிவ்ருத்தம்', எல்லாப் பக்கங்களிலும் சுழற்றுதலான 'பிரகம்பிதம்' போன்ற பரத நாட்டியத்தில் இடம்பெறும் 'இடை' அசைவுக் கூறுகள்[5] குறவன் குறத்தி ஆட்டத்தில் இலாவகமாகக் கையாளப்

பெறுகின்றன. இந்த இடை அசைவுக் கூறுகளையே பாலுணர்வு பட அசைத்துக் கொள்ளும் முறை பார்வையாளர்களுள் சிலரை மனவேறுபாடு கொள்ள வாய்ப்பளித்து விடுகிறது.

உடலைத் தலை, மார்பு, பக்கங்கள், கைகள், இடை, பாதங்கள் ஆகிய அங்கங்களாகச் செவ்வியலார் பிரிப்பர்.[6] தோள்கள், மணிக்கட்டுக் கரங்கள், கழுத்து, துடை, வயிறு, பின்பாகம், முழங் கால்கள், முதுகு ஆகிய உட்பிரிவுகள் 'திரி ஆங்கங்கள்' என்பர். குதிகால், பாத விரல்கள், கை விரல்கள் ஆகியவற்றை 'உடலிலுள்ள உபாங்கம்' எனக் கூறுவர். மற்றும் கண் இமை, புருவம், விழி, கன்னம், மூக்கு, வாய், உதடு, பற்கள், நாக்கு, முகவாய், சுவாசம், வதனம் ஆகியவற்றை 'முகத்திலுள்ள உபாங்கம்' என மேலும் பிரிப்பர். மேற்சொன்னவற்றுள் திரி ஆங்கங்கள், உடல் உபாங்கங்கள் ஆகியன குறவன் குறத்தி ஆட்டத்திலும் இடம் பெறுகின்றன. மேலே காட்டியுள்ள முகத்திலுள்ள உபாங்கங்கள் குறவன் குறத்தி ஆட்டத்தில் சிறப்பாக இல்லை.

ஆண் பெண் இணைவு நிலை என்பது இவர் தம் பாலியல் உணர்வு கொண்ட ஆட்ட அசைவுகளில் காண முடிகிறது. நின்றாடல், அமர்ந்தாடல், உருண்டாடல் ஆகிய ஆட்ட அசைவு நிலைகளில் மனிதனின் காதல் வெளிப்படுத்தப்படுகிறது. குறவன் ஆடும் ஆட்ட அசைவுக் கூறுகளை எல்லாம் குறத்தியும் விட்டுக் கொடாமல் போட்டி மனப்பான்மையோடு ஆடுதல் என்பது உழைப்பின் பங்கு நிலையை உணர்த்துவதாக அமைகிறது. குறவனும் குறத்தியும் இணைந்து ஆடுவது ஒருவனுக்கு ஒருத்தி எனும் பண்பாட்டினை வெளிப்படுத்துவதாக உய்த்துணர இடமுண்டு.

### 2.2. இசைக்கருவிகள்

தோலிசைக் கருவிகளும், துளை இசைக் கருவிகளும் குறவன் குறத்தி ஆட்டத்திற்கு வாசிக்கப்படும் நையாண்டி இசைக் கருவிகளாக உள்ளன. தவில், பம்பை, தமுக்கு, உறுமி போன்ற தோலிசைக் கருவிகளையும், நாயனம், ஒத்தூதிக் குழல் போன்ற துளை இசைக் கருவிகளையும் இணைந்த நிலையில் கலைஞர்கள் பயன்படுத்துகின்றனர்.

நையாண்டி இசைக் கருவியாளர்களுள் நாயனக் கலைஞருக் கும், தவில் இசைக் கலைஞருக்கும் ஏனைய இசைக் கருவியாளர் களும், ஆட்டக் கலைஞர்களும் கூடுதல் மதிப்பளிக்கின்றனர். இசை,

பாடல் ஆகியவற்றில் கேட்பதற்கு உரிய பங்கினை ‘நாயனம்’ செய்கிறது. காலடி வைப்புகளுடன் அங்க அசைவுகள் செய்வதனைப் பார்ப்பதற்காகவும், கேட்பதற்காகவும் ஆகும் பங்களிப்பினைத் தவில் இசைக்கருவி செய்கிறது. எனவே, கேட்பதற்கும், பார்ப்ப தற்கும் ஆதாரமாக விளங்கும் நாயன இசைக் கலைஞருக்கும் தவில் இசைக் கலைஞருக்கும் ஏனையோரால் கூடுதல் மதிப்பு அளிக்கப் படுகிறது.

குறவன் குறத்தி ஆட்டத்தில் தவில் இசைக் கருவியே முதலில் வாசிக்கப்படுகிறது. பின்னர் ஏனைய தோலிசைக் கருவிகள் இடம் பெறுகின்றன. தோலிசைக் கருவிகளின் வருகைக்கு அடுத்து துளை இசைக் கருவியான நாயனம் வாசிக்கப்படுகிறது. [7]

## 2.3. பாடல், இசை, இசைக்கருவிகள் பங்கு

இசைக்கருவிகளின் இயக்கமின்றியோ, ஆட்டப் பாடலின்றியோ குறவன் குறத்தி ஆட்டம் இல்லை. குறவன் குறத்தி ஆட்டப் பாடலின் இசையாவும் நாட்டுப்புற இசை வகைகளைக் கொண்டுள்ளன. நையாண்டி இசை வகைகள், சிந்து இசை வகைகள், தெம்மாங்கு இசை வகைகள் ஆகியவற்றில் இந்த ஆட்டப் பாடல்களின் இசை அமைக்கப்பட்டுள்ளன.

ஏசல் பாடல், தர்க்கப் பாடல் போன்ற பாடல்களைக் குறவனும், குறத்தியும் பாடும் போது அவர்கள் பாடிய பாடலின் இசையை நையாண்டி இசைக் கருவியாளர்கள் வாங்கி வாசிப்பது வழக்கம். இவ்வாறு ஆட்டக் கலைஞர் பாடிய பாடலை இடையிடையே இசைக் கருவியாளர்கள் வாங்கி வாசிக்கும்போது அந்த வாசிப்புக்கேற்ப ஆட்டக் கலைஞர்கள் ஆடுவது இயல்பு. இதன் வழியே இசைக் கருவியாளர்களுக்கும், ஆட்டக் கலைஞர்களுக்கு மிடையே உறவு நிலை நெருக்கப்படுத்தப்படுகிறது. அத்தோடு இசைக் கருவியாளர்களுக்கும், ஆட்டக் கலைஞர்களுக்கும் பங்கீடு என்பது போதுமானதாகவும், பொருத்தமானதாகவும் அமைகிறது.

### 2.3.1. பாடல்

*“பச்சப் பாசி பவளப்பாசி*
*வாங்கலியோ ஆயாலோ*
*பச்சப் புள்ளைக்குக் கோத்துப்போட்டா*
*நல்லா இருக்கும் ஆயாலோ”* [8]

**2.3.2.** நாயனம் வாசிப்பு நடை

*தித்திரித்தி தித்தி தித்தி*
*தித்திதித்திரி தித்தித்தீ*
*தித்திரித்திரி தித்தித்தீதீ*
*தித்தித்தீதி தித்தீதி* [9]

**2.3.3.** செவ்வியல் இசையாளர் சந்த அமைப்பு

*நிஸரிகாகம மமம பாதமா*
*மகமகரிகம ரிஸரிக மா*
*மகம பாபம மகம கரிஸநி*
*கமக ரிஸநி ஸாஸாஸா* [10]
*(மாயா மாளவ கௌள சுரங்கள் இம்மெட்டில் வருகிறது)*

**2.3.4.** தவில் வாசிப்பு நடை

*திங்க்த்த தாதா தாக்கிட தாதா*
*தக்கிட திங்த்தா தாதாதா*
*திங்க்த்த தாதா தாக்கிட தாதா*
*தக்கிட திங்த்தா தாதாதா* [11]

**2.3.5.** பம்பை வாசிப்பு நடை

*சிம்ப்சும் சும்பக் சிம்சும் சும்பக்*
*சிம்ப்சும் சும்பக் சிம்ப் சும்பா*
*சுப்புஞ்சும் சும்பக் சிம்ப் சும்பாசும்*
*சுப்பஞ்சும் சும்பக் சிம்ப் சும்பா* [12]

**2.3.6.** தமுக்கு வாசிப்பு நடை

*டக்கிக்குங்கடக் டக்கிக்குங்டக்*
*தாகிடதா டக்கு தாகிடதா*
*டக்கிக்குங்டக் டக்கிக்குங்கடக்*
*தாகிடதா டக்கு தாகிடதா* [13]

**2.3.7.** முடிவுரை

நின்றாடல் முறை, அமர்ந்தாடல் முறை, உருண்டால் முறை என ஆட்ட அசைவுக் கூறுகளை வகைப்படுத்திக் காணும்போது குறவன் குறத்தி ஆட்டத்தில் நின்றாடல் முறையே மிகுந்த அசைவுகளைக் கொண்டுள்ளது.

ஆட்ட அசைவுக் கூறுகளுள் சிலவற்றை இன்று சர்க்கஸ் விளையாட்டுக்களைப் போல ஆக்கியுள்ளனர். எனினும் தாளத்தில் ஒருங்கிணைவு உண்டு.

பாலியல் உணர்வுபட ஆடும் ஆட்ட அசைவுக் கூறுகள் ஆசான் இல்லாமல் தற்குறியாக ஆட வந்த கலைஞர்களிடம் நிறைந்து காணப்படுகின்றன.

குறவன் குறத்தி ஆட்டப் பாடல்கள், நையாண்டி இசை வகைகள், தெம்மாங்கு வகைகள், சிந்து போன்ற இசை வகைகள் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ளன. ஆடல், பாடல், நாயன இசை, ஏனைய தாள இசைக் கருவிகள் வாசிப்பு நடை ஆகியன ஒருங்கிணைந்துள்ளன.

### அடிக்குறிப்புகள்

1. The most important characteristic of the dance is the coordination of foot movement with the various rhythms of the drums, hand movements although secondary are important because they balance the lines of the body with the movements of the feet.
   'Music and dance' Yaksagana A dance drama of India, Martha bush Ashton, 2. Bruce Christie.
2. The circular dance movement is considered an inspiration from the sun- the movement being "Sun wise" or clock wise, east - south - west - north. Folk plays and Dances of Kerala. M.D. Raghavan, p. 53.
3. 'கிர்க்கி' என்பது வலப்புறமோ, இடப்புறமோ உடம்பைச் சுழற்சி செய்து நின்ற நிலையில் ஆடுவது.
4. 1.தகவல்: குறத்தி ஆட்டக் கலைஞர் மல்லிகா, வடக்கு வாசல், தஞ்சாவூர். நாள் : 11.8.1987; 2. தகவல் : கணவன் மனைவியான பிச்சைமுத்து, ஜெயா (குறவன் - குறத்தி) புதுக்கோட்டை, நாள் : 10.7.1987.
5. டாக்டர் பத்மா சுப்பிரமணியம், பரதக்கலைக் கோட்பாடு, பக். 49.
6. மேலது, பக். 10

7. குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெறும் மேற்கண்ட இசைக் கருவிகளின் செய்முறை விளக்கம், இயக்க முறை விளக்கம், செப்பனிடல் முறை விளக்கம் ஆகியன இந் நூலாசிரியரின் (கே.ஏ. குணசேகரன்) நாட்டுப்புற ஆட்டப் பாடல்கள் (இராமநாதபுரம் மாவட்டம் - கிழக்கு) எனும் அச்சில் வெளிவராத பிஎச்.டி., ஆய்வேட்டில் இடம் பெறக் காணலாம். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக அளிக்கப் பெற்றது. நவம்பர் 1981.

8. காண்க : பி.இ. பாடல் 1, வரிகள் 28 - 31

9. தகவல் : செல்வராசு, நாயனக் கலைஞர், ரெட்டிபாளையம், தஞ்சாவூர். வயது 43. நாள் : 28.9.1987

10. தகவல் : திருமதி ஞானாகுலேந்திரன், இணைப் பேராசிரியர், இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

11. தகவல் : புலியடிதம்மம் செல்வம், தவில் கலைஞர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், வயது 40, நாள் : 11.10.1987

12. தகவல் : ஜோதி, உறுதிக்கோட்டை, இருப்பு: ரெட்டிப் பாளையம், தஞ்சாவூர், வயது 31. நாள் : 3.8.1987

13. மேலது.

# 3. ஆட்டப் பாடல்கள்

## 0.3. முன்னுரை

களஆய்வில் கிடைத்துள்ள இந்த ஆட்டப் பாடல்கள் பற்றிய ஆய்வாக இது அமைகிறது. குறவன் குறத்தி ஆட்டப் பாடல்கள் வட்டாரங்களுக்கு வட்டாரம் வேறுபடும் முறை, பாடும்போது மேற்கொள்ளும் கலைஞர்களின் உத்தி முறை ஆகியன விரிந்த நிலை ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டியதாகும். குறுகிய கால ஆய்வுச் சிற்றேடு தயாரிக்கும் இதில் அந்த விரிந்த நிலை ஆய்வுக்கான வாய்ப்பு இல்லை. எனினும் ஆட்டங்கள் பற்றிய ஆய்வின்போது களங்களில் கிடைத்துள்ள ஆட்டப் பாடல்களின் கதைச் சுருக்கம், உதிரிப் பாடல்கள், வாழ்க்கை நிலை, காதல் உணர்வு வெளிப்படும் முறை, வினா விடைத்திறன், பாடல் அடிகளும், பாடுவோரின் உத்தி முறைகளும் இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

## 3.0. ஆட்டப் பாடல்களின் கருத்துச் சுருக்கம்

குறவன் குறத்தி ஆட்டத்தின் சுய அறிமுகப் பாடலில் நரிக் குறவர்களின் பிழைப்புத் தொழில் பேசப்படுகிறது.

"காட்டு ராசா வேடுவர் சிங்கி
ஓமைனா டியாலோ – இந்த
கரையோரம் சிக்கிவந்த
ஓ மைனா டியாலோ

பச்சை மலை நரிக்குறவர் நாங்களே சாமி - இந்த
பார்பூராம் சுத்தி வந்தோம் கேளுங்க சாமி'' [1]

என்னும் பாடல் வரிகளின் மூலம் காடுகளில் வேட்டையாடிப் பிழைக்கும் வேடுவர்களே பின்னர் குறவர்களில் ஒரு பிரிவினர் ஆகிய நரிக்குறவர் என்று கருத இடமளிக்கிறது.

பொங்கல் வைத்துப் பலி செய்து சடங்கு நிறைவேற்றும் இம்மக்களின் வாழ்க்கைச் சடங்குகள் குறித்த செய்தியும் இங்கே காண முடிகிறது. [2] இவர்கள் தெருக்களில் வாங்கியுண்ணும் பழக்க முடையவர் என்பதும் இந்த ஆட்டப் பாடல்களின் வழி அறியலாம்.

நாடோடி வாழ்க்கை கொண்ட இம்மக்களின் வாழ்க்கை முறை குடியிருப்புக்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுக் காணும்போது எண்ணிறைந்த வேறுபாடுகள் காணப் படுகின்றன. [3]

குறவனும் குறத்தியும் பேசிக்கொள்ளும் தருக்கப் பாடலாக இரண்டாவது பாடல் அமைகிறது. பாட்டோடு கலந்து உரையும் இதில் இடம் பெறுகிறது. பாடல் வரிகள் சொல்லும் செய்தியே உரையாகவும் அமைகிறது. இந்த உரை கோமாளி மற்றும் குறத்தி இருவரிடத்திலுமே அதிகம் இடம்பெறக் காணமுடிகிறது. [4] குறத்தி வசனம் பேசிவிட்டு பாடல் பாடும் போது 'சுதி' அதாவது குரல், தாளம் மாறாமல் அமைவதைக் கள ஆய்வில் அறிய முடிகிறது.

இவர்கள் பாடும் தருக்கப் பாடலில் குறத்தியின் பயணம், குறத்தி ஆபரணங்கள் ஏதும் அணியாது நிற்கின்ற நிலை ஆகியவை கணவனாகிய குறவனால் சந்தேகிக்கப்படுகிறது.

''எங்கே நீ போயிருந்தாயோ, அத எனக்குச் சொல்ல வேணுமடி, மறைக்காமல் சொல்லடி குறத்தி, வகை எனக்குச் சொல்ல வேணுமடி, உண்மையைச் சொல்ல வேணுமடி, கவனமாக எடுத்துச் சொல்லடி, காரணத்தைச் சொல்ல வேணுமடி, சேதி எனக்குச் சொல்ல வேணுமடி, சரியா எனக்குச் சொல்லடி'' போன்ற குறவனது வார்த்தைகளின் படி சந்தேகம் உறுதிப்படுத்தப்படுகிறது. [5]

''பல ஊரு சென்று
பாசி-ஊசி விக்கப் போனேன்
பலத்த மழையினாலே - அடே குறவா
வர எனக்கு முடியவில்லை'' [6]

''பொட்டு மறஞ்சுப் போச்சுடா'' [7]

''குத்தங்கொறை ஏதுமில்லையடா, வேற ஒன்னும் சேதி இல்லையடா, மாற்றங்கள் ஏதுமில்லையடா'' போன்ற வார்த்தைகள் குறவனின் சந்தேகங்களுக்குப் பதிலாக அமைகிறது.

மூன்றாவது பாடல் ஏசல் பாடலாக உள்ளது. இவர்களது ஏசல் பாடலில் காதல், ஊடல் ஆகியவை மையக்கருத்தாக இடம் பெறுகின்றன. இப்பாடலின் 12வது வரியில், ''தொடர்ந்து வாடா நடந்து போவோம்'' என்று குறத்தி குறவனை அழைக்கிறாள். இதே பாடலின் 28வது வரியில் ''ஒங்கூட வரமாட்டேன்'' என்று மறுதளித்துப் பேசுவதாகவும், அதாவது ஊடல் கொள்ளுவதாக அமைவதை இங்கு எண்ணிப் பார்க்கலாம்.

நான்காவதான சந்தைக்கடைப் பாடலில் சந்தையில் விற்கும் பொருள்களை வாங்கித் தருமாறு குறத்தி வேண்டுவதான கருத்து அமைகிறது. இந்தப் பாடல் 'கருப்பாயி ஆட்டம்', 'நாலுபேர் ஆட்டம்' என்று சொல்லப்படும் 'ராஜாராணி ஆட்டம்' ஆகிய கரகாட்டத்தின் துணைநிலை ஆட்டங்களிலும் இடம்பெறக் காணலாம்.

குறவன் குறத்திக் காதல் பாடலான ஐந்தாவதில் முதல் 26 வரிகளில் குறவனும், குறத்தியும் பாடுவதான ஏசல் பாடல் போல் அமைந்துள்ளது. 27வது பாடல் வரி தொடங்கி 46வது பாடல் வரிகள் வரை குறவன் மட்டும் பாடுவதாக அமைகிறது. இதில் குறத்தியைத் திட்டுவதுபோலவே கருத்தமையக் காணமுடிகிறது. எனினும் காதல் உணர்வுபட அமையும் விதத்தை அறிய முடிகிறது.

குறவனும், குறத்தியும் பேசிக் கொள்வதாக அமையும் ஆறாவது பாடலில் பிழைப்பு இல்லையே என குறவன் மன வேதனை கொள்கிறான். மன வேதனை கொள்ள வேண்டாம் என்றவாறு குறத்தியின் பேச்சு அமைகிறது. இதில் குறத்தியின் மனம் அறியப்படுகிறது.

ரு.டி.6179
2006



ஏழாவது பாடலில் சொல்லப்படும் செய்தியாவது தன் ஓடத்தில் பயணம் செய்யும் இரு பெண்களை ராமசாமி திருமணம் செய்து கொள்வதாகக் கருத்தமைகிறது. இந்த ஓடக்கரை ராமசாமி கதை ராஜாராணி ஆட்டத்திலும் நடத்திக் காட்டப்படுவதைக் காணலாம்.

எட்டாவது பாடலில் ஆட்டிடையன் மாற்றுருவம் கொள்ளும் முறைக் கூறப்படுகிறது.

பாம்பாக ரூபங்கொண்டு
பாதையை மறைப்பேனடி
பாம்பாக ரூபங்கொண்டு
பாதைய மறைச்சாயானால் - நான்
ஊர்க்குருவி ரூபங்கொண்டு
ஒசரப் பறந்துடுவேன்
ஊர்க்குருவி ரூபங்கொண்டு
ஒசரப் பறந்தாயானால் - நான்
...........

தமிழ் இலக்கணத்தில் கூறப்படும் மடக்கணிக் கூறுகள் இப்பாடலில் காணப்படுகின்றன. கற்பனை வளம் என்பது இப்பாடலில் சிறப்பாக அமைந்திருக்கிறது.

பாடல் ஒன்பதில் குறவனுக்கும், குறத்திக்கும் இடையே ஏற்படும் சண்டை நிகழ்ச்சி விளக்கப்படுகிறது. இச்சண்டையில் 'வசவுகள்' இயல்பாக இடம் பெறுவதை அறிய முடிகிறது.

பாடல் பத்தில் காதல் உறவும், பாடல் பதினொன்றில் பிணக்கும் இடம் பெறுகின்றன.

சொளவம், 1, 2 ஆகியவற்றில் குறவனுக்கும், குறத்திக்கும் இடையே வசவுகள் காணப்படுகின்றன. சொளவம் 3, இவற்றி லிருந்து வேறுபட்டு அமைகிறது. 'சொளவங்கள்' பெரும்பாலும் நேரத்திற்கு ஏற்ப இட்டுக் கட்டிக் கொள்ளப்படுகின்றன.

ரு.டி. 6179

### 3.1. உதிரிப் பாடல்கள்

குறவனும், குறத்தியும் பாடிக்கொள்ளும் பாடல்கள் பல இவர்தம் ஆட்டக்கலைக்கோ, வாழ்க்கைக்கோ நெருக்கமான தொடர்பின்றி உள்ளன.

*''ஓடை நல்லாக் கடந்து வாடி - குறத்தி*
*ஓடிப்போவோம் தஞ்சாவூரு*
*சாலை நல்லாக் கடக்கமாட்டேன் - குறவா*
*சந்தப் பேட்டை தாண்ட மாட்டேன்''*

எனும் பாடல்வரிகளில் இடம் பெறும் குறத்தி, குறவா போன்ற இசை இடைவிளிச் சொற்கள் இடம் பெறாமல் இருக்குமேயாயின் தெம்மாங்குப் பாடலின் ஒருவகையான ஏசல்பாடல் போன்றாகி விடும்.

*''சாத்தூருச் சந்தையிலே ஏமாமா - எனக்குச்*
*சைசான சேலை வாங்கித்தா மாமா''* [8]

எனும் நையாண்டியிசைப் பாடலிலும் மேற்சொன்ன கருத்து ஒத்துவரக் காணமுடிகிறது.

*''ஆளில்லாக் காட்டுக்குள்ளே*
*ஆடு மேய்க்கும் சின்னத்தம்பி*
*கருவேலங்கா முள்ளுக்குத்தி*
*காலுரெண்டும் நோகுதில்லே''* [9]

ஆடு மேய்க்கும் தொழில் குறவர் இனத்துக்கு உகந்தது அல்ல என்ற செய்தி பெறப்படுகிறது. இப்பாடல் நாலடித் தெம்மாங்கு வகையினதாகும். இவை போன்ற பாடல்கள் தொழில் தளங்களிலும், வேறு சில சூழல்களிலும், வெவ்வேறு இன மக்களால் பாடக் கேட்க முடிகிறது.

*''அட பொள்ளாச்சி சந்தையிலே*
*புள்ளப் பெத்தவளே*
*புள்ள உள்ள தலை மொறைக்கும்*
*புடுங்குப் பட்டவளே - நொக்கா*
*புடுங்குப் பட்டவளே - நொய்த்தப்*
*புடுங்குப் பட்டவளே''* [10]

என்ற வரிகளை இசைத்துப் பாடக் கேட்கும்போது, சொளவங்களை யும் மெட்டிசைத்துப் பாடும் முறை குறவன் குறத்தி ஆட்டப் பாடலில் உள்ள பாங்கு அறியப்படுகிறது. இதுபோன்று பாடல்களுக்கிடையே நெருக்கமான தொடர்பின்றி உதிரிப் பாடல்கள் என்று கூறுமளவிற்குப் பல பாடல்களைக் காணலாம்.

## 3.2. வாழ்க்கை நிலை

கிடைத்துள்ள பதினோரு பாடல்களில் முதல் இரண்டு பாடல்களில் வாழ்க்கை நிலை விளக்கப்படுவது போல் ஏனைய பாடல்களில் வாழ்க்கை நிலையின் விளக்கமில்லை. பிற பாடல்களில் காதல், வசவு, ஊடல் என்பவையே பெரிதும் வெளிக்காட்டப் படுகின்றன.

முதல் ஏழாவது பாடல்வரி தொடங்கி 20 வது வரிகள் வரை பர்மா சண்டை, சீனா சண்டை ஆகிய காலத்தின்போது குறவர்கள் கடல் கடந்து வந்தவர்கள். ஜவஹர்லால் நேருவிடத்தில் அனுமதி கேட்டு தென்னாட்டுக்கு வந்தவர்கள் போன்ற குறவர் தம் வரலாறு பற்றியசெய்திகள் விளக்கப்படுகின்றன. இவை குறவர் தம் வரலாறு பற்றிய உண்மையன்று. இரண்டாவது உலகப் போரின் போது இந்தியாவிற்கு அகதிகளாக வந்தோரை அரசு ஆதரித்தது. இவ்வாறு அகதிகளாக வந்தோர் என்று சொல்லி ஆதரவு பெறுவதற்காக குறவர்கள் கூறி வந்திருக்கலாம். நரிக்குறவர்கள் அல்லது குறவர்கள் என்போர் இந்தியாவைச் சேர்ந்தவர்களே, குறிப்பாகத் திராவிடப் பாரம்பரியத்தைச் சார்ந்தவர் என்று மொழியியலார் கூறுவர்.[11] எனினும் மொழியியலார் ஆய்வுக்குட்பட்ட கருத்து இதுவாகும். குறவர்களில் சில பிரிவினர் செப்படி வித்தைக்காரர் என்றும், தந்திரமாக ஏய்த்துப் பிழைப்பவர் என்றும் எட்கார் தர்ஷ்டன் தமது நூல் ஒன்றில் குறிப்பார்.[12]

பாசி, பவளம், ஊசி, முள்வாங்கி, கற்றாழையில் இருந்து எடுக்கப்பட்ட ஒருவித நூல், நூலால் செய்யப்பட்ட கயிறு ஆகிய பொருட்களையும், காடை, கௌதாரி, மைனா, கொக்கு, குயில், குருவி போன்ற வேட்டைப் பொருள்களையும் தெருக்களில் கொண்டு சென்று கூவி விற்றுக் குறவர்கள் பிழைப்பு நடத்துகின்றனர். விற்பனைத் தொழில் வழியே இவர்களது வருமானம் போதுமான தாக இல்லை. எனவே, வீடுகளில் வாங்கியுண்ணும் பழக்கம் இன்றளவும் இவர்களிடையே இருந்து வருகிறது.

காளியை குலதெய்வமாக வணங்கும் இக்குறவர்கள் எருமைக் கடா வெட்டி பொங்கல் வைத்து வழிபடுகின்றனர். குறவர்களும் தனித்தப்பட்ட இனம் சார்ந்த மக்களும், நிகழ்த்தும் குறவன் குறத்தி ஆட்டத்தில் நரிக்குறவர் எனும் ஒரு பிரிவினரின் வாழ்க்கையை மட்டுமே போலச் செய்து காட்டுகின்றனர். ஏனைய குறவர் இனம் பற்றிய வாழ்க்கையோ, தாழ்த்தப்பட்ட இனத்தவரான பறையர், சக்கிலியர் ஆகியோர் பற்றிய வாழ்க்கையோ ஆட்டப் பாடல்களில் பெரிதும் விரித்துக் காட்டப்படவில்லை.

*''பல ஊரு சென்று*
*பாசி விக்கப் போனேன்''* [13]

*''வேகாத வெய்யிலிலே*
*கைவீசி நடக்கையிலே*
*வேர்வை பட்டதாலேடா''* [14]

என்பன போன்ற ஆட்டப் பாடல் வரிகளில் இம்மக்களின் கடுமை யான உழைப்பு காட்டப்படுகின்றது.

சந்தைக் கடைப் பாடலில் குறத்தியின் விருப்பங்கள் சொல்லப்படுகின்றன. சேலை, கொலுசு போன்ற பொருட்களும், பூ, தின்பண்டங்கள் போன்ற பொருட்களும் வேண்டுகிறாள் குறத்தி. வாரச் சந்தைக் கடைகளில் விற்கும் கொலுசு, சேலை ஆகியவை விலையுயர்ந்த பொருள்களாக இருக்க மாட்டா என்பதும் இங்கு அறிய உள்ள செய்தியாகும். இம்மக்களின் வாழ்க்கைத் தரத்திற் கேற்பவே இம்மக்களின் விருப்பங்களும் அமைந்துள்ளமை இங்கு அறிய முடிகிறது.

ஏனைய ஆட்டப் பாடல்கள் கரகாட்டத்தின் வேறு சில துணை நிலை ஆட்டப் பாடல்களாகவும் உள்ளன. இருப்பினும், இவற்றில் குறவன் குறத்தியின் வாழ்க்கை பெரிதும் காண முடியவில்லை.

*''அடப்பாத்தா நல்லாப் பகட்டுதடா - ஒன்னப்*
*பரிசம் போடச் சொல்லுதடா''* [15]

*''மாசி நல்லா மறையட்டுண்டி*
*மனக்கவலை தீர்த்துக்கலாம்''* [16]

மேற்கண்ட பாடல் வரிகள் வழியே 'பரிசம் போடுதல்' மாசி மாதத்தில் செயற்பாடுகள் செய்தல் போன்ற செய்திகள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

கார்த்திகை மாசத்திலே கால் கடுத்த பயணத்திலே, சித்திரை மாசத்திலே மாமா, வீட்டிலே இருக்காமலே வீதியிலே திரிஞ்சதாலே, என்பன போன்ற ஆட்டப் பாடல் வரிகளில்[17] எல்லாக் காலங்களிலும் இம்மக்களின் உழைப்பு தொடர்கின்றது எனும் செய்தி அறியப்படு கிறது. வீட்டில் இருந்து பொங்கி உண்ணும் வழக்கத்திற்கு நேர்மாறாக தெருக்களில் இவர்களது வாழ்க்கை இன்னும் இவர்களைப் போலவே திரிந்து கொண்டிருக்கிறது என்னும் செய்தி இங்கு வருத்தத்தோடு எண்ண வேண்டியுள்ளது.

## 3.3. காதல் உணர்வு வெளிப்படும் முறை

குறவன், குறத்தி ஆட்டப் பாடல்களில் 'காதல் உணர்வு' பரவலாக வெளிப்படுவதனை ஏலவே கண்டுள்ளோம். இங்கு காதல் உணர்வு வெளிப்படும் முறையினை அறியலாம். குறவனோ, குறத்தியோ காதல் வெளிப்பாட்டை மறைத்துக் கூறும் மனம் கொண்டிருக்கவில்லை. இவர்களது பாடல்களில்,

''மாடி மேலே மாடி கட்டி - குறவா
மாரளவு சன்னல் வைத்து
எட்டி எட்டிப் பார்த்தாலுமே - குறவா
எறவப் புருசன் நீதானடா ''[18]

''பழக்க மில்லாத குறத்திகிட்டே - இப்ப
பழக இப்பப் பயமாயிருக்கு''[19]

என்பன போன்ற பாடல் வரிகளில் இவர்களின் ஊடல் வெளிப்படக் காண முடிகிறது.

''மாமன் மகன் கூட்டு வண்டி - இப்ப
ஒத்தையிலே போகுதில்லை''[20]

''உம்முன்னு வார்த்தை சொன்னா
என்னாங்க மோசம்''[21]

போன்ற ஆட்டப் பாடல் வரிகளில் காதல், இலை மறையாகப் பேசப்படுகிறது. இவ்வாறு இலை மறைவாகப் பேசுவதை விட ''கண்ட கண்ட நேரமெல்லாம் கட்டிப்புடிக்கத் தோணுதடி'', ''பொம்பள மனசு ஒங்களக் கண்டதும் போதையாக இருக்கு - ஏ மச்சான்'' என்று வெளிப்படையாகக் 'காதல்' பேசப்படுவதே பெரிதும் இவர்களிடையே காணப்படுகிறது. ஆட்டப் பாடல்களில் கிடைக்கும் பாடல்களில் பல நாட்டுப்புற மக்கள் தொழிற் களங்களிலும், கலைஞர்களின் தொழிற்கலைகளிலேயும் பாடிக் கொள்ளும் பாடல்கள் என்பது இங்கு எண்ணிப் பார்க்கத் தக்கதாகும்.

## 3.4. வினா விடைத்திறன்

குறவனுக்கும், குறத்திக்கும் இடையே உள்ள ஆட்டப் பாடல்களுள் தர்க்கப் பாடல்கள், ஏசல் பாடல்கள் ஆகியவையே அதிகம் உள்ளன. இவற்றில் கேள்விக்குப் பதில் எனும் முறையிலேயே பாடல்கள் அமைந்துள்ளன.

பாடல் எண். 2-இல் குறவன் கேள்வி கேட்பவனாகவும், குறத்தி பதில் கூறுபவளாகவும் உள்ளாள். இதுபோலவே பாடல் எண். 8-இலும் கேள்வி வெளிப்படையாக இன்றி அமைய பதில் கூறுவதாக அமைகின்றது. இந்தப் பாடலில்,

''பாம்பாக ரூபங்கொண்டு
பாதைய மறைச் சாயானால் - நான்
ஊர்க்குருவி ரூபங் கொண்டு
ஒசரப் பறந்துருவேன்
ஊர்க்குருவி ரூபங்கொண்டு
ஒசரப் பறந்தாயானால் - நான்
செம்பறாந்து ரூபங்கொண்டு - ஒன்னைச்
செந்தூக்காத் தூக்கிடுவேன்...
...............
..............
தரையில் புல்லா மொளச்சாலுமே - நான்
காராம்பசு ரூபங்கொண்டு
கரும்பீருவேன் அந்தப்புல்லை.'' [22]

என்றவாறு செய்திகள் அமைகின்றன. பாம்புக்கு ஊர்க் குருவி, ஊர்க்குருவிக்குச் செம்பறாந்து, புல்லுக்குக் காராம்பசு என்ற பொருத்தங்கள் அமைவது போல 'உ.எக்குப் பொருத்தமான

வனாவேன்' என்ற கருத்தமையப் பதில் கூறுவது குறவனின் அறிவுத் திறனைக் காட்டுகிறது. குறவனின் அறிவுத்திறனுக்குச் சற்றும் குறைவில்லாமல் குறத்தியின் கற்பனை வளமும் உயர்ந்து விளங்கக் காணமுடிகிறது.

''பூமியிலே நான் தரிச்சுப்
பூவா மொளச்சிடுவேன்'' [23]

''மண்ணோடு மண்ணாகியே நான்
மறைபொருளா ஆயிடுவேன்'' [24]

என்பன போன்ற ஆட்டப் பாடல் வரிகளில் குறத்தியின் கற்பனைத் திறன் போற்றத்தக்கதாக அமைகிறது.

இதுபோலச் சொளவங்களிலும்கூட ஒருவர் சொளவம் பாட மற்றொருவர் பதிலுக்குச் சொளவம்பாடும் திறனும் சிறப்புடையதாக உள்ளது.

ஆட்டப் பாடல்களில் மட்டுமின்றி குறவன் குறத்தி ஆட்டப் பாடல்களிடையே பேசும் வசனத்திலும், மேற்சொன்ன வினா விடைத் திறன், கற்பனைத் திறன், அறிவுத்திறன் ஆகியவை விளங்கக் காணமுடிகிறது.

## 3.5. பாடல் அடிகளும் பாடுவோர் உத்தி முறைகளும்

ஆட்டப் பாடலடிகள் பெரும்பாலும் நான்கு நான்கு அடிகளாக அமைந்துள்ளன. பாடலடிகளில் வங்காளச் சிங்கி, அடே குறவா, ஏ குருவிக்காரா, நரிக்குறவா, குறத்தி, குறவா, இப்ப, ஏமாமா, எனக்கு, புள்ளே, இவ, எந்தனுக்கு, இந்த, சின்னப்பையா, ஏ! மச்சான், ஏ! புருசா, நீ, நான், ஒன்ன, சும்மா, அடியே, நோத்தா, நொக்கா, நொய்த்தே என்பன போன்ற இசையிடைச் சொற்கள், விளிச் சொற்கள், உறவு முறை விளிச் சொற்கள் போன்ற சொற்கள் இடம் பெறுகின்றன. இவை போன்ற சொற்களை ஆட்டப் பாடல்களில் இசையுடன் பாடும்போது பாத்திரங்கள் உணர்வுபடப் பேசி நடிப்பது போல் அமைகின்றது. பாத்திரங்கள் பார்வையாளர்கள் ஆகியோரிடையே எதிர்பார்ப்பு உணர்வினைத் தூண்டுவதாகவும் அமைய இம்முறை வாய்ப்பளிக்கிறது.

பாடல் அடிகளின் இடையிடையே வசனங்கள் அமை கின்றன. இந்த உரையிடையிட்ட பாடல்களைப் பாடும்போது கலைஞர்களின் சமயோசித உணர்வுகள் வளர்த்துக் கொள்ளப்படு கின்றன. ஆட்டப் பாடல்களிடையே வசனம் அமையும்போது அடுத்துப் பாடவிருக்கும் பாடல்களை நினைவு படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது. மேலும், பாடலின் பொருளையே வசனமாகப் பெரும்பாலும் கலைஞர்கள் பேசிக் கொள்வதால் பாடலின் பொருள் பார்வையாளர்களிடையே பளிச்சென வெளிப்படுத்தப்பட ஏதுவாகிறது.

குறவன் குறத்தி ஆட்டப் பாடல் அடிகள் வட்டாரத்துக்கு வட்டாரம் வேறுபடுகின்றன. இந்த வேறுபாடுகள் பாடலடிகளைக் கோர்வையாகப் பாடும் பாடலடி வைப்பு முறைகளில் காண முடிகிறது. ஆயினும் பாடலடிகளில் பெரிய மாற்றங்கள் ஏதும் காணப்படவில்லை.

பாடலடிகள் 100க்கு மேல் இல்லாதனவாக அமைகின்றன. குறைந்த பாடலடிகள் 15 அடிகள் வரை உள்ளன. சொளவப் பாடலடிகள் இதிலும் குறைந்த அளவில் இடம் பெறுகின்றன்.

## பாடுவோர் உத்தி முறைகள்

அடிகள் குறைவாக உள்ள பாடல்களைக் கலைஞர்கள் திரும்பப் பாடும் முறை, பின்பாட்டு முறை, வசனம் பேசும் முறை போன்ற முறைகளால் அதிக நேரம் பாடுவதற்கு அமைத்துக் கொள்கின்றனர்.

குறத்தியாலோ, குறவனாலோ ஒரு பாடல் தொடங்கும் போது அதே பாடலிசையிலேயே பாடலடிகள் தொடர்ந்து பாடி முடிக்கப் பெறுகின்றன.

குறவன் எந்த சுதியில் பாடல் பாடத் தொடங்குகின்றாரோ அதே சுதியிலேயே (குரல் தளம்) குறத்தியும் பாடுகின்றாள். வசனங்கள் பேசும் குரல் தளமும், பாடல் பாடும் குரல் தளமும் ஒன்றுபோல் இருக்க அதாவது உரத்த குரல் தளத்திலேயே அமைத்துக் கொள்ளக் கலைஞர்கள் கவனம் எடுத்துக் கொள்கின்றனர்.

## 3.6. முடிவுரை

ஆட்டப் பாடல் வரிகளின் மூலம் காடுகளில் வேட்டை யாடிப் பிழைக்கும் வேடுவர்களே பின்னர் குறவர்களில் ஒரு பிரிவினர் ஆகிய நரிக்குறவர் என்று கருத இடமளிக்கிறது.

நாடோடி வாழ்க்கை கொண்ட மக்களின் வாழ்க்கை முறை குடியிருப்புக்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுக் காணும்போது எண்ணிறைந்த வேறுபாடுகள் காணப்படு கின்றன.

குறவனும், குறத்தியும் பாடிக் கொள்ளும் பாடல்கள் பல இவர்தம் ஆட்டக் கலைக்கோ, வாழ்க்கைக்கோ நெருக்கமான தொடர்பின்றி உள்ளன.

குறவன் குறத்தி ஆட்டத்தில் பாடலில் நரிக்குறவர் எனும் ஒரு பிரிவினரின் வாழ்க்கையை மட்டுமே போலச் செய்து காட்டுகின்றனர். ஏனைய குறவர் இனம் பற்றிய வாழ்க்கையோ, தாழ்த்தப்பட்ட இனத்தவரான பறையர், சக்கிலியர் ஆகியோர் பற்றிய வாழ்க்கையோ ஆட்டப் பாடல்களில் பெரிதும் விரித்துக் காட்டப்படவில்லை.

குறவனுக்கும், குறத்திக்கும் இடையே உள்ள ஆட்டப் பாடல்களுள் தர்க்கப் பாடல்கள், ஏசல் பாடல்கள் ஆகியவையே அதிகம் உள்ளன. இவற்றில் கேள்விக்குப் பதில் எனும் முறையிலேயே பாடல்கள் அமைந்துள்ளன.

பாடலடிகள் 100-க்கு மேல் இல்லாதனவாக அமைகின்றன. குறைந்த பாடலடிகள் 15 அடிகள் வரை உள்ளன. சொளவப் பாடலடிகள் இதிலும் குறைந்த அளவில் இடம் பெறுகின்றன. அடிகள் குறைவாக உள்ள பாடல்களைக் கலைஞர்கள் திரும்பப் பாடும் முறை, பின்பாட்டு முறை, வசனம் பேசும் முறை போன்ற முறைகளால் அதிக நேரம் பாடுவதற்கு அமைத்துக் கொள்கின்றனர்.

### அடிக்குறிப்புகள்

1. பி.இ. 1 பாடல் வரி 87 - 92
2. மேலது, 61 - 64
3. மேலது, 57 - 60
4. காண்க. பி.கு. பாடல் எண். 2
5. காண்க. மேலது.
6. பி.இ. பாடல் வரி 5- 8
7. மேலது, 23-24
8. மேலது, 1-2
9. மேலது, 1-4
10. மேலது, சொளவம் - 2, வரி 5 - 11
11. Srinivasa Varma.G., "Yerukula Dialect".
12. E. Thurston, "Caste and Tribes of South India", Vol. IV, K. to M, and Vol. III. K.
13. பி.இ. பாடல் வரி, 5-6
14. மேலது, 23 - 34
15. மேலது, பாடல் எண். 9, வரிகள் 13 - 14
16. மேலது, 3-4
17. காண்க. பி. இ. ஆட்டப் பாடல் வரிகள்.
18. மேலது, ஏசல்பாடல் எண். ஒ, வரிகள் 20 - 32
19. மேலது, 35-36
20. மேலது, பாடல் எண். 5, வரிகள் 15- 16.
21. மேலது பாடல் எண். 15, வரிகள் 14 - 15.
22. மேலது, 25 - 40
23. மேலது, 43 - 44
24. மேலது, 53 - 54

# 4. குற்றாலக் குறவஞ்சியும் குறவன் குறத்தி ஆட்டமும் - ஓர் ஒப்பீடு

## 0.4. முன்னுரை

17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் குற்றாலத்தை அடுத்த மேலகரத்தில் வாழ்ந்த திரிகூடராசப்பக் கவிராயர் எழுதியது திருக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். இதனை குறவஞ்சித் தமிழ், குற்றாலக் குறவஞ்சி, குறவஞ்சி நாடகம் என்றெல்லாம் கவிராயரே சுட்டுகின்றார். குறவன் குறத்தி ஆகிய இரு பாத்திரங்களின் வாயிலாகத் திரிகூடநாதர் பெருமை கூறப்படுதல், இருவரது சந்திப்பிற்கும் திரிகூட ராசப்பர் துணை நல்குதல் போன்ற காரணங்களாலும் குறத்தி குற்றாலக் குறவஞ்சியின் முன்னும் பின்னும் இடம் பெறுகின்ற முறைமையினைக் கொண்டும் இது குறவஞ்சி, அதாவது 'குறத்தி' என்று பெயர் பெறவும் ஆனது.

குறவர் இனத்தவரும், குறவர் (குளுவர்) இனத்தவரைப் போல வேடமிட்டு ஆடும் ஏனைய இனம் (பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள்) சார்ந்த தொழிற்கலைஞரும் ஆடிப் பாடித் தொழில் செய்து பிழைக்கின்றனர். இக்கலைஞர்களால் குருவிக்காரன் ஆட்டம் என்றும், குறவன் குறத்தி ஆட்டம் என்றும் ஆடப்படும் இது பெரும்பாலும் நாட்டுப்புறங்களில் விடிய விடியக் கலை நிகழ்ச்சியாக அமைகிறது.

சிற்றிலக்கியம் என்று சொல்லப்படும் சிறு பிரபந்தத்தில் ஒன்றான குறவஞ்சியிலும் நாட்டுப்புறங்களில் நிகழ்த்துக் கலை வடிவங்களுள் ஒன்றாக நிகழ்த்தப்பட்டு வரும் குறவன் குறத்தி ஆட்டத்திலும் இடம்பெறும் பாத்திரங்களான 'குறவன் குறத்தி' அதாவது 'சிங்கன் சிங்கி' ஆகிய இருவரையும் இங்கு அறியலாம்.

நாட்டுப்புறக் கலை இலக்கிய வடிவங்களிலிருந்தே செவ்வியல் கலை இலக்கியங்கள் உருவாகியுள்ளன என்ற கருத்து அண்மையில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. இக்கருத்து நாம் இங்கு எடுத்துக் கொண்டுள்ள நாட்டுப்புறக் கூத்துக் கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்திலிருந்து செவ்வியல் கலை வடிவமான குற்றாலக் குறவஞ்சி நாடகம் உருவாகி ஏற்புடையதாக அமைகிறதா என இங்கு அறிவது நோக்கமாக அமைகிறது.

## 4.0. குற்றாலக் குறவஞ்சி அமைப்பு

குற்றாலத்தருகே அமைந்துள்ள மேலகரத்தில் வாழ்ந்த கவிராயர் எழுதியுள்ள குற்றாலக் குறவஞ்சி எனும் நாடக இலக்கியம் (குற்றாலக் குறவஞ்சி நாடகம்) பாயிரம் தொடங்கி வாழ்த்து ஈறாக முடிகிறது.

ஐங்கரன் துதி, முருகன் துதி, திரிகூடநாதர் துதி, குழல்வாய் மொழியம்மை துதி, தேவாரம் பாடிய மூவர் துதி, அகத்தியர், மாணிக்கவாசகர் துதி, கலைமகள் துதி என்றவாறான சாமி வணக்கம், நூற்பயன், அவையடக்கம் என்று செவ்வியல் இலக்கியங்களின் தொடக்கங்கள் போலவே இதுவும் தொடங்கப் பெறுகின்றது.

குறவஞ்சி நாடகம் உண்மையில் கட்டியங்காரன் வரவினால் தொடங்கப் பெறுகிறது. திரிகூட ராசப்பர் பவனி வருதல், பவனி காணப் பெண்கள் வருதல், தலைவி வசந்தவல்லி வருகை, திரிகூட நாதரைக் கண்டு வல்லி மையல் கொள்ளுதல், வசந்தவல்லி பாங்கியைத் தூது விடுத்தல், குறத்தியின் வருகையும் சுய அறிமுகம் செய்து கொண்டு குறி கூறுதலும், சிங்கன் குறத்தி (சிங்கி)யைத் தேடி வருதல், சிங்கியைத் தேடும்படி தோழன் நூவனுக்குச் சிங்கன் வேண்டுதல், சிங்கன் தேடி வந்து குற்றால நாதர் அருளால் சிங்கியைக் காணுதல், சிங்கன் சிங்கி உரையாடுதல் எனக் கூறுகள் கொண்டு கதைக் கோர்வை செய்யப்பட்டுக் குற்றாலக் குறவஞ்சி அமைப்பு கொண்டு விளங்குகிறது.

எட்டு அடிகள், நான்கு அடிகள், இரண்டு அடிகள் எனப் பாடலடிகள் கொண்டு விளங்கும் குறவஞ்சியின் மொத்தப் பாடல்கள் 213 ஆகும்.[1] இதில் குறத்தியின் வருகைக்கு முன் அமைந்துள்ள பகுதியில் உள்ள மொத்தப் பாடல்கள் 59 ஆகும்.

முதல் 59 பாடல்கள் கொண்ட பகுதியில் புரிநூல் மார்பில் அணிந்த கட்டியங்காரன் பாடல்களில் பேசப்படுகிறான். பல்லவி, அனுபல்லவி, சரணம் கொண்ட கட்டியங்காரனின் நீண்ட பாடல் 67 அடிகள் கொண்டுள்ளது. இதில் பெருந்தெய்வ வணக்கங்களே மிகுந்துள்ளன.

## 4.1. குற்றாலக் குறவஞ்சியில் செவ்வியல் கூறுகளும், நாட்டுப்புறவியல் கூறுகளும்

குற்றாலக் குறவஞ்சியை அதன் அமைப்பியலைச் செவ்வியல் இலக்கியக் கூறுகள் கொண்டுள்ள பகுதி என்றும், நாட்டுப்புறவியல் கூறுகள் கொண்டுள்ள பகுதி என்றும் பிரிக்கலாம்.[2]

இதில் இடம்பெறும் புரிநூல் மார்பணிந்து பெருந் தெய்வங்களைத் துதிக்கும் கட்டியங்காரன் நாட்டுப்புறக் கோமாளியிடமிருந்து வேறுபட்டு அமைகிறான். உலா என்பது நமக்குரிய ஒரு கலை இலக்கிய வடிவம் ஆகும்.

*பால் ஏறும் விடையில் வரும் திரிகூடப் பெருமானார்*
*பவனி காண*
*கால் ஏறும் காமனுக்காக் கையேறும் படைப்பு வஞ்சாய்த்*
*தன்னிமார்கள்*[3]

எனும் குறவஞ்சிப் பாடல் வரிகள் வழியே உலாச் செய்தி சொல்லப் பட்டுள்ளது.

தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்றான கலம்பகத்தில் உள்ள 18 உறுப்புகளுள் 'குறம்' என்பதும் ஒன்று.[4] குறத்தி கூற்று மட்டும் அமையப் பெறும் 'குறம்' பற்றி

*''இறப்பு நிகழ்வெதிர் வென்று முக்காலும்*
*திறம்பட உரைப்பது குறத்திப் பாட்டே*
*குறத்திப் பாட்டும் அதனாரற்றே''*[5]

என்று பன்னிரு பாட்டில் கூற அறியலாம்.

> ''நல்லமேற் குலத்தான், இந்த நன்னகர்த் தலத்தான் ஆக
> வல்லியே! உனக்கு நல்ல மாப்பிள்ளை வருவான் அம்மே'' [6]

என்று குற்றாலக் குறவஞ்சியில் குறவஞ்சி குறி கூறுவது இங்கு எண்ணுதற்குரியது. இது குறம் ஆக அமைந்துள்ளது.

> ''வந்தால் இந்நேரம் வரச்சொல்லு, வாராதிருந்தால்
> மாலை ஆகிலும் தரச்சொல்லு, குற்றால நாதர்
> தந்தால் என் நெஞ்சைத் தரச்சொல்லு, தராது இருந்தால்
> தான் பெண் ஆகிய பெண்ணை நான் விடேன் என்று சொல்லி
> தூது நீ சொல்லி வாராய்! பெண்ணே! குற்றாலர் முன்போய்த்
> தூது நீ சொல்லி வாராய்?'' [7]

என்று வசந்தவல்லி குற்றால நாதருக்குத் தூது சொல்லி வரும்படியாகத் தன் தோழியை வேண்டுதல் என்பது நமது 'தூது' இலக்கிய வகையை அடியொற்றியது.

மேலும், தலைவி பசலை நோய் பெறுதல், தோழி தேற்றுதல், பாங்கி பிழித்தல் போன்றவை யாவும் தமிழ் இலக்கண இலக்கியங்களில் இடம் பெறும் கூறுகள் என்பது நாம் அறிந்த செய்தியாகும்.

துதி, உலா, தூது, குறம் ஆகிய கலை இலக்கிய வடிவங்களை அடியொற்றி குறவஞ்சி அமைக்கப்பட்டுள்ளது குற்றாலக் குறவஞ்சியின் முதற்பகுதி என அறியலாம். மேற்சொன்ன செவ்வியல் இலக்கியக் கூறுகள் யாவும் 59 பாடல் அடிகள் வரை விரவி அமைந்துள்ளன.

60வது பாடல் தொடங்கி, குறத்தி வருகை, வசந்தவல்லி குறத்தியிடம் மலைவளம் கேட்டல், குறத்தி மலைவளம் கூறுதல், குறத்தி தல மகிமை கூறல், திரிகூட நாதரின் கிளை விசேடத்தை வல்லி வினாவுதல், குறத்தி கிளை விசேடம் கூறுதல், குறி விசேடம் பற்றி வல்லி குறிக் கேட்டல், குறத்தி குறி சொல்லுதல், குறத்தி தெய்வம் வணங்குதல், குறத்தி பேச்சைத் தடுத்து வசந்தவல்லி வினாவுதல், குறத்தி மீண்டும் குறி சொல்லுதல், வசந்தவல்லி

சிணுங்கிப் பேசுதல், குறத்தி விளங்கக் கூறுதல், வசந்தவல்லி எதிர் வினாவுத்தலும், குறத்தி பேரை விளங்க உரைத்தலும், குறி சொன்னவளுக்கு வசந்தவல்லி ஆபரணம் அணிவித்தல் என்னும் செய்திகள் வரை 110 பாடல் அடிகள் தொடர்ந்து அமைகின்றன.

குறத்தியும், வசந்தவல்லியும் சந்திக்கும் பகுதி குறவஞ்சியின் முற்பகுதிக்கும், பிற்பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியாகும். இந்த இடைப்பட்ட அதாவது 60வது அடி தொடங்கி 110 வது அடி வரை அமைந்துள்ள பகுதியில் தாழ்த்தப்பட்ட சாதியினளான குறத்தியும், மேல்நிலைச் சாதியினளான தலைவி வசந்தவல்லியும் இடம் பெறும் பகுதியில் நாட்டுப்புறவியல் கூறுகளுள் ஒன்றான பேச்சு வழக்கும், செவ்வியல் மொழி வழக்கும் இடம்பெறுகின்றன என அவதாணிக்கலாம்.

### 4.1.1. குற்றாலக் குறவஞ்சியின் பிற்பகுதி அமைப்பு நிலை

112வது அடி முதல் 199 வது பாடலடிகள் வரை அமைந்துள்ள பகுதி குற்றாலக் குறவஞ்சியின் பிற்பகுதி ஆகும். இப்பகுதியில் சிங்கன் சிங்கியைத் தேடி வரல், சிங்கன் தன் குலப்பெருமை பேசுதல், நூவன் வருதல், சிங்கன் பறவைகளைப் பார்த்தல், சிங்கன் பறவைகள் வரவு கூறுதல், சிங்கன் சிங்கியை நினைத்துக் கூறுதல், சிங்கன் குளுவனைப் பார்த்து (நூவன்)க் கண்ணி கொண்டு வரச் சொல்லுதல், சிங்கன் சிங்கியை நினைத்துப் புலம்புதல், சிங்கன் வேட்டையைப் பற்றிச் சொல்லுதல், நூவன் சிங்கனைப் பழித்தல், சிங்கியைத் தேட மாட்டேன் என நூவன் மறுத்தல், சிங்கன் சிங்கியைத் தேடல், நூவன் சிங்கியினது அடையாளம் வினாவுதல், சிங்கன் நாவனுக்குப் பிரதியுபகாரம் கூறல், நூவன் சிங்கனைப் பரிகசித்தல், சிங்கன் சிங்கியைக் காணாமல் வருந்துழல், சிங்கியைச் சிங்கன் காணுதல், சிங்கனும் சிங்கியும் உரையாடுதல் எனும்படி தொடர்ந்து அமைந்துள்ளன.

ஏசல் பாட்டு, தர்க்கப் பாட்டு என்றெல்லாம் நாட்டுப்புறங் களில் பேசப்படும் பாங்கினைக் கொண்ட பாடல் அமைப்பினைப் பெரும்பாலும் கொண்டு நாட்டுப்புறவியல் தன்மை பெற்றுப் பிற்பகுதி அமைந்துள்ளது.

சிங்கன் சிங்கியைத் தேடி வருவதிலிருந்து சிங்கனும், சிங்கியும் உரையாடுதல் வரை அமைந்துள்ள பகுதியை நாட்டுப்புறக்

கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டப் பாடல் அமைப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இந்த ஒப்பீடு அமையும் முன் குறவன் குறத்தி ஆட்டப் பாடல் அமைப்பினைக் காணுதல் நலம் பயக்கும்.

## 4.2. குறவன் குறத்தி ஆட்டப்பாடல் அமைப்பு

சபை வணக்கம் செய்த பின்னர், குறவனும் குறத்தியும் முறையே அவர்களே முன்பாட்டுக்காரருமாய் பின்பாட்டுக் காரருமாய் ஆடிக்கொண்டே,

*"டேயோ மைனா*
*டேயோ மைனா*
*டேயோ மைனா டியாலோ*
*பர்மா சைனா எங்க ஊரு*
*பக்கம் வந்தா சிங்கப்பூரு*
*போருக்காகப் பயந்து நாங்க*
*ஓடி வந்தோம் இந்த ஊரு"* [8]

என்றவாறு பாடி வருவர். தங்களை அறிமுகம் செய்து கொள்ளும் பாடலாக இது அமைகிறது.

*"சாக்குத் தைக்க கோணி ஊசி*
*வாங்கலியோ ஆயாலோ*
*பாசி விப்போம் பவளம் விப்போம்*
*பட்டிக்காடு முழுதும் விப்போம்"* [9]

*"கொக்குப் புடிப்போம் குயில் புடிப்போம்*
*கொண்டை வளத்தான் குருவி புடிப்போம்*
*மான் புடிப்போம் மயில் புடிப்போம்*
*மஞ்சிக் கரிச்சான் குஞ்சு புடிப்போம்"* [10]

எனும்படியான பாடல் அடிகள் வழியே தங்களின் தொழில் முறைகளை தெரிவிக்கின்றனர். மேலும், தங்களது சடங்கு முறை களையும், வாழ்க்கை முறைகளையும் கீழ்க்கண்டவாறு பாடல் அடிகளில் எடுத்துரைக்கின்றனர்.

''பானை மேலே பானை வச்சுப்
பால் பானை பொங்குவோம் - நாங்க
பால்பானை பொங்கும்போது
ஏகச் சத்தம் போடுவோம்'' [11]

''மஞ்சி மலை நரிக்குறவர்
நாங்களே சாமி - இந்த
மண்டலத்தைச் சுத்தி வர்றோம்
பாருங்க சாமி'' [12]

நாட்டுப்புறக் கூத்துக்களில், கோமாளி பாத்திரங்களை அவையோர்க்கு அறிமுகம் செய்விப்பது வழக்கமாகும். இப்பாங்கு குறவன் குறத்தி ஆட்டப் பாடலின் வழியேயும் இருப்பதை நாம் அறிய முடிகிறது.

குறவனுக்கும், குறத்திக்கும் தர்க்கம் அமைவதே இங்கு தொடக்கமாக அமைகிறது.

''இத்தனை நாள் வரையில் என்னை தனியே விட்டு எங்கே நீ போயிருந்தாயோ - வங்காளச் சிங்கி'' என்று குறவன் தொடங்க, குறத்தி பதில் கூறுகிறாள். இந்த தர்க்கப் பாடலின் இடையிடையே வசனங்களும் அமைகின்றன. வசனங்களில் கோமாளியின் பங்கு கணிசமாக அமைந்து பார்வையாளரை ஈடுபாடு கொள்ளச் செய்யும் நாட்டுப்புறக் கூத்து முறைக்கு ஏற்ப குறவன் குறத்தி ஆட்டப் பாடல் உரையிடையிட்ட பாடல் அமைப்பினைக் கொண்டுள்ளது.

இந்த தர்க்கப் பாடலில், தலை முதல் கால் வரை அணிந்துள்ள ஆபரணங்கள், உடை, ஒப்பனைகள் ஆகியவை காணாமல் போனதாகவும், அவற்றுக்குக் காரணங்கள் கேட்ப தாகவும், குறத்தி குறவன் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூறி வருவதாகவும் அமைப்பு விளங்குகிறது.

சுய அறிமுகப் பாடல், தர்க்கப் பாடல் ஆகிய இவற்றுக்கு இடையிடையேயோ அல்லது இவை பாடப்பட்ட இறுதி நிலையிலேயோ உதிரிச் செய்திகள் கொண்ட பாடல்களையும், மணிக்குறவன் கதைப்பாடல், கருவாய்த் தேவன் கதைப் பாடல் போன்ற கதைப் பாடல்களையும் பாடிக் கொள்கின்றனர். இன்று

குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் அனைவருமே திரைப்படப் பாடல்களும் பாடிக் கொண்டு ஆடுகின்ற போக்கினை நிகழ்ச்சிகளில் காண முடிகிறது.

மேலும், கணவன் மனைவி சண்டைப் பாடல்கள், பாலுணர்வு தூண்டத்தக்கவையான பாடல்கள் ஆகியவற்றையும், நேரம் போக்கும் பொருட்டு பாடுகின்றனர். இன்று நடைபெறும் குறவன் குறத்தி ஆட்டத்தில் பாடல்களைவிட வசனங்களே மிகுந்துள்ளன. பல நிகழ்வுகளில் கொச்சையான வசனங்களும் இடம் பெறுவதை ஆய்வாளர் நேர்காணலில் அறிய முடிகிறது.

### 4.3. குறவஞ்சி சிங்கன் சிங்கி தர்க்கப் பாடல், குறவன் குறத்தி ஆட்டப் பாடல் - ஒற்றுமைகள்

சிங்கன், குறவன், குளுவன் என்னும் பெயர்கள் யாவும் ஓரினப் பெயர்களாகும். ஏறத்தாழ நூறு குறவஞ்சிகள் இதுவரை வந்துள்ளன என்று கூறப்படுகிறது. இவர்களின் சந்திப்பானது குறவஞ்சி இலக்கியத்தின் இறுதிப் பகுதியிலேயே அமைகிறது. குற்றாலக் குறவஞ்சியின் சிங்கன் சிங்கியையும் குறவன் குறத்தி ஆட்ட நிகழ்வின் குறவன் குறத்தியையும் இங்கு அறிய அந்தப் பகுதியை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு ஒற்றுமை வேற்றுமைகளை அறியலாம்.

#### 4.3.1. கதைப்போக்கில் ஒற்றுமை

குறத்தி பயணம் சென்று திரும்புகிறாள். ''இத்தனை நாள் வரையில் எங்கு சென்றிருந்தாய்'' எனப் பாடல் வரிகள் இரண்டிலும் தொடங்கப் பெறுகின்றன. குறத்தியின் 'ஆபரணங்கள்' பற்றிய விவரணங்கள் பேசப்படுகின்றன. தர்க்க ரீதியில் (ஏசல் பாடல்) பாடல்கள் அமைகின்றன. கடைசியில் இருவரும் ஒற்றுமைப்படு கிறார்கள். இந்த வகையில் இரு கலைவடிவங்களிலும் ஒற்றுமை அமைந்திருக்கக் காணலாம்.

#### 4.3.2. பாடு பொருள்

குற்றாலக் குறவஞ்சியில்,

''மெல்லிய பூந்தொடை வாழைக் குருத்தை
விரித்து மடித்தவர் ஆர், சிங்கி?

நெல்வேலியார் தந்த சல்லாச் சேலை
நெறி பிடித்து உடுத்தினேன் சிங்கா'' [13]

என்று அமைகிறது.

''ஒனக்குன்னு வாங்கிவந்த
ஒசந்த தொரு தும்பர்பாடி
ஒரங்கிழிஞ்ச தென்னடி - அடியே சிங்கி
உண்மையைச் சொல்ல வேணுண்டி
அதிகாலையில் எந்திரிச்சு
அடுப்புச் சாம்பல் அள்ளும்போது
ஆணிகுத்திக் கிழிஞ்சிருச்சு - குருவிக்காரா
காரணங்கள் ஒன்னுமில்லையடா'' [14]

என்று குறவன் குறத்தி ஆட்டத்தில் பாடல் அமைகின்றது.

''வண்ணக்குமிழலே புன்னை அரும்பு எது சிங்கி - மண்ணில்
முந்நீர்ச் சலாபத்து முத்து மூக்குத்தி காண், சிங்கா'' [15]

எனக் குறவஞ்சியில் அமைகின்றது. குறவன் குறத்தி ஆட்டத்தில்,

''மூக்கிலே நானும் போட்ட
மூனு வயிரக்கல்லு
முறிஞ்ச பயணமென்னடி வங்காளச் சிங்கி
அத எனக்குச் சொல்ல வேணுமடி
மூக்க வலிக்குதுன்னு
மூக்கத் தொடைக்கப் போனேன்
மூக்குத்தி முறிஞ்சு போச்சுடா - நரிக்குறவா
குத்தங்கொறை ஏதுமில்லையடா'' [16]

அணிந்து வந்துள்ள அணிகலன்கள் எது? எனக் குறவஞ்சியில் பாடுபொருள் அமைய, நாட்டுப்புறக் கலை வடிவக் குறவன் குறத்தி ஆட்டத்தில் அணிந்திருந்த அணிகலன்கள் எங்கே? எனப் பாடுபொருள் அமைகிறது. இந்த வேறுபாடுகள் இருப்பினும் அணிகலன்கள் பற்றிய தர்க்கப் பாடலாக அமைவது ஒற்றுமை என்று அவதானிக்கலாம்.

### 4.3.3. கதைப் பாத்திரங்கள்

சிங்கன், சிங்கி, நூவன் ஆகிய மூவரும் குறவஞ்சியின் பிற்பகுதியில் பாத்திரங்களாக அமைகின்றனர். சிங்கன், சிங்கி சந்திப்பின்போது 'நூவன்' இடம் பெறுவதில்லை. குறவன், குறத்தி, கோமாளி எனும் மூன்று பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. சிங்கன் கேள்விக்குப் பதில் கூறும் தர்க்கப் பாடலில் கோமாளி பாட முன்வருவதில்லை. குறவன் குறத்தி தர்க்கப் பாடலில் குறவன் குறத்தி இருவர் மட்டுமே இடம் பெறுகின்றனர்.

### 4.3.4. பாத்திரங்களின் சுய அறிமுகம்

சிங்கி வருகையும், சிங்கன் வருகையும் தனித்தே நடைபெறு கின்றன. அவர்கள் வருகையின்போது தங்களைத் தாங்களே சுய அறிமுகம் செய்து கொள்கின்ற நிலையைப் பார்க்கலாம்.

> ''ஒரு குலத்தில் பெண்கள் தொடோம்,
> ஒரு குலத்தில் கொள்வோம்,
> உறவு பிடித்தாலும் விடோம்,
> குறவர் குலம் நாங்கள்'' [17]

என்று சிங்கி (குறத்தி)யும்,

> ''ஞாளிபோல் சுவடு எடுத்து,
> பூனைபோல் ஒளி போட்டு, நரிபோல் பம்மிக்
> களிபோல் தொடர்ந்து அடிக்கும்
> திரிகூடச் சிங்கன் எனும் குறவன் நானே'' [18]

என்று சிங்கனும் (குறவன்) அறிமுகம் ஆகிறார்கள்.

குறவன் குறத்தி ஆட்டத்தில், குறவனும் குறத்தியும் இணைந்தே மேடைக்கு, மக்கள் அரங்கு (Folk Theatre) என்பதால் வருகின்றனர். எனவே, இருவருமே இணைந்தாற்போல் பாடுகின்றனர்.

*குறவன் :* மஞ்சிமலை நரிக்குறவர் நாங்களே சாமி
மஞ்சி மலை நரிக்குறவர் நாங்களே சாமி

*குறத்தி :* இந்த மண்டலத்தைச் சுத்தி வாரோம்
பாருங்க சாமி [19]

இவ்வாறு அறிமுகம் செய்து கொள்கின்றனர்.

### 4.3.5. குலத்தொழில்கள்

சிங்கன் தொழில் பறவைகளைக் கண்ணி வைத்து வேட்டை யாடுதல் ஆகும்.

*''கண்ணி கொண்டுவாடா! பண்ணவர் குற்றாலர்*
*கார் ஆர் திரி கூடச்சாரலிலே வந்த*
*பண்ணிய புண்ணியம் எய்தினால்*
*பறவைகள் எல்லாம் பரந்து ஏறிமேயுது (கண்ணி)''* [20]

என்னும் பாடல் வரிகள் வேட்டைத் தொழிலை விரித்துக் காட்டு கின்றன. இதுபோலவே குறவன் குறத்தி ஆட்டத்திலும் காண முடிகிறது.

''அய்யா, கொக்குப் புடிப்போம், குயில் புடிப்போம், கொண்டை வளத்தான் குருவி புடிப்போம்'' [21] போன்ற பாடல் வரிகள் குறவனின் குலத்தொழிலைக் காட்டுகின்றன.

### 4.3.6. பேச்சு மொழிச் சொற்கள்

''கக்கத்தில் இடுக்குவாயோ வெட்கத்தை அம்மே'', ''பிக்குச் சொல்லாமலே, வரும் அடா, மண்ணோடே முட்டடா, பூனையைக் குத்தடா, வித்தைக்காரி உன்னை வெல்லக் கூடாதடா, அதுக்குக் கிடந்து கொதிக்குதென் பேய் மனம், சிக்குது பார், எங்கே நடந்தாய், அடி, பயம் ஆய் இருக்குதடி'' போன்ற சொற்கள் குற்றாலக் குறவஞ்சியில் இடம் பெறுகின்றன.

இவை போலவே பயண மென்னடி, சொல்ல வேணுமடி, வெளுத்ததென்னடி, போனதென்னடி, குத்தங்குறை ஏதுமில்லை யடா, சேதி இல்லையடா, கழண்டு போச்சுடா எனப் பேச்சு மொழிச் சொற்களாக குறவன் குறத்தி ஆட்டப் பாடலிலும் இடம் பெறுவதனை அறியலாம்.

தற்காலத்தில் பாடப்படும் பல உதிரிப் பாடல்களில் கொச்சையான பேச்சு மொழிகளும் இடம் பெறுகின்றன. இந்த ஆய்வில் இடம் பெற்றுள்ள 'குறவன் குறத்தி ஆட்ட நிகழ்வு

முறையும், ஆட்டக் கலைஞர் வாழ்க்கை நிலையும் எனும் இயலில் பேசும் மொழி' எனும் பகுதியில் இது குறித்துப் பேசப்படுகிறது.

### 4.3.7. உடை, ஒப்பனை - ஒப்பீடு

புரிகள் இணைந்த பூணூல் பொருந்திய மார்பும், நீண்ட கைப்பிரம்பும் கொண்டு கருநிறங் கொண்ட சிறந்த மேகத்தை ஒத்த நிறமுடையவனாகக் கட்டியங்காரனின் ஒப்பனை குறவஞ்சியில் காட்டப்படுகின்றது.

*''இலகு நீறணிந்து திலகமும் எழுதிக்*
*குலமணிப் பாசியும் குன்றியும் புனைந்து*
*சலவை சேர் மருங்கிற் சாத்திய கூடையும்*
*வலது கைப் பிடித்த மாத்திரைக் கோலும்''*

*(குற்றாலக் குறவஞ்சி பாடல் - 61)*

என்று மேற்சொன்ன பாடல் வரிகள் விளக்குவன போல் பாசி, மணி, மாலை, வெள்ளைச் சீலை, கூடை, மாத்திரைக் கோல் முதலியன கொண்டு சைவக்கோலம் தோன்ற நெற்றியில் திருநீறு, பொட்டு முதலியன அணிந்தவளாகக் குறத்தியின் உடை ஒப்பனை குறவஞ்சியில் சுட்டிக் காட்டப்படுகின்றது.

சிப்பியிலிருந்து தயாரிக்கப்பட்ட மாலையை அணிந்து, தலைக்கொண்டை மீது கொக்கின் இறகைச் செருகி, இடுப்புக் கச்சமாக புலியினது தோலை எடுத்து அணிந்து அம்பறாத் தூணியைத் தோளில் தொங்கவிட்டுக் கட்டித் தன் கைகளுக்கு ஏற்ற படைப் கையும் எடுத்துக்கொண்டு வளாரிச் சிறுகம்பு ஒன்றையும் கையில் எடுத்துக் கொண்டு பறவைகளை வேட்டையாடும் கண்ணிகளையும் எடுத்துக்கொண்டு வருவதாகச் சிங்கன் காட்டப்படுகிறான்.

*''மாமாலைப் பூண்ட சிங்கன் .........*
*...............................................*
*வக்காவின் மணி பூண்டு விரிந்தோற் கச்சை*
*தொக்காக வரிந்திறுக்கித் தொடர் புலியைக்*
*கண்டுலுக்கித் தூணி தூக்கிக்*
*கைக்கான ஆயுதங்கள் கொண்டு சில்லிக்*
*கோலெடுத்துக் கண்ணி சேர்த்துத்....''*

*(குற்றாலக் குறவஞ்சி பாடல் 116)*

இவ்வாறான ஒப்பனைகள் செய்தவனாகக் குற்றாலக் குறவஞ்சியின் பாடல் வரிகள் காட்டுகின்றன.

நாட்டுப்புற நிகழ்த்துக்கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெறும் கோமாளி முழு நீளக் கால்ச்சட்டை, பூப்போட்ட அல்லது வண்ணக் கட்டங்களிட்ட பெரியதான சட்டை, கால்மணிக் கச்சம் ஆகியவற்றுடன் முகப்பூச்சு செய்தவனாக உள்ளான்.

வெள்ளை மற்றும் பிற நிறங்களால் ஆன இடுப்பு முதல் முழங்கால் வரையிலான ஒரு பாவாடை, ரவிக்கை (சட்டை), தலைக் கொண்டையில் கொக்கின் இறகு, கழுத்து மணிப் பாசிகள், இடுப்புப் பட்டைத் துணி, கால்மணிக் கச்சம் ஆகியவற்றோடு முகப்பூச்சு ஒப்பனை செய்தவளாகக் குறத்தி அமைகிறாள்.

கோவணம் அல்லது இடுப்பு முதல் தொடை வரை நீளமுள்ளதான கால்ச்சட்டை, கழுத்து மணிப் பாசிகள், பரட்டைத் தலை அல்லது அள்ளி முடிந்த கூந்தல், கொண்டையில் கொக்கின் இறகு, கால்மணிக் கச்சம் ஆகியவற்றோடு முகப்பூச்சு அணிந்த வனாகக் குறவன் காட்டப்படுகிறான்.

கோமாளி, குறவன், குறத்தி மூவருமே காதணிகள் அணிந்துள்ளனர். மூவருமே முத்து வெள்ளை, ரோஸ்ப் பொடி ஆகியவற்றைச் சேர்த்து உண்டாக்கப்பட்ட முகப்பூச்சுக்களைக் கொண்டுள்ளனர். கோமாளி மட்டும் பல வண்ணப் புள்ளிகளை முகத்தில் இட்டுக் கொள்கிறான்.

குற்றாலக் குறவஞ்சி கட்டியங்காரனிடமிருந்து உடை, ஒப்பனையில் ஆட்டக் கோமாளி வேறுபடுகிறான். பாசிமணி மாலை அணிந்திருப்பதில் இரு குறத்திகளும் ஒத்துள்ளனர். தலைக் கொண்டையில் கொக்கின் இறகு அணிந்திருப்பது இரு குறவர்களிடமும் காணப்படும் ஒப்பனையாகத் திகழ்கிறது. உடை, ஒப்பனையில் குறத்திக்குப் பாவாடை, சொல்லப்பட்டிருப்பதுபோல் கட்டியங்காரன் மற்றும் குறவன் ஆகியோருக்குக் குறவஞ்சிப் பாடல் வரிகள் விளக்கவில்லை.

## 4.4. வேறுபாடுகள்

குற்றாலக் குறவஞ்சியில் படைக்கப்பட்ட சிங்கன், சிங்கி வரும் பகுதி கல்வியறிவு நிறையப் பெற்ற புலவர் ஒருவரால் எழுதப்பட்டது ஆகும். குறவன் குறத்தி ஆட்டம் எனும் நாட்டுப்புறக் கலை வடிவம் தொடக்கத்தில் வாழ்க்கைக்கானதாக இருந்தது. பின்னர் அக்கலை தொழிலா.க ஆக்கிக் கொண்ட எழுத்தறிவு இல்லாத நாட்டுப்புற மக்களால் உருவாக்கப்பட்டதாகும். எனவே, நாம் கண்டுள்ள ஒற்றுமைக்கூறுகளை விட வேற்றுமைக் கூறுகள் சற்றுக் கூடுதலாக அமைவது இயல்பு. எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சிக்கும், எழுதப்படாது வாய்மொழியாலமைந்த நிகழ்த்துக் கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்திற்கும் வேற்றுமைகள் கூடுதலாக அமைவது தவிர்க்க இயலாதது ஆகும்.

குற்றாலக் குறவஞ்சி நூல் ,ரங்கேற்றம் செய்விக்கப் பட்டமைக்காகக் குறவஞ்சி மேடு என்ற ஒரு நிலமும் கவிராயருக்கு மன்னரால் வழங்கப்பட்டுள்ளது. [22] ஆனால், குற்றாலக் குறவஞ்சி அரங்கேற்றப்பட்டபோது மேடைக்கு நிகழ்த்துக் கலை வடிவமாக்கப் பட்டு அரங்கேற்றம் செய்விக்கப்பட்டதாக அறிந்த வரை செய்தி கிடைக்கவில்லை. ஆனால், தியாகேசர் குறவஞ்சி அரங்கேற்றம் செய்விக்கப்பட்டுள்ளது என்பதற்கு டாக்டர் பிரேமலதா அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட நூலில் கோயில் ஆடலரசி, கமலம்மாள் குறத்தி வேடத்தில் உபயோகித்த குறவக்கூடை ஆகியன சுட்டப் பட்டுள்ளன. [23]

### 4.4.1. கதைப்போக்கு

குற்றாலக் குறவஞ்சியில் குற்றால நாதர் வருகையைத் தொடர்ந்து வசந்தவல்லியின் வருகை அமைகிறது. வசந்தவல்லி வருகைக்குப் பின் குற்றால நாதர் கதையில் வருவதில்லை. வசந்தவல்லி வருகைக்குப் பின் குறத்தி வருகை. வசந்தவல்லியும், குறத்தியும் சந்தித்த பின் குளுவன் வருகை அமைகின்றது. அடுத்து குறவனும் குறத்தி (சிங்கன் சிங்கி)யும் சந்திக்கின்றனர். சிங்கன் வருகைக்குப் பின் வசந்தவல்லி கதையில் வருவதில்லை. கதையின் தொடர்ச்சி இவ்வாறு அமைகிறதேயன்றி கதைப் பாத்திரங்களைக் கொண்டு கதைப் பின்னல் செரிவான சரியான கட்டுமானம் செய்யப்பட்ட வலுவான முறையில் அமையவில்லை. கதைப் பின்னல் என்பது இங்கு சரியாகச் செய்யப்படாமல் கதைப்போக்கு ஒரு வித்தியாசமான போக்கில் அமைந்திருக்கிறது. [24]

நிகழ்த்துக் கலையான குறவன் குறத்தி ஆட்டத்தில் கதை, சங்கிலித் தொடர்பின்றிச் சிறு சிறு சம்பவங்களை அதாவது உதிரிச் செய்திகளைக் கோர்வை செய்து நிகழ்த்தப்படுகிறது. கதைப் பாத்திரங்கள் திரும்ப வரும்படியான கதைப் பின்னல், கதைப்போக்கு குறவஞ்சியில் செய்யப்படவில்லை. எனினும் செறிவற்ற ஒரு சங்கிலித் தொடர்பு இருக்கிறது. ஆனால், குறவன் குறத்தி ஆட்டத்தில் கதைப் பின்னல், கதைப்போக்கு ஆகியவற்றுக்கே இடமின்றி தொடர்பற்ற உதிரிச் செய்திகள் ஒரு கதம்ப மாலையாக்கப்பட்டு நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது. [25]

### 4.4.2. கட்டியங்காரன் - கோமாளி

குற்றாலக் குறவஞ்சியில் கட்டியங்காரன் பூணூல் அணிந்தவனாக அறிமுகப்படுகிறான். [26] குறவன் குறத்திஆட்டத்தில் கோமாளி தன்னைத் தானே அறிமுகம் செய்து கொள்வதோடு ஆட்டத்தில் இடம் பெறும் அனைத்துக் கலைஞர்களையும் அறிமுகம் செய்து வைக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தவனாகவே இடம் பெறுகிறான்.

குற்றாலக் குறவஞ்சியில் இடம்பெறும் கட்டியங்காரன் பாத்திரங்களுடன் பேசுபவனாக இல்லை. குறவன் குறத்தியில் கோமாளி பாத்திரங்கள் அனைத்தும் பேசிக்கொள்ளும் தொடர் பாளர்களாக அமைகின்றன. பேச்சு மொழியிலும், நாட்டுப் புறங்களில் விளங்கும் இசை வடிவங்களின் பாடல் வழியிலும் மக்களிடம் நெருங்கியவனாகக் கோமாளி அமைகிறான். கட்டியங் காரன் வசனமேதும் பேசாதவனாக வேறுபட்டு அமைகிறான். குறவன் குறத்தி ஆட்டத்தில் கோமாளி முதலில் தோன்றி ஆட்டக் கலைஞர்களது ஊர், பெயர், சிறப்பு ஆகியவற்றையும், நையாண்டி இசைக் கருவியாளர்களது ஊர், பெயர், சிறப்பு ஆகியவற்றையும், நிகழ்ச்சி ஏற்பாடு செய்துள்ளவர்களின் புகழையும் முதலிலேயே எடுத்துக்கூறி அறிமுகம் செய்விப்பான். [27] கட்டியங்காரன் ஒவ்வொரு பாத்திரமும் கதை நிகழ்வில் இடம்பெறும்போது இடையிடையே தோன்றி அறிமுகம் செய்விக்கிறான்.

### 4.4.3. வசனம்

குற்றாலக் குறவஞ்சி இலக்கியத்தில் வசனம் ஏதும் கிடையாது. இடம் பெறும் பாத்திரங்கள் யாவும் தர்க்கப் பாடல்களிலேயே பேசிக் கொள்கின்றனர். குறவன் குறத்தி ஆட்டத்தில் உரையிடையிட்ட பாட்டுக்கள் இடம் பெறுகின்றன.

ஆடவரே குறத்தி வேடமிட்டு குறவன் குறத்தி ஆட்டத்தில் நிகழ்ச்சி நிகழ்த்தியபோது இருந்ததைவிடப் பெண்களே குறத்தி வேடமிட்டு ஆட வந்திருக்கும் இன்று பாடல்கள் குறைந்த அளவிலும், வசனங்கள் கூடிய நிலையிலும் ஆக அமைகின்றன. முன்னர் நடைபெற்ற குறவன் குறத்தி ஆட்டத்தில், பாடிய பாடலின் பொருளை விளக்க வேண்டி வசனங்கள் அமையும். ஆனால், இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பாடலுக்கும், பேச்சு வசனத்துக்கும் சில நேரங்களில் தொடர்பு கொண்டும், பல நேரங்களில் தொடர்பு இன்றியும் அமையக் காணமுடிகிறது. [28]

### 4.4.4. விளிச் சொற்களும், பேச்சு வழக்குச் சொற்களும்

*''வண்ணக் குமிழிலே புன்னை அரும்பு ஏது சிங்கி? மண்ணில்*
*முந்நீர்ச் சலாபத்து முத்து மூக்குத்தி காண் சிங்கா''* [29]

இவ்வாறு குற்றாலக் குறவஞ்சியில், சிங்கன் சிங்கி என்னும் சொற்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன. 'சிங்கி', 'சிங்கா' என்று விளிக்கும் சொற்கள் அடிக்கடி இடம் பெறுவதையும் காண முடிகிறது. நிகழ்த்துக்கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்தில்,

*''மூக்கிலே நானும் போட்ட வயிரக்கல்லு*
*முறிஞ்ச பயண மென்னடி - வங்காளச்சிங்கி''*

என்றும்,

*''மூக்குத்தி முறிஞ்சு போச்சுடா - நரிக்குறவா*
*குத்தங்கொறை ஏதுமில்லையடா''* [30]

என்றும் பாடப்படுகிறது. 'வங்காளச்சிங்கி' என்றும், 'நரிக்குறவா' என்றும் விளித்துப் பாடப்படுகின்றது.

மாசத்திலே, குத்தங்கொறை, கழண்டு, ஒசந்த தொரு, மாத்தையிலே, திரிஞ்சதாலே என்பன போன்ற கொச்சை வழக்குச் சொற்கள் குறவன் குறத்தி ஆட்டத்தில் பாத்திரங்களால் தர்க்கப் பாடல்களில் பேசப்படுகின்றன. தர்க்கப் பாடல்களில் இடம் பெறுவது போலவே வசனங்களிலும், ''இப்பக் கேக்கப் போறதுக்குப் பதில் சொல்லலைனா, இவள வெரட்டிப்புடனும்டா'' என்பன

போன்ற கொச்சை வழக்குச் சொற்கள் குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெறுகின்றன.

குற்றாலக் குறவஞ்சி நாடகத்தில் கொத்து ஆர் குழலார்க்கு, வித்தாரம், கிடப்பானேன், சொருகி முடித்ததில் பூணப் பொறுக்குமோ, செம்பொன் அரைஞான் போன்ற தூய தமிழ்ச் சொற்களில் சிங்கனும் சிங்கியும் பேசிக் கொள்கின்றனர்.

### 4.4.5. சமயச் செய்திகள்

*"நன்னகர்க் குற்றால நாதரை வேண்டினேன் சிங்கிமணிப்*
*பன்னகம் பூண்டாரைப் பாடிக் கொள்வோம் அடா சிங்கா"*

என்றெல்லாம் சிங்கனும், சிங்கியும் இடம் பெறும் குற்றாலக் குறவஞ்சியில் சமயச் செய்திகள் பேசப்படுகின்றன.

குறவன் குறத்தி ஆட்டத்தில் தலைவன், தலைவி பற்றியோ, குற்றாலநாதர் பெருந்தெய்வம் அல்லது வேறு சிறு தெய்வம் பற்றியோ ஏதும் பேசப்படவில்லை. மாறாக, குறவன் குறத்தியின் வாழ்க்கைச் செய்திகளே பெரிதும் பேசப்படுகின்றன. பொதுவாகச் சில இடங்களில் தொடக்கத்தில் மட்டும் சபை வணக்கம், அந்தந்த ஊர் சாமி வணக்கம் செய்வது வழக்கமாகும்.

### 4.4.6. காலம்

குற்றாலக் குறவஞ்சியின் காலம் 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும், 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் ஆகும். மதுரை மன்னரான முத்து விஜயரங்க சொக்கலிங்க நாயக்கர் ஆதரவில் குறவஞ்சி நூல் அரங்கேற்றம் செய்விக்கப்பட்டது.

குறவன் குறத்தி ஆட்டம் முன்னர் குருவிக்காரன் ஆட்டம் என்றும், குளுவமார் கூத்து என்றும் மக்களால் பேசப்பட்டு வந்தது. மக்களிடம் ஆடிப் பாடி வேட்டையாடியும், பறவைகளை விற்றும், பாசி பவளங்களை விற்றும், வீடுகளில் தரும் கஞ்சி, சோறு போன்றவற்றை வாங்கி உண்டும் வாழ்ந்து வந்தனர். பின்னர் தொழிற் கலைஞர்கள் கூலி பேசி இதனைக் குறவன் குறத்தி ஆட்டம் எனக் கூறி ஆடிப் பாடி வருகின்றனர். தாழ்த்தப்பட்ட சாதியினராகிய நாட்டுப்புற மக்களால் உருவாக்கப்பட்டது என்று 'சொல்வதைத் தவிரக் குறிப்பிட்ட ஆசிரியரோ, அண்ணாவியாரோ எவரும் இதனை

உருவாக்கவில்லை. இது உருவாக்கப்பட்டதன் காலம் தெரிய வில்லை. எனினும் தாழ்த்தப்பட்ட இனம் சார்ந்த பறையர், சக்கிலியர் போன்ற தொழிற் கலைஞர்கள் ஆடும் இன்றைய குறவன் குறத்தி ஆட்டத்தில் குறத்தியாகப் பெண்களே ஏற்று நடிக்க வந்த காலம் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலில்லை எனக் கருதலாம். [31] இது மேலும் ஆய்வுக்குரியது.

## 4.4.7. குறத்தியின் தொழில்

குற்றாலக் குறவஞ்சியின் சிங்கி (குறத்தி) குறி சொல்ப வளாகக் காட்டப்படுகிறாள். குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெறும் குறத்திக்குக் குறி கூறும் தொழில் இல்லை. குறவன் குறத்தி ஆட்டத்திலும் இல்லை. வாழ்க்கையிலும் குறத்தி வேடமிடும் பெண் குறி சொல்லும் திறன் பெற்றிருக்கவில்லை. குளுவ இனப் பெண்கள் மலையிலிருந்து நாடோடிகளாக நாட்டுப்புறங்களில் பிழைக்க வந்தவர்கள். ஒருவேளை மலைகளில் இருந்து நாட்டுப்புறங் களுக்குப் பிழைக்க வந்த (குளுவர்கள்) குறவர்களுள் ஒரு பிரிவினரில் பெண்கள் குறி சொல்லும் தொழிலைக் கொண்டிருக்கலாம். ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட குறவன் குறத்தி ஆட்டம் ஆடும் தொழிலைக் கொண்டுள்ள திருநெல்வேலிக் குளுவர் இனப் பெண்களோ, தாழ்த்தப்பட்ட இனம் சார்ந்த குறத்தி வேடமிட்டாடும் பெண்களோ குறி சொல்வதை அறியாதவர்களாக உள்ளனர். மாறாகக் கூடை முடைதல், பாய் பின்னுதல், பெண்களுக்கான சவுரி முடி தயாரித்தல் போன்ற தொழில்களைச் செய்கின்றனர். குளுவர் இனப் பெண்களுள் சிலர் நகரச் சுத்தம் செய்யும் பணியாளர்க்ளாகவும் உள்ளனர்.

## 4.4.8. பாத்திரங்கள்

குற்றாலக் குறவஞ்சியில் சிங்கன், சிங்கி, நூவன் ஆகியோருடன் கட்டியங்காரனும் இடம் பெறுவதாக அறிய முடிகிறது. கதைப் பாத்திரங்கள் என்னும் வகையில் மூவர் மட்டுமே என அறிகிறோம். எனினும் கட்டியங்காரன் இடம் பெறுவது குறவஞ்சியின் பிற்பகுதியில் உண்டா இல்லையா என இங்கு அறிய முற்படுவது அவசியமாகிறது. கட்டியங்காரன் குறவஞ்சியின் முற்பகுதி தொடக்கத்தோடு மறைந்து விடுவதாக கழக வெளியீட்டின் திருக்குற்றாலக் குறவஞ்சியில் சொல்லூர்க்கிழார் செ.ரெ. இராமசாமி பிள்ளை 'கவிக்கூற்று' என (அரு) உரை எழுதுகிறார். இக்கருத்து

எழில் முதல்வனிடமும் (குறவஞ்சி இலக்கியக் கருத்தரங்கு - குறவஞ்சியின் இலக்கியக் கூட்டமைப்பு, பக். 10-11) காண முடிகிறது. இக்கூற்று இங்கு ஏற்புடையதா என அறியலாம்.

1. *''பொன் அணித்திலகம் தீட்டி, பூமலர் மாலை சூட்டி*
*வண்ண மோகிளியைக் காட்டி வசந்தமோகினி வந்தாளே''* [32]

2. *''கூடல் வளைக்கரம் அசைய, மாத்திரைக்*
*கோல் ஏந்தி, மணிக்கூடை தாங்கி*
*மாடமறுகூடு திரிகூட மலைக் குறவஞ்சி வருகின்றாளே''* [33]

3. *''பாமாலை திரிகூடப் பரமர் அருள் பெறு*
*வசந்தப்பாவை கூந்தல்*
*பூமாலை இதழி பெற, பொன்மாலை மணி,*
*மாலை பொலி வாய்ப்பூண்டு*
*நாமாலைக் குறவஞ்சி தன்னகர்ப் பட்டணம் முழுவதும்*
*நடக்கும் நாளில்*
*மாமாலைப் பூண்ட சிங்கன் வங்கணச் சிங்கியைத் தேடி*
*வருகின்றானே''* [34]

இந்தப் பாடல் வரிகளில் வருகின்றானே, வந்தாளே என்றெல்லாம் கட்டியம் கூறுவது கட்டியங்காரனின் கூற்றாகவே அமைந்துள்ளது. இந்தக் குறவஞ்சி நாடகத்தில் இடம் பெறும் இக்கூற்றுக்கள் ஆசிரியர் கூற்றுக்கள் அல்ல என்றும், அவை கட்டியங்காரனின் குரல்கள் என்றும் அறியலாம்.

குறவன் குறத்தி ஆட்டத்தில் இடம் பெறும் கோமாளி குறவன் குறத்தி அரங்கில் நுழையும் அந்த நேரம் முதல் நிகழ்ச்சி முடியும் இறுதிவரை தன் பங்களிப்பைச் செய்கிறான்.

கட்டியங்காரன் கட்டியம் கூறுவதோடு மட்டுமே குறவஞ்சி முழுவதும் இடம் பெற, குறவன் குறத்தி ஆட்டத்தின் கோமாளி கதைப் பாத்திரங்களான குறவனுக்கும், குறத்திக்கும் இடையீட்டாளனாகவும் விளங்குகிறான். சில நேரங்களில் தானும் சில தனிப் பாடல்கள் பாடுகிறான். பல நேரங்களில் குறவனுக்கும், குறத்திக்கும் பின்பாட்டாளனாகவும் விளங்குகிறான்.

### 4.4.9. இசை வகைகள்

குறவஞ்சியிலும், குறவன் குறத்தி ஆட்டத்திலும் இடம் பெறும் இசை வகைகளை இங்கு அறியலாம்.

இனிய இயற்றமிழ் பாக்களோடு கீர்த்தனை, வண்ணம், கன்னி, சிந்து போன்ற இசைப்பாக்களும் சங்கமித்துப் புதுப் புனலாய்ப் பொங்கி வழிகின்றன. கர்நாடக இசையும், நாட்டுப்புறப் பாடல் இசையும் கைகோர்த்து நின்று களிநடம் புரிகின்றன. [35]

குறவஞ்சியை உயர்ந்த இசை கொண்டதென்றும், நடுத்தர இசை கொண்டதென்றும், மெல்லிசை கொண்டதென்றும் பிரிக்கலாம். குறவஞ்சிகளில் காணப்படும் இராகங்கள் யாவும் சுத்தமான நாட்டுப்பாடல் மெட்டுக்களுடன் கூடிய ரக்தி ராகங்களே ஆகும். [36]

மேற்சொன்ன இசை குறித்த செய்திகள் யாவும் குறவஞ்சி யில் இடம் பெற வேண்டுமென்று இலக்கணம் கூறுவார்கள். இந்த அடிப்படையிலேயே பாடல்கள் யாவும் இசையமைப்பில் செய்யப்பட்டுள்ளன எனத் தியாகேசர் குறவஞ்சியிலும் குமாரலிங்கர் குறவஞ்சியிலும், இன்னும் பல குறவஞ்சிகளிலும் காண முடிகிறது.

''குறவஞ்சி நாடகம் முழுமையும் உயிருடைய கண்ணுக்கும், காதுக்கும் விருந்தான, இசையும், நாடகமும், பாட்டும், முழுமையும் தாளத்தோடும் கூடிய பாட்டு'' [37] என்று மு. அருணாசலமும், ''குறவஞ்சி நாடகத்தில் வரும் பாத்திரங்களின் பண்புகள் மக்களுக்கு இயல்பாக விளங்கும் முறையில் அதில் இடம் பெறும் இனிய இசைப் பாடல்கள் எளிய நடையில் சிறப்பாகப் பொருள் புலப்படும் நிலையில் புனையப்பட்டுள்ளன'' [38] என்று ஏ.என். பெருமாளும் கூறுவர். இன்னும் பல அறிஞர்கள் இவர்கள் கொண்டுள்ள கருத்தையே கொண்டுள்ளனர். இந்த ஆய்வாளரும் இந்தக் கருத்தையே ஒத்துள்ளார்.

குறவஞ்சியின் வசனமற்ற இசை நாடகத்தில் இடம் பெற்றுள்ள இசை வகைகளை அறியலாம்.

பவனி வரும் இறைவன், பவனி கண்டு துயர் படும் நாயகி, பாங்கி ஆகியோர் இடம் பெறும் பகுதிகளில் பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் செவ்வியல் இசைப்பாடல் முறையில் பாடல்கள்

அமைந்துள்ளன. சிலவற்றில் இசைவகைப் பெயர்களும் பதிப்பிக்கப் பெற்றுள்ளதனை இங்கு நாம் நினைவு கொள்ளலாம். குறவன், குறத்தி, நூவன் ஆகியோர் இடம்பெறும் பகுதிகளில் நாட்டுப்புற இசை வடிவங்களான சிந்து, கன்னி, தரு (தொகையறா) போன்றவை இடம் பெறுகின்றன. கவிராயர் பல தமிழ் நூல்கள் செய்துள்ள பண்டிதர். ஆகையால், அவரையும் அறியாமல் சிங்கன் பாடும் பாடலிலும், குறத்தி பாடும் பாடலிலும், பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் செவ்வியல் இசைப் பாடல் அமைப்பு முறையினைக் கொண்டமைத்துள்ளமை பொருத்தமற்றே காணப்படுகிறது. [39]

நாட்டுப்புறக் கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்தில் டப்பாத் தெம்மாங்கு, [40] இழுவைத் தெம்மாங்கு [41], சிந்து வகை [42], குறவன் குறத்தி ஆட்டத்திற்குத் துணை செய்யும் நையாண்டி இசைக் கருவிகள் வாசிப்புகள், நையாண்டி இசை வகைகளான நாட்டுப்புற இசை வடிவங்களே ஆட்டப் பாடல்களில் முழுக்க இடம்பெறக் காணலாம். இக்கலை வடிவத்தை இரசிக்கும் பார்வையாளர்கள் நாட்டுப்புற மக்களாகவே இருப்பதாலும், ஆடிப்பாடும் கலைஞர்களும் நாட்டுப்புற மக்களாகவே இருப்பதாலும் செவ்வியல் இசை வடிவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பில்லை.

தற்போது குறவன் குறத்தி ஆட்டத் தொழிற் கலைஞர்கள் திரைப்படங்களில் இடம் பெறும் இசை வடிவங்களையும், மக்கள் கலை இலக்கியத்தை மக்களுக்காக செய்து வரும் பணிகளில் ஈடுபடும் கலைக் குழுக்களின் பாடலிசைகளையும் பயன்படுத்திக் கொள்கின்றனர். [43]

### 4.4.10. படைப்பின் நோக்கம்

மொழி, ஆட்சி, சூழல், புலவர்கட்கு ஆதரவு போன்ற காரணங்களால் இயல்பு நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு ஒருவிதத் தேக்கநிலை இருந்தது. இத்தேக்க நிலைக் காலத்தில் இந்த மண்ணின் கலை இலக்கியத்தை எடுத்து மக்களுக்குக் காட்டி உணர்வு பெறச் செய்யவும், எழுச்சி பெறச் செய்யவும் தமிழ்க்கலை இலக்கியத் துறையில் படைப்புக்கள் வெளிவரலாயின. [44] குற்றாலக் குறவஞ்சி இந்த வகையில் செவ்வியல் இலக்கியத்தையும், இந்த மண்ணின் நாட்டுப்புறக் கலை இலக்கியத்தையும் ஒருங்கிணைத்துச் செய்ய முயற்சி செய்தமையும், படைப்பின் நோக்கங்களுள் ஒன்றாகக் கொள்ள இடமுண்டு.

தல புராணங்கள் பாடப்பட்ட பாரம்பரிய உணர்வுகள் புலவர்களிடம் வளர்ந்துள்ளமையால், தெய்வத்தை (குற்றால நாதரை)ப் போற்றுதல், தெய்வ நம்பிக்கையை மக்களிடம் வளர்த்தல் போன்ற வேலைகளைப் புலவர்களும் தங்கள் பங்குக்குச் செய்ய முனைந்தனர். தாம் வாழும் இடங்களில் உள்ள சிறு தெய்வங்களை எல்லாம் பெருந்தெய்வ வழிபாட்டுடன் இணைத்தல் போன்ற பணிகளும் நடந்துகொண்டிருந்த வேளையில் குற்றாலநாதர், திரிகூட நாதர் என்றெல்லாம் புகழ்பாட வேண்டியிருந்தது. அந்தப் பணியைத் திருக்குற்றாலக் குறவஞ்சி ஒருவாறு செய்தது.

இலக்கியத் துறையில் புதிய படைப்புக்களைச் செய்ய முனைந்தனர். இதன் வழியே நாட்டுப்புறக் கலை இலக்கியக் கூறுகளையும், செவ்வியல் கலை இலக்கியக் கூறுகளையும் ஒருங்கிணைத்துச் செய்யக் குற்றாலக் குறவஞ்சி உருவானது.

புதிய கலை இலக்கியப் படைப்புக்கள் செய்து அக்கால ஆட்சியாளர்களின் செல்வாக்கையும், பாராட்டையும் பெறப் புலவர்கள் முனைந்தனர்.

மேற்சொன்ன காரணங்கள் யாவும் குற்றாலக் குறவஞ்சியைப் படைக்க உருவான நோக்கங்களாக அமைந்துள்ளன எனக் கொள்ளலாம்.

நாட்டுப்புற நிகழ்த்துக்கலை வடிவமாக விளங்கும் குறவன் குறத்தி ஆட்ட நோக்கங்கள் கீழ்க்காணும் நிலைகளைக் கொண்டுள்ளன.

ஏற்கெனவே கண்டுள்ளபடி போலிச் செயல் மந்திர முறை நோக்கத்தில் ஆட்டம் நடைபெறல், சமூகத் தேவைக்கான ஆட்டம் நிகழ்த்தப்படல் எனும்படி நிலைகள் தவிர்த்தப் பிற படிநிலைகளான தொழில் பயிற்சி பெறும் நோக்கத்தில் ஆட்டம் உருவாதல், பொழுது போக்கும் நோக்கத்தில் ஆட்டம் நடைபெறல் ஆகிய படி நிலைகள் ஒத்து வரக் காணமுடிகிறது.

இந்தக் குறவன் குறத்தி ஆட்டத்தினை 'சமூகத் தேவைக்கான ஆட்டமாக' ஆக்கம் செய்வதற்கான முயற்சிகளுக்கு தனித்த நிலை ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## 4.5. ஆய்வு முடிவுகள்

இதுகாறும் கண்டவற்றால் கீழ்க்காணும் முடிவுகளைப் பெற முடிகிறது.

குற்றாலக் குறவஞ்சியை அதன் அமைப்பியல் நோக்கில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1. உலா, தூது, குறம், தலப் புராணம் பாடுதல் போன்ற செவ்வியல் இலக்கியக் கூறுகள் கொண்ட முதற்பகுதி, 2. செவ்வியல் இலக்கியத்தில் காட்டப்படும் பாங்கியரைக் கொண்ட தலைவி வசந்தவல்லி, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த நாடோடி வாழ்க்கையைக் கொண்டு குறி சொல்லும் தொழிலை உடைய குறத்தி (சிங்கி) ஆகியோர் சந்திக்கும் இடைநிலைப் பகுதி, 3. நாடோடி வாழ்க்கை வாழும் மலைக்குறவச் சிங்கனும் சிங்கியும் சந்திக்கும் இறுதிப்பகுதி என்பன அவை.

குறத்தி பயணம், அணியும் ஆபரணங்கள் குறித்த செய்திகள் குற்றாலக் குறவஞ்சியிலும், குறவன் குறத்தி ஆட்டத்திலும் இடம் பெறுகின்றன. இச்செய்திகள் குறவன் குறத்திக்கு இடையே தர்க்கப் பாடல் வடிவில் வெளிப்படுகின்றன.

குற்றாலக் குறவஞ்சி நூல் அரங்கேற்றம் செய்விக்கப்பட்டுள்ளது. ஆனால், இது நிகழ்த்துக் கலை வடிவமாக அரகேற்றம் செய்விக்கப்பட்டதாக அறிந்தவரை செய்திகள் கிடைக்கப் பெறவில்லை.

கதைப் பாத்திரங்கள் திரும்ப வரும்படியான கதைப் பின்னல், கதைப்போக்கு குறவஞ்சியில் செய்யப்படவில்லை. எனினும் செறிவற்ற ஒரு சங்கிலித் தொடர்பு இருக்கிறது. ஆனால், குறவன் குறத்தி ஆட்டத்தில் கதைப் பின்னல், கதைப்போக்கு ஆகியவற்றுக்கே இடமின்றித் தொடர்பற்ற உதிரிச் செய்திகள் ஒரு கதம்ப மாலையாக்கப்பட்டு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

குறவன் குறத்தி ஆட்டத்தில் கோமாளி முதலில் தோன்றி ஆட்டக் கலைஞர்கள் மற்றும் இசைக் கருவியாளர்களது ஊர், பெயர், சிறப்பு ஆகியவற்றையும், நிகழ்ச்சி ஏற்பாடு செய்துள்ளவர்களின் புகழையும் முதலிலேயே எடுத்துக்கூறி அறிமுகம் செய்விப்பான். குற்றாலக் குறவஞ்சியின் கட்டியங்காரன் ஒவ்வொரு பாத்திரமும் கதை நிகழ்வில் இடம் பெறும்போது இடையிடையே தோன்றி அறிமுகம் செய்விக்கிறான்.

குற்றாலக் குறவஞ்சியில் 'வருகின்றானே', 'வந்தானே' என்றெல்லாம் கட்டியம் கூறுவது கட்டியங்காரனின் கூற்றாக அமைந்துள்ளதே அன்றி இவை ஆசிரியர் கூற்றுக்கள் இல்லை என்ற முடிவிற்கு வரமுடிகிறது.

நாட்டுப்புற நிகழ்த்துக்கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்தில் நாட்டுப்புற இசை வகைகள் இடம் பெறும் அளவுக்கு குற்றாலக் குறவஞ்சியில் இல்லை. எனினும் சிந்து, கண்ணி, தரு போன்ற நாட்டுப்புற இசை வடிவங்கள் குறவஞ்சியில் பயன்படுத்தியிருக்கக் காணமுடிகிறது. இருப்பினும் சிங்கன் பாடும் பாடலிலும், குறத்தி (சிங்கி) பாடும் பாடலிலும் பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் செவ்வியல் இசைப் பாடல் அமைப்பு முறையினைக் கொண்டு அமைந்துள்ளமை பொருத்தமற்றே காணப்படுகிறது.

குற்றாலக் குறவஞ்சியில் கட்டியங்காரன் பூணூல் அணிந்தவனாக அறிமுகப்படுத்தப்படுகிறான். குறவன் குறத்தி ஆட்டத்தில் கோமாளி தன்னைத் தானே அறிமுகம் செய்து கொள்வதோடு, ஆட்டத்தில் இடம் பெறும் அனைத்துக் கலைஞர்களையும் அறிமுகம் செய்து வைக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தவனாகவே இடம் பெறுகிறான்.

எழுதப்பெற்ற குற்றாலக் குறவஞ்சிக்கும், எழுதப்பெறாத வாய்மொழியால் அமைந்த நிகழ்த்துக் கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்திற்கும் சற்று வேறுபாடுகள் அமைந்துள்ளன. கால வளர்ச்சி, கலை இலக்கிய வடிவத் தன்மை, உருவாக்கப்பட்ட முறைமை, வாசகர் - பார்வையாளர் நுகர்வு நிலை போன்ற காரணங்களால் இவ்விரு கலை இலக்கிய வடிவங்களிலும் வேறுபாடுகள் இருப்பது இயல்பு.

நாட்டுப்புறத் தன்மை, குறத்தி பயணம், அணியும் ஆபரணங்கள் குறித்த செய்திகள் கொண்ட தர்க்கப் பாடல்கள், கோமாளியின் (கட்டியங்காரன்) கட்டியங்கூறும் முறை, நாட்டுப்புற இசை வகைகள், சிங்கன், சிங்கி (குறவன், குறத்தி) கட்டியங்காரன், கோமாளி ஆகிய பாத்திரங்கள் போன்ற கூறுகள் குற்றாலக் குறவஞ்சியிலும், குறவன் குறத்தி ஆட்டத்திலும் வேறுவேறான முறைகளில் இடம் பெறுகின்றன.

இதன்வழியே குற்றாலக் குறவஞ்சியின் பிற்பகுதி நாட்டுப்புறக்கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்திலிருந்து சில கூறுகளை எடுத்துக்கொண்டு உருவாக்கப்பட்டது எனக் காண முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. திருக்குற்றாலக் குறவஞ்சி, இரண்டாம் பதிப்பு, நவம்பர் 1985, என்.சி.பி.எச். வெளியீடு, சென்னை - 98.
2. ஏட்டிலக்கியத்தோடு நாட்டுப்புற இலக்கியம் அர்த்தநாரீஸ்வரக் கோலத்தில் கலந்து நிற்கும் நிலை எல்லாக் குறவஞ்சியிலும் உண்டு. 'குறவஞ்சியின் இலக்கியக் கட்டமைப்பு' எழில் முதல்வன் எனும் டாக்டர் மா. இராமலிங்கம், மதுரை காமராசர் பல்கலைக் கழக வளாகத்தில் சாக்திய அகாடமி, 25 ஜூலை 1987ல் ஏற்பாடு செய்திருந்த குறவஞ்சி இலக்கியக் கருத்தரங்கில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரை. பக்கம். 8
3. குற்றாலக் குறவஞ்சி, திரிகூட ராசப்பக் கவிராயர் (என்.சி.பி.எச்) பாடல் - 5.
4. குறவஞ்சி இலக்கியக் கருத்தரங்கு, (மதுரை காமராசர் பல்கலைக் கழக வளாகத்தில் சாகித்ய அகாடமி, 25 ஜூலை 1987ல் நடத்தியது) குறவஞ்சி, மு. அருணாசலம், ப. 9.
5. பன்னிரு பாட்டியல், 53, குறத்திப் பாட்டு
6. குற்றாலக் குறவஞ்சி, (என்.சி.பி.எச்.) பாடல் 97
7. மேலது பாடல் - 51
8. பி.இ. 1, குறவன் குறத்தி (சுய அறிமுகப் பாடல்) ஆட்டப் பாடல் 1, வரி 1 - 11.
9. மேலது, 13-16
10. மேலது, 39-41
11. மேலது, 61 - 64
12. மேலது, 79 - 82
13. குற்றாலக் குறவஞ்சி, பாடல் 176
14. பி.இ. 1. குறவன் குறத்தி தர்க்கப் பாடல் எண். 2, 59-66
15. குற்றாலக் குறவஞ்சி பாடல் 182
16. பி.இ. 1 குறவன் குறத்தி தர்க்கப் பாடல் எண். 2, 34 - 41
17. குற்றாலக் குறவஞ்சி, பாடல் 72.
18. மேலது, 116
19. பி.இ. 1, குறவன் குறத்தி (சுய அறிமுகப் பாடல்) ஆட்டப் பாடல் - 1, வரி 79-82

20. குற்றாலக் குறவஞ்சி, பாடல் 133
21. பி.இ. 1, குறவன் குறத்தி (சுய அறிமுகப் பாடல் - 1) வரி 39-40.
22. காண்க. திருக்குற்றாலக் குறவஞ்சி, கழக வெளியீடு, பக். 15-16, (8-வது பதிப்பு 1986)
23 1.இலக்கியத்தில் பல குறவஞ்சிகள் இருந்தாலும், தஞ்சைக் கோவிலில் சமீப காலம் வரை நடிக்கப்பட்டு வந்த சரபேந்திர பூபாலக் குறவஞ்சியைத் தவிர மற்றவை யாவும் இலக்கியங் களாகவே உள்ளன. தியாகேசர் குறவஞ்சி, பக். 24.
24. சாகித்ய அகாதெமி, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் 25 ஜூலை 1987ல் நடத்திய குறவஞ்சிய இலக்கியக் கருத்தரங்கில் மு. அருணாசலம் தலைமையேற்று வாசித்தளித்த கட்டுரை, பக். 19 - 21.
25. காண்க. பின் இணைப்பில் உற்ற குறவன் குறத்தி ஆட்ட உதிரிப் பாடல்கள் எண். 3 - 11.
26. 'புரிகள் இணைந்த பூணூல் பொருந்திய மார்பும், நீண்ட கைப்பிரம்பும் கொண்டு, கருநிறங்கொண்ட சிறந்த மேகத்தை யொத்த கட்டியங்காரன் வந்தான்', திருக்குற்றாலக் குறவஞ்சி, கழக வெளியீடு, 1986, ப. 9.
27. பி.இ. 1, குறவன் குறத்திஆட்டத்தில் பேசும் வனத்தில் ஒரு பகுதி 1.
28. பின் இணைப்பு 1இல் உள்ள பாடல் எண். 7இல் உள்ள பாடல் வசனம். குறவன் குறத்தி ஆட்டத்தில் பேசும் வசனத்தில் ஒரு பகுதி இணைவில்லாததாக உள்ளது. பி.இ. 1இல் உள்ள குறவன் குறத்தி ஆட்டத்தில் பேசும் வசனத்தில் ஒரு பகுதி - 2 இணைவின்றி உள்ளது. இதேபோல பி.இ. 1இல் உள்ள சொளம் 1- 3, குறவன் குறத்தி ஆட்டத்தோடு தொடர்பின்றி உள்ளது.
29. குறவஞ்சி பாடல் 182.
30. பி.இ. 1 குறவன் குறத்தி தர்க்கப் பாடல் எண். 2, வரி 40 - 41.
31. தகவலாளர் : பிச்சை (குறத்தி வேடமிட்டாடுபவர்) கல்லடித்திடல், திருவாடானை தாலுக்கா, இராமநாதபுரம் மாவட்டம், வயது 52, நாள் : 28.8.1987
32. குறவஞ்சி பாடல் 9
33. மேலது 60
34. மேலது 112.

35. சாகித்ய அகாதெமி நடத்திய குறவஞ்சி இலக்கியக் கருத்தரங்கில் (25 ஜூலை 1987) வாசித்தளிக்கப்பட்ட கட்டுரை, குறவஞ்சியில் இலக்கியக் கட்டமைப்பு, எழில் முதல்வன், ப. 8
36. தியாகேசர் குறவஞ்சி, தஞ்சாவூர் சரஸ்வதி மகால் வெளியீடு 130, தியாகேசர் குறவஞ்சி, முன்னுரை, ப.ஆ. டாக்டர் வே. பிரேமலதா, பக்கம் 26.
37. குறவஞ்சி இலக்கியக் கருத்தரங்கு - மு. அருணாசலம், ப. 24
38. குறவஞ்சி இலக்கியக் கருத்தரங்கில் இடம் பெற்ற கட்டுரை குறவஞ்சியில் நாடகத்தன்மை, டாக்டர் அ.நா. பெருமாள்.
39. குறவஞ்சியில் நாடகத்தன்மை, டாக்டர் அ.நா. பெருமாள், பாடல் எண். 129, 134, 137, 157, 160, 164, 167 (என்.சி.பி.எச் வெளியீடு)
40. பி.இ. 1, குறவன் குறத்தி சுய அறிமுகப் பாடல் எண். 1
41. பி.இ. 1, பாடல் எண். 5
42. பி.இ. 1, பாடல் எண். 6
43. கே.ஏ. குணசேகரன் கிராமிய இசைக்குழு பாடும், 'வாகான ஆலமரம்', 'முயற்சி எடுக்க வேணும்', 'ஏழஞ்சு வருசமாக' போன்ற பாடல்களை குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்கள் பாடுகின்றனர். காண்க. அக்னிஸ்வரங்கள் பாடல் தொகுப்பு நூல், தொ.ஆ. கே.ஏ. குணசேகரன்
44. We find that different caste people in the society belonged to the artisan groups and merchants in between the feddal aristocrats and peasants. Small native landlords were also found in different areas, which can be understood from kuravanchi where the flight of birds over different patron's land's is mentioned and also in the final dialogue of kuravan and kurathi. The Tenkasi Pandyas were the remants of the old feudalism from above survived in the south and probably other older elements in other areas also. The religious quarrel shown in MP and other works. (Saivities vs. Vaishnavites) was actually a disquise of the quarrel between feudalism from above and feudalism below. Generally the method of production was purely feudal during the Nayak period. Fold influence in Tamil Literature with special reference to Pallu - Kuravanchi and Nondi Natakam. This is submitted to the University of Kerala for the degree of Doctor of Philosophy by G. Kulathuran, p. 24.

# 5. ஆய்வு முடிவுரை

முன்னுரை தவிர்த்த நான்கு இயல்களில் குறவன் குறத்தி ஆட்டம் குறித்து விளக்கியும், பகுப்பாய்வு செய்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு ஆய்வு செய்து கண்ட முடிவுகளைப் பின்வருமாறு சுருக்கித் தொகுத்துக் கூறலாம்.

குறவன் குறத்தி ஆட்டம் குறவர் இனத்தவர்களால் திருநெல்வேலி மாவட்டத்திலும், குறவர் இனத்தைச் சிறுபான்மை யாகவும், தாழ்த்தப்பட்ட இனத்தவராகிய பறையர், சக்கிலியர் போன்றவர்களைப் பெரும்பான்மையாகவும் கொண்டு பிற பகுதிகளிலும் ஆடக் காண முடிகிறது.

ஏறக்குறைய 18 ஆம் நூற்றாண்டு முதல் இந்திய மறுமலர்ச்சி இயக்கத்தின் காரணமாக இந்து சமய மறுமலர்ச்சியும் தோன்ற ஏதுவாயிற்று. அதனால் கோயில் விழாக்களும், அவ்விழாக்களில் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மக்கள் கலை வளர்ச்சிக்குரிய வாய்ப்புக்கள் நேர்ந்தபோது தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட இனங் களைச் சேர்ந்த கலைஞர்கள் தங்களுக்குள் தனித்தனிக் குழுக்களாக அமைத்துக் கொள்ள வாய்ப்புக்கள் உண்டாயின. அவர்களில் தொழிற் கலைஞர்கள் என்ற பிரிவுகளும் காலப்போக்கில் தோன்றி யிருக்கலாம். ஒருவரை ஒருவர் சார்ந்த நிலையில் குறவன் குறத்தியுடன் பறையர் இனம் சார்ந்த நையாண்டி இசைக் கலைஞர்களும் ஒன்று கூடிக் குழு அமைத்திருக்கலாம்.

பாலியல் உணர்வுபட ஆடும் ஆட்ட அசைவுக் கூறுகள் ஆசான் இல்லாமல் தற்குறியாக ஆடவந்த கலைஞர்களிடம் நிறைந்து காணப்படுகின்றன.

குறவர் (குளுவர்) சமூகம் பாசி, மணி, கொம்பு போன்ற பொருள்களைப் பண்டமாற்றுச் செய்து கொள்ளவும், விற்கவும் ஆட்டம் ஆடினர். காலப்போக்கில் இதனை இச்சமூகத்தாரும், பிற தாழ்த்தப்பட்ட இனத்தாரும் தொழிற் கலையாக்கி உள்ளனர். குறவன் குறத்தி ஆட்டத்தின் தொடக்கக் காலத்தில் திருநெல்வேலிக் குறவர் சமூகமே இதனைக் கொண்டிருந்தது.

நாட்டுப்புற மக்கள் குடும்பம் குடும்பமாக அமர்ந்த நிலையில் இந்த ஆட்டத்தை இரசிக்கின்றனர். இளவட்டப் பெண்கள் குழுவாகத் தனித்தும் இதற்குப் பார்வையாளர்களாக அமைகின்றனர். நகரங்களில் பார்வையாளர்கள் நின்ற நிலையில் இரசிக்கின்றனர். குடும்பம் குடும்பமாக வந்து காண்பதில்லை. படித்து அரசு வேலை பார்ப்போர், நன்கு படித்த இளைஞர்கள், வாழ்க்கைத் தரம் உயர்ந்தவர்கள் ஆகியோர் தெருவில் நின்று இரசிக்கும் முறையினை மதிப்புக் குறைவாக எண்ணுகின்றனர்.

திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர் ஆகிய மாவட்டங்களில் பெண்கள் தவிர ஆடவர்களும் குறத்தி வேடமிட்டாடுகின்றனர். மதுரை வட்டாரத்தில் குறத்தி வேடத்தை அலிகள் சிலர் ஏற்று ஆட முன்வந்துள்ளனர். தஞ்சாவூரில் இசுலாம், கள்ளர், கவுண்டர் ஆகிய சாதி சமயப் பிரிவுகளிலுள்ள பெண்கள் சிலர் குறத்தி வேடமிட்டாடுகின்றனர்.

கரகாட்டத்தின் துணை நிலை ஆட்டமான இக்குறவன் குறத்தி ஆட்டம் இன்று தனிநிலை ஆட்டமாகப் பரிணமித்து வரக் காணமுடிகிறது.

இரவு நேரங்களிலேயே ஆட்டப் பயிற்சி அமைகின்றது. பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள் ஆடவர்களாகவே உள்ளனர். பெண்களுக்கு 8 வயது தொடங்கி 15 வயதுக்குள்ளாகவும், ஆண்களுக்கு 15 வயது தொடங்கி 20 வயதுக்குள்ளாகவும் பயிற்சி பெரும்பாலும் அமைகிறது. பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கல்வியறிவு கொண்டவர்களாக இருப்பார்களேயானால் பயிற்சியின் கால அளவு குறையும்.

வறுமையில் வாடும் இக்கலைஞர்களுக்கு 'சீசன் நேரம்' எனும் நிகழ்ச்சி வாய்ப்புக் காலம் மட்டிலுமே குடும்பம் சீர்பெறுகிறது. அதிலும் அச்சமயத்தில் குடும்ப உறவுகள் சரியில்லா மலும் போக நேரிடுகிறது.

இன்னும் ஒருசில இடங்களில் இக்கலைஞர்கள் சாதீயப் பார்வையில் குறைந்த மதிப்பில் நடத்தப்படுகின்றனர். குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர்களுள் ஒருவரும் அரசு உதவித் தொகை இதுவரை பெறுவாரில்லை.

குறவன் குறத்தி ஆட்டத் தொழிற் கலைஞர்கள் களவு மணம் செய்தலையே விரும்புகின்றனர்.

குற்றாலக் குறவஞ்சியை அதன் அமைப்பியல் நோக்கில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. உலா, தூது, குறம், தலபுராணம் பாடுதல் போன்ற செவ்வியல் இலக்கியக் கூறுகள் கொண்ட முதற்பகுதி.

2. செவ்வியல் இலக்கியத்தில் காட்டப்படும் பாங்கியரைக் கொண்ட தலைவி வசந்தவல்லி, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த நாடோடி வாழ்க்கையைக் கொண்டு குறி சொல்லும் தொழிலை உடைய குறத்தி (சிங்கி) ஆகியோர் சந்திக்கும் இடைநிலைப் பகுதி.

3. நாடோடி வாழ்க்கை வாழும் மலைக் குறவச் சிங்கனும் சிங்கியும் சந்திக்கும் இறுதிப் பகுதி என்பன அவை.

குறத்தி பயணம், அணியும் ஆபரணங்கள் குறித்த செய்திகள் குற்றாலக் குறவஞ்சியிலும் குறவன் குறத்தி ஆட்டத்திலும் இடம் பெறுகின்றன. இச்செய்திகள் குறவன் குறத்திக்கு இடையே தர்க்கப்பாடல் வடிவில் வெளிப்படுகின்றன.

கதைப் பாத்திரங்கள் திரும்ப வரும்படியான கதைப் பின்னல், கதைப்போக்கு குறவஞ்சியில் செய்யப்படவில்லை. எனினும் செறிவற்ற ஒரு சங்கிலித் தொடர்பு இருக்கிறது. ஆனால், குறவன் குறத்தி ஆட்டத்தில் கதைப் பின்னல், கதைப் போக்கு

ஆகியவற்றுக்கே இடமின்றித் தொடர்பற்ற உதிரிச் செய்திகள் ஒரு கதம்ப மாலையாக்கப்பட்டு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

குற்றாலக் குறவஞ்சியில் 'வருகின்றானே', 'வந்தாளே' என்றெல்லாம் கட்டியம் கூறுவது கட்டியங்காரனின் கூற்றாக அமைந்துள்ளதே அன்றி இவை ஆசிரியர் கூற்றுக்கள் இல்லை என்ற முடிவிற்கு வரமுடிகிறது.

நாட்டுப்புற நிகழ்த்துக்கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்தில் நாட்டுப்புற இசை வகைகள் இடம் பெறும் அளவுக்குக் குற்றாலக் குறவஞ்சியில் இல்லை.

எழுதப்பெற்ற குற்றாலக் குறவஞ்சிக்கும், எழுதப்பெறாது வாய்மொழியால் அமைந்த நிகழ்த்துக்கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்திற்கும் சற்று வேறுபாடுகள் அமைந்துள்ளன. நாட்டுப்புறத் தன்மை, குறத்தி பயணம், அணியும் ஆபரணங்கள் குறித்த செய்திகள் கொண்ட தர்க்கப் பாடல்கள், கோமாளியின் (கட்டியங்காரன்) கட்டியங் கூறும் முறை, நாட்டுப்புற இசை வகைகள், சிங்கன், சிங்கி (குறவன குறத்தி) கட்டியங்காரன் - கோமாளி ஆகிய பாத்திரங்கள் போன்ற கூறுகள் குற்றாலக் குறவஞ்சியிலும், குறவன் குறத்தி ஆட்டத்திலும் வேறுவேறான முறைகளில் இடம் பெறுகின்றன.

இதன்வழியே குற்றாலக் குறவஞ்சியின் பிற்பகுதி நாட்டுப்புறக் கலை வடிவமான குறவன் குறத்தி ஆட்டத்திலிருந்து சில கூறுகளை எடுத்துக் கொண்டு உருவாக்கப்பட்டது எனக் காண முடிகிறது.

குறவனும் குறத்தியும் பாடிக்கொள்ளும் பாடல்கள் பல இவர்தம் ஆட்டக் கலைக்கோ, வாழ்க்கைக்கோ நெருக்கமான தொடர்பின்றி உள்ளன.

குறவன் குறத்தி ஆட்டப் பாடலில் நரிக்குறவர் எனும் ஒரு பிரிவினரின் வாழ்க்கையை மட்டுமே போலச் செய்து காட்டுகின்றனர். ஏனைய குறவர் இனம் பற்றிய வாழ்க்கையோ, தாழ்த்தப்பட்ட இனத்தவரான பறையர், சக்கிலியர் ஆகியோர் பற்றிய

வாழ்க்கையோ ஆட்டப் பாடல்களில் பெரிதும் விரித்துக் காட்டப்படுவதில்லை.

குறவனுக்கும், குறத்திக்குமிடையே உள்ள ஆட்டப் பாடல்களுள் தர்க்கப் பாடல்கள், ஏசல் பாடல்கள் ஆகியவையே அதிகம் உள்ளன. அவற்றில் கேள்விக்குப் பதில் எனும் முறையிலேயே பாடல்கள் அமைந்துள்ளன.

பாடலடிகள் 100க்கு மேல் இல்லாதனவாக உள்ளன. குறைந்த பாடலடிகள் 15 அடிகள் வரை உள்ளன. சொளவப் பாடலடிகள் இதிலும் குறைந்த அளவில் இடம் பெறுகின்றன. அடிகள் குறைவாக உள்ள பாடல்களைக் கலைஞர்கள் திரும்பப் பாடும் முறை, பின்பாட்டு முறை, வசனம் பேசும் முறை போன்ற முறைகளால் அதிக நேரம் பாடுவதற்கு அமைத்துக் கொள்கின்றனர்.

# துணை நூற் பட்டியல்


| | | |
|---|---|---|
| 1. | அண்ணாமலை, மு. | 'நமது பண்பாட்டில் நாட்டுப்புற இலக்கியம்', மருதமலையான் பதிப்பகம், சென்னை - 14. 1984 |
| 2. | | 'அகநானூறு', கழக வெளியீடு. 1970. |
| 3. | எட்கார் தர்ஸ்டன் (தமிழாக்கம்) க. ரத்தினம் | 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்'- தொகுதி - 1. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |
| 4. | எட்கார் தர்ஸ்டன் (தமிழாக்கம்) க. ரத்தினம் | 'தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்- தொகுதி' - 2. தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |
| 5. | கபிலவாத்ஸ்யாயன், சச்சிதானந்த வாத்ஸ்யாயன் (தமிழில்) எம்.ஏ. அப்பாஸ் | 'இந்திய கிராமிய நடனங்கள்' ஔவை நூலகம் வெளியீடு. |
| 6. | கார்த்திகா கணேசர் | காலந்தோறும் நாட்டியக்கலை, பாரி புத்தகப் பண்ணை, சென்னை. 1980. |
| 7. | கேசவன், கோ. | 'நாட்டுப்புறவியல் ஒரு விளக்கம்' புதுமைப் பதிப்பகம், திருச்சி. ஜூலை 1986. |

| | | |
|---|---|---|
| 8. | சண்முகம் பிள்ளை | 'சிற்றிலக்கிய வகைகள்' மணிவாசகர் நூலகம், சிதம்பரம். 1982. |
| 9. | சண்முகசுந்தரம், சு. | 'திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாய அமைப்பு', காவ்யா வெளியீடு, பெங்களூர். டிசம்பர் 1986. |
| 10. | சாமிநாதையர், ப.ஆ. | 'குமாரலிங்கர் குறவஞ்சி' உ.வே.சா. நூலகம் வெளியீடு, எண். 69, சென்னை. |
| 11. | அ. சிங்காரவேலு முதலியார் | 'அபிதான சிந்தாமணி' ஏசியன் எடுகேசனல் சர்வீஸ், டில்லி - 16. (திருத்திய பதிப்பு) (இரண்டாம் பதிப்பு) |
| | ஆ. சிவப்பிரகாச முதலியார் | |
| 12. | சோமசுந்தரனார் (விளக்கவுரை) | 'குறிஞ்சிப்பாட்டு' கழக வெளியீடு |
| 13. | திரிகூட ராசப்பக் கவிராயர் | 'குற்றாலக் குறவஞ்சி' என்.சி.பி.எச் வெளியீடு, சென்னை. 1985. |
| 14. | திரிகூட ராசப்பக் கவிராயர் | 'குற்றாலக் குறவஞ்சி' கழக வெளியீடு, 1980. |
| 15. | நவநீதகிருட்டிணன் கே.ஏ. குணசேகரன் | 'கரகாட்டம்', அகரம் அச்சகம், சிவகங்கை. 1982. |
| 16. | பத்மாசுப்ரமணியம் | 'பரதக்கலை' (கோட்பாடு) வானதி பதிப்பகம். 1970 |
| 17. | பிரேமலதா (ப.ஆ.) | 'தியாகேசர் குறவஞ்சி', தஞ்சாவூர் சரஸ்வதி மஹால் வெளியீடு - 130. |
| 18. | புலியூர்க்கேசிகன் | 'முக்கூடற்பள்ளு', பாரி நிலையம், சென்னை. சூலை 1983. |
| 19. | புலியூர்க் கேசிகன் | 'கலித்தொகை', பாரி நிலையம் சென்னை. சனவரி 1978. |

20. பெருமாள், ஏ.என். 'சின்னமகிபன் குளுவ நாடகம்' உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

21. பெருமாள், ஏ.என். 'தமிழக நாட்டுப்புறக் கலைகள்' உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு.

22. முத்துச்சாமி, ந. 'அன்று பூட்டிய வண்டி' அன்னம், சிவகங்கை. மே. 1982.

23. லூர்து, தே. (ப.ஆ.) 'நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்' பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி. 1981.

24. வரதராசன், வெ. 'தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்' தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## ஆய்வு ஏடுகள் (வெளியிடப்பெறாதவை)

1. இராசு, இரா. 'அம்மன் வழிபாட்டுச் சடங்குகளில் நாடகக் கூறுகள்' நாடகத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1986.

2. குணசேகரன், கே.ஏ., 'நாட்டுப்புற ஆட்டப் பாடல்கள்' முனைவர் பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21. நவம்பர் 1985.

3. குணசேகரன், கே.ஏ., 'நீலகிரி மலையின மக்கள் ஆட்டங்கள்' (தோடர், கோத்தர், இருளர்) நாடகத் தொகுப்பு, ஒப்புநோக்குப் பிரிவு, மலையின மக்கள் ஆய்வு மையம், உதகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

## கருத்தரங்கில் வாசித்தளித்தக் கட்டுரைகள்

1. நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள் கருத்தரங்கம், 21, 22, மே 1986, சமூகவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. சாகித்ய அகாதெமி, 25 ஜூலை, 1987ல் மதுரை காமராசர் பல்கலைக் கழக வளாகம், மதுரையில் நடத்திய குறவஞ்சி இலக்கியக் கருத்தரங்கில் வாசித்தளிக்கப்பட்ட கட்டுரைகள்.

## ஆங்கில நூல்கள்


| | | |
|---|---|---|
| 1. | Edgar Thurston | 'Caste and Tribes of Southern India', Vol. IV - K to M and Vol. III. K. Govt. Press, Madras. 1909. |
| 2. | Mathur, U.B. | 'Folk ways in Rajasthan' The Folk lorists, Jaipur. 1986. |
| 3. | Raghavan, M.D., | 'Folk Plays and Dances of Kerala' The Ramavarma Archaeological Society, Trichur. 1947. |
| 4. | Ramasamy, T. | 'Tamil Yakshagaanas', Vizhikal, Madurai - 16. 1987. |
| 5. | Shokti Malik, Publisher | 'Yaksagana' (Advance Drama of India) Abhinav Publications, New Delhi. 1977. |
| 6. | Srinivasan, N. | 'Mohinivilosa Kuravanchi' (A Dance Drama) Saraswathi Mahal Library, Thanjavur. 1985. |
| 7. | Srinivasa Varma, G. | 'Yerukala Dialect' Annamalai University, |

| | | |
|---|---|---|
| | | Dept. of Linquistics publication No. 57, 1978. |
| 8. | Uma Anand (Editor) | 'Sangeeth Nataka' Journal of the Sangeeth Natak Acadamy, 53 - 54, July - Sept. & Oct - Dec. 1979 and Jan. - March 1979. |

***Madras District Gazetteers.***

1. Tinnevelly District Vol.II (1917) Edited by C.A. Souther Press, 1934.
2. North Arcor District, Vol. II (Statistical Appendix)
3. Kulathuran G. — Folk influence in Tamil Literature with special reference of Pallu, Kuravanchi & Nonti Natakam, (Unpublished Ph.D., thesis submitted at Kerala University. 1980.

# பின் இணைப்புகள்

1. குறவன் குறத்தி ஆட்டப் பாடல்கள் 1 - 11
2. சொளவம் 1 - 3
3. குறவன் குறத்தி ஆட்டத்தில் பேசும் வசனத்தின் ஒரு பகுதி 1 - 2
4. குழூஉக்குறிச் சொற்கள்
5. பிற இனத்தார் பட்டியல்
6. ஆட்டப் பாடல்களில் வழக்குச் சொற்கள்
7. நிழற்படங்கள்
8 ஆட்ட அசைவுக் கூறு - வரைபடம்

## குறவன் குறத்தி (சுய அறிமுகப் பாடல்) ஆட்டப் பாடல் - 1

*(டப்பாத் தெம்மாங்கு)*

*பாடல் - 1*

*குறவன் :*
டேயோ மைனா
டேயோ மைனா
டேயோ மைனா டியாலோ

*குறத்தி :*
டேயோ மைனா
டேயோ மைனா
யேயோ மைனா டியாலோ

*குறவன் :*
பர்மா சைனா எங்க ஊரு

*குறத்தி :*
பர்மா சைனா எங்க ஊரு
பக்கம் வந்தா சிங்கப்பூரு (பக்)
போருக்காகப் பயந்து நாங்க (போ)
ஓடிவந்தோம் இந்த ஊரு (ஓடி)
சவகர் இடத்தில் நாங்க போயி (சவ)
சங்கதிய எடுத்துச் சொன்னோம் (சங்க)
அவரு எங்க மொகத்தப் பாத்து (அவரு)
அனுப்பி விட்டார் தென்னாட்டுக்கு (அனுப்பி)
அனுப்பி விட்டார் தமிழ்நாட்டுக்கு (அனுப்பி)
கப்பலேறி கடல் கடந்து (கப்ப)
கடல் கடந்து உருவம் மாறி (கடல்)
தப்பிப் பிழைத்து வந்தோம் சாமி - நாங்க (தப்பி)
தகுதியான நரிக்குறவர் (தகுதி)
கத்தி விப்போம் சீப்பு விப்போம் (கத்தி)
கத்தரிக்கோல் எல்லாம் விப்போம் (கத்திரி)

*குறவன் :*
நரி போகுது சாமி....
நரி போகுது சாமியோவ்.......

*(அடைப்புக்குறிக்குள் இடம் பெறும் வரி பின்பாட்டாகப் பாடப்படுவதாகும்)*

*கல்லடித்திடல் பிச்சை, வயது 45, முகவை மாவட்டம்.*

*நாள் : 16.7.1987*

*குறத்தி* : டேயோ மைனா
டேயோ மைனா
யேயோ மைனா டியாலோ (டேயோ) *27*

*குறவன்* : பச்சப்பாசி பவளப்பாசி
வாங்கலீயோ ஆயாலோ
பச்சப்பிள்ளைக்குக் கோத்துப்போட்டா
நல்லா இருக்கும் ஆயாலோ *31*

*குறத்தி* : பச்சப் பாசி பவளப்பாசி
வாங்கலீயோ ஆயாலோ
பச்சப்புள்ளைக்குக் கோத்துப்போட்டா
செத்துப்போகும் ஆயாலோ *35*

*குறவன்* : ஏ! அசக் ஏ! அசக்

*குறத்தி* : ஏ! அசக் ஏ! அசக் *37*

*குறவன்* : சின்ன ஊசி சீம நூலு
வாங்கலீயோ ஆயாலோ *39*

*குறத்தி* : சாக்கு தைக்க கோணி ஊசி
வாங்கலீயோ ஆயாலோ *41*

*குறவன்* : பாசி விப்போம் பவளம் விப்போம்
பட்டிக்காடு முழுதும் விப்போம் *43*

*குறத்தி* : ஊரு தும்புக் கம்பிளிக் கயிறு
ஊருபூராம் புகுந்து விப்போம் *45*

*குறவன்* : முள்ளுவாங்கி பெரிய ஊசி
வாங்கலீயோ ஆயாலோ *47*

*குறத்தி* : சேல தைக்க நைஸ் ஊசி
வாங்கலீயோ ஆயாலோ *49*

*குறவன்* : காடை கௌதாரி மைனா
வாங்கலீயோ ஆயாலோ *51*

**குறத்தி :** கட்டிப்போட்டுத் தீனிபோட்டா
முட்டை போடும் ஆயாலோ 53

**குறவன் :** ஏ! அசக் ஏ! அசக்

**குறத்தி :** ஏ! அசக் ஏ! அசக் 55

**குறவன் :** டியோமைனா டியோமைனா
டியோமைனா டியாலோ (டீயோ) 57

**குறத்தி :** காக்கா திம்போம் கழுகு திம்போம்
காடை கௌதாரி திம்போம் 59

**குறவன் :** கொக்கு வக்கா நாங்க திம்போம்
கூலக்கிடா நாங்க திம்போம் 61

**குறத்தி :** குயிலுக்கறி நாங்க திம்போம்
கோழிக்கறி திங்க மாட்டோம் 63

**குறவன் :** நரி போகுது சாமி
நரி போகுது சாமியோவ் 65

**குறவன் :** அய்யா! கொக்குப் புடிப்போம் குயில் புடிப்போம்
கொண்டை வளத்தான் குருவி புடிப்போம் 67

**குறத்தி :** மான்புடிப்போம் மயில் புடிப்போம்
மஞ்சக் கரிச்சான் குஞ்சி புடிப்போம் 69

**குறவன் :** டியோமைனா டியோ மைனா
டியோமைனா டீயாலோ (டீயோ) 71

**குறத்தி :** ஊசி விப்போம் பாசி விப்போம்
ஊருக்குள்ளே புகுந்து விப்போம் 73

**குறவன் :** கண்ணாடிய ஒடச்சி நாங்க
வைரக் கல்லுன்னு விப்போம் 75

*குறத்தி :* கண்ணாடியத் தேச்சு நாங்க
வைரக்கல்லுன்னு சொல்லி விப்போம் 77

*குறவன் :* நரி போகுது சாமி
நரி போகுது சாமியோவ் 79

*குறத்தி :* மதுரை மீனாட்சி பட்டணமாச்சு
மேன்மையான கட்டமாச்சு 81

*குறவன் :* பட்டுநூல் காரத் தெருவுமாச்சு
பசி பட்னி தீக்கலாச்சு - அய்யா 83

*குறத்தி :* சோறு போடுன்னு சொன்னா
சொரக்குடுக்கை ரொம்பிப் போகும் - அய்யா 85

*குறவன் :* கஞ்சி போடுன்னு சொன்னா
கைப்போவானி ரொம்பிப் போகும் 87

*குறத்தி :* அய்யா!
பானைமேல பானை வச்சுப்
பால்பானை பொங்குவோம் - நாங்க
பால்பானை பொங்கும் போது
ஏகச்சத்தம் போடுவோம் 91

*குறவன் :* அய்யா!
எங்க சாமி ஓங்குமா
ஓங்கசாமி ஓங்குமா
எங்கசாமி காளிய நேந்து
எருமக்கிடா வெட்டுவோம் 95

*குறத்தி :* அய்யா!
எங்க கொலம் காத்தருளும்
காளியாத்தா எங்கசாமி
எங்கசாமி காளியநேந்து
கருங்கிடாயா வெட்டுவோம் 99

*குறவன் :* அய்யா!
பொய் பிரட்டுப் பேசமாட்டோம்
போலீசுக்குப் போகமாட்டோம் *101*

*குறத்தி :* அய்யா!
களவுதிருடு செய்யமாட்டோம்
கச்சேரிக்குப் போகமாட்டோம் *103*

*குறவன் :* அய்யா
எங்கப் பொண்டாட்டிப் புள்ளைகளை
பேதகமா எண்ணமாட்டோம் *105*

*குறவன் :* மஞ்சிமலை நரிக்குறவர்
நாங்களே சாமி
மஞ்சிமலை நரிக்குறவர்
நாங்களே சாமி *109*

*குறத்தி :* இந்த மண்டலத்தை சுத்திவாறோம்
பாருங்க சாமி
இந்த மண்டலத்தை சுத்தி வாறோம்
பாருங்க சாமி *113*

*குறவன்*
*& குறத்தி :* டியோமைனா டியோமைனா *114*

*குறவன் :* காட்டு ராசா வேடுவர் சிங்கி
ஓமைனா டியாலோ - இந்த
கரையோரம் சிக்கிவந்த
ஓமைனா டியாலோ *118*

*குறத்தி :* பச்சை மலை நரிக்குறவர் நாங்களே சாமி - இந்த
பார்பூராம் சுத்திவந்தோம் கேளுங்க சாமி *120*

*குறவன் :* கொஞ்சுங்கிளி குருவி மைனா
கொக்குங்க சாமி - இந்தக் *122*

*குறத்தி :* காட்டுக்குள்ளே நரி
வெள்ளெலி புடிப்போம் சாமி *124*

**குறவன் &**
**குறத்தி :** கொக்குப் புடிப்போம் (கொக்கு)
குருவி புடிப்போம் (குருவி) *126*
கொண்டவளத்தான் (கொண்)
குஞ்சு புடிப்போம் (குஞ்சு) *128*
நாரை புடிப்போம் (நாரை)
நரி புடிப்போம் (நரி) *130*
நாண வளத்தான் (நாண)
குஞ்சு புடிப்போம் (குஞ்சு) *132*

ஓ! சாமி......... நரி போகுது சாமியோவ் *133*

***(தஞ்சை மல்லிகா - இராசேந்திரன் (பின்பாட்டுப் பாடியவர்கள்) பாடியோர் விவரம் அடிக்குறிப்பில் காண்க.)***

குறவன் குறத்தி ஆட்டப் பாடல் எண். 2
*(நாலடித் தெம்மாங்கு)*

**குறவன் :** இத்தனை நாள் வரையில்
என்னைத் தனியே விட்டு
எங்கே நீ போயிருந்தாயோ - வங்காளச் சிங்கி
எங்கே நீ போயிருந்தாயோ *4*

**குறத்தி :** பல ஊரு சென்று
பாசி ஊசி விக்கப் போனேன்
பலத்த மழையினாலே - அடே குறவா
வர எனக்கு முடியவில்லை. *8*

**குறவன் :** அறுபத்தி நாலு முழம்
அள்ளி முடிந்த கூந்தல்
அவுந்த பயணம் என்னடி - வங்காளச் சிங்கி
அத எனக்குச் சொல்ல வேணுன்டி. *12*

*குறத்தி*
*வசனம் :* அவசியம் சொல்லித்தான் ஆகணுமா?

*குறவன் :* ஆமா. சொல்லித்தான் ஆகணும்.

*குறத்தி :* குளிச்சுத் தலைமுழுகிக்
*(பாடல்)* கோயிலுக்குப் போகையிலே
கூட்ட நெரிசலிலே - ஏ குருவிக்காரா
கூந்தல் கலஞ்சு போச்சுடா 16

*குறவன் :* நெத்தியிலே நானுமிட்ட
*(பாடல்)* நீலவர்ணப் பொட்டு
பொட்டுக் கலஞ்சதென்னடி - வங்காளச் சிங்கி
அத எனக்குச் சொல்ல வேணுமடி 20

*கோமாளி* அண்ணன் பொட்டு வச்சு விட்டாராம்ல
*(வசனம்) :* ஏத்தா! அது எங்கேன்னு சொல்லு.

*குறத்தி :* ஓகோ பொட்டு எங்கேன்னு கேக்குறாரா, சொல்றேன்.

*பாடல் :* வேகாத வெய்யிலிலே
கைவீசி நடக்கையிலே
வேர்வை பட்டதாலே - ஏ குருவிக்காரா
பொட்டு மறஞ்சு போச்சுடா 24

*குறவன்*
*பாடல் :* காதுல நானும் போட்ட
கம்மல் வயிரக்கல்லு
கழண்ட பயணமென்னடி - வங்காளச் சிங்கி
அத எனக்குச் சொல்ல வேணுமடி 28

*குறவன்*
*வசனம் :* காதுல நானும் போட்ட
கம்மல் வயிரக் கல்லக் காணாமடி
அத எங்கேடி போட்டே
மறைக்காமச் சொல்லுடி குறத்தி

| | | |
|---|---|---|
| **குறத்தி பாடல் :** | மதுரைக்கு நேர் கெழக்கே<br>மாரியம்மன் தெப்பக்குளத்திலே<br>மஞ்சநீராடப் போனேன்டா - ஏ குருவிக்காரா<br>குளிக்கையிலே காணாமப் போச்சடா - ஏ குருவிக்காரா<br>குத்தங் கொறை ஏதுமில்லையடா | *33* |
| **கோமாளி வசனம் :** | என்னம்மா! அண்ணாச்சி வீட்டு இன்னும்<br>ஒரு சாமானக் காணோம்னுல யோசிக்கிறாரு,<br>அண்ணே என்னத்தக் காணோம்னு விளக்கமாச்<br>சொல்லுங்க. | |
| **குறவன் பாடல் :** | மூக்கில நானும் போட்ட<br>மூனு வயிரக்கல்லு<br>முறிஞ்ச பயணமென்னடி - வங்காளச் சிங்கி<br>அத எனக்குச் சொல்ல வேணுமடி | *37* |
| **குறத்தி :** | மூக்க வலிக்குதுன்னு<br>மூக்கத் தொடைக்கப் போனேன்<br>மூக்குத்தி முறிஞ்சு போச்சடா - நரிக்குறவா<br>குத்தங் கொறை ஏதுமில்லையடா | *41* |
| **குறவன் :** | வைகாசி மாத்தையிலே<br>வாங்கி வந்தேன் வைரத்தோடு<br>வகை மோசம் ஆனதென்னடி - அடி குருவிக்காரி<br>வகை எனக்குச் சொல்ல வேணுமடி | *45* |
| **குறத்தி :** | எனக்கு இஷ்டமான<br>எதுத்த வீட்டு அக்காளுக்கு<br>எறவை கொடுத்ததாலேடா - அட நரிக்குறவா<br>ஏதும் விசயம் ஒன்னுமில்லேடா - அட நரிக்குறவா<br>ஏதும் விசயம் ஒன்னுமில்லேடா | *50* |
| **குறவன் :** | கையில் போட்டதொரு<br>கணையாழி மோதிரமும்<br>கழண்டு போனதென்னடி - அடி நரிக்குறத்தி<br>அத எனக்குச் சொல்ல வேணுமடி | *54* |

குறத்தி : கடைகடையாத் தெருவில்
கத்தரிக்கா வாங்கப் போனேன்
கத்தரிக்காக் காம்பு குத்தி
கணையாழி கழண்டு போச்சுடா 58

குறவன் : ஒனக்குன்னு வாங்கி வந்த
ஒசந்ததொரு தும்பர் பாடி
ஓரங்கிழிஞ்ச தென்னடி - அடியே சிங்கி
உண்மையைச் சொல்ல வேணுன்டி 62

கோமாளி வசனம் : ஆசையா அண்ணன் வாங்கிக் கொடுத்த 'பாடி' கிழிஞ்ச அர்த்தம் என்ன? அது ரொம்பவும் எங்களுக்குச் சந்தேகமாக இருக்கு. சும்மா டுப் விடாம உள்ளதை உள்ளபடிச் சொல்லிப்பிடு ஆமா!

குறத்தி வசனம் : அதா! அதெல்லாம் நீங்க நெனைக்கிறாப்ல கிடையாதுய்யா

பாடல் : அதிகாலையில் எந்திரிச்சி
அடுப்புச் சாம்பல் அள்ளும்போது
ஆணி குத்திக் கிழிச்சிடுச்சி - குருவிக்காரா
காரணங்கள் ஒன்னுமில்லையடா 66

குறவன் வசனம் : நீ சொல்லி வாறது சரியாத் தெரியலடி குறவன் எங்கிட்ட ஒங்குறப்புத்தியக் காட்டாம ஒழுங்காக் கேட்ட கேள்விக்குக் காரணத்தைச் சரியாச் சொல்லுடி.

குறவன் பாடல் : கையில நானுமிட்ட
கல்பதிச்ச மோதிரமும்
காணாமல் போனதென்னடி - நரிக்குறத்தி
காரணத்தைச் சொல்ல வேணுமடி. 70

கோமாளி வசனம் : ஆத்தா! அண்ணன் போட்டதை எல்லாம் எவன்கிட்டக் கழட்டிக் கொடுத்தே அதச் சொல்லும்மா.

**குறத்தி :** காலையிலே எந்திரிச்சி
காய்கறிக் கடைக்குப் போனேன்
கழண்டு விழுந்திரிச்சுடா - அட குருவிக்காரா
காரணங்கள் ஏதுமில்லையடா 74

**குறவன் வசனம் :** அடத்தம்பி! அதெல்லாம் போகட்டும்
இப்பக் கேக்கப் போறதுக்கு பதில் சொல்லலைன்னா
இவள வெரட்டிப்புடனும்டா.

**குறவன் பாடல் :** காலுல போட்டியிருந்த
கட்டுவன் ஒரு சோடி
கட்டுவன் தொலஞ்சதென்னடி - அடியே குறத்தி
கவனமாக எடுத்துச் சொல்லடி. 78

**குறத்தி பாடல் :** கார்த்திகை மாசத்திலே
கால் கடுத்தப் பயணத்திலே
கட்டுவன் கழண்டு போனதடா - ஏ குருவிக்காரா
குத்தங்கொறை ஏதுமில்லையடா 82

**கோமாளி வசனம் :** அண்ணன் கேக்குறதும் சரியாத்தான் இருக்கு
ஆத்தா சொல்றதும் சரியாத்தான் இருக்கு.

**குறவன் வசனம் :** போடா சால்றாப் போடுற பயலே,
அவளுக்கு வக்காளத்து வாங்காதே,
அவ ஊரு பூறாப் போயி இப்பத்தான் வந்திருக்கா.
கேட்டா எகனைக்கு மொகனப் பேசுறா.
சரி. இந்தச் சேதியைக் கேக்குறேன்
இதுக்கு என்ன சொல்லுவானு பாப்போம்.

**குறவன் பாடல் :** சித்திரை மாத்தையிலே
செய்து போட்ட கால் கொலுசு
கழண்ட பயணமென்னடி - அடியே குறத்தி
சேதி எனக்குச் சொல்ல வேணுமடி 86

**குறத்தி பாடல் :** மாரியம்மன் தெப்பக்குளத்திலே
மஞ்ச நீராடப் போகையிலே
மறந்து வச்சுவந்தேனடா - அட குருவிக்காரா
மாற்றங்கள் ஏதுமில்லையடா 90

***குறவன் :*** சாயச் சருகச்சேலை
சந்தையில வாங்குன சேலை
சாயம் வெளுத்ததென்னடி - அடி குறத்தி
சரியாக எனக்குச் சொல்லடி *94*

***குறத்தி :*** மாமா வீட்டிலே இருக்காமலே
வீதியிலே திரிஞ்சதாலே
வெய்யில் பட்டு வெளுத்துப் போச்சுடா - குறவா
வேற ஒன்னும் சேதி இல்லையடா. *98*

***(புலியடிதம்மம் செல்வம் அவர்களும், அழகர்சாமி வாத்தியார் அவர்களும் இணைந்து பாடிக் காட்டியது இதுவாகும். கோமாளியும் சில நேரங்களில் மேள வாத்தியக்காரர்களும் பங்கேற்பதுண்டு.)***

## ஏசல் பாடல் எண். 3

### *(தெக்கத்தி நையாண்டி இசை)*

***குறத்தி :*** ஆசை யெல்லாம் இருக்கட்டுண்டி
அந்திப் பொழுது ஆகட்டுண்டி
மாசி நல்லா மறையட்டுண்டி
மனக்கவலை தீர்த்துக்கலாம். *4*

***குறவன் :*** ஒன்ன நானுந் தொட்டதற்கு
நொப்பன் சாட்சி சொன்னதற்கு
மானா மதுரையிலே நான்
மாடா ஒழைக்கிறேண்டி *8*

***குறத்தி :*** கண்டியிலே கடைபொறக்கி
கடைக்குக் கடை நூல் பொறக்கி
தோட்டத்திலே தொன்ன நக்கி
தொடர்ந்து வாடா நடந்துபோவோம். *12*

*குறவன் :* அடுப்பு நக்கி துடுப்பு நக்கி
அடுப்பாங்கற சாம்பல் நக்கி
சாம்பல் நக்கி சவதி நக்கி
சாம்பாடு செம்பு நக்கி *16*

*குறத்தி :* ஓடையிலே புள்ளப்பெத்து
சாலையிலே தொட்டிகட்டி
தஞ்சாவூரு சந்தையிலே
சங்குமணி வாங்கித்தாடா *18*

*குறவன் :* மதுரையிலே குதிரை வாங்கி
மல்லியப்பூ ஆரங்கட்டி
வண்டி ஓட்டச் சவுக்கில்லாம
தவிக்கிறியே ஏங்கிட்டே *22*

*குறத்தி :* அடப் போனாலும் போங்க
மதுரைச் சுண்ணாம்பு தாங்க - அட
வந்தாலும் வாங்க - வெறகனூர்
வெத்தல தாங்க

*குறவன் :* சாலை நல்லாக் கடந்து வாடி - புள்ளே
சந்தைப் பேட்டை தாண்டி வாடி
ஓடை நல்லாக் கடந்து வாடி - குறத்தி
ஓடிப்போவோம் தஞ்சாவூரு *26*

*குறத்தி :* சாலை நல்லாக் கடக்க மாட்டேன் - குறவா
சந்தைப் பேட்டைத் தாண்டமாட்டேன்
ஓட நல்லாக் கடக்கமாட்டேன் - குறவா
ஒங்கூட வரவும் மாட்டேன். *28*

*குறத்தி :* மாடி மேலே மாடி கட்டி - குறவா
மாரளவு சன்னல் வைத்து
எட்டி எட்டிப் பார்த்தாலுமே - குறவா
எறவப் புருசன் நீ தானடா. *32*

*குறவன் :* பாயநல்லா பிரிச்சுப்போட்டு - குறத்தி
பச்ச மொளகாயக் கிள்ளிப்போட்டு
பழக்கமில்லாத குறத்திகிட்டே - இப்போ
பழக இப்பப் பயமா இருக்கு. *36*

***(இருவர் இணைந்து பாடும் இப்பாடல் செயற்கைச் சூழலில் தஞ்சாவூர், மேட்டுத்தெரு, வீரம்மாள் அவர்களிடம் பாடக் கேட்டது)***

## சந்தைக்கடைப் பாடல் எண். 4
### *(நையாண்டி இசை)*

சாத்தூருச் சந்தையிலே - ஏ மாமா எனக்கு
சைசான சேல வாங்கித்தா மாமா *2*

வெள்ளிக்கெழமைச் சந்தையிலே ஏ மாமா எனக்கு
வெள்ளரிக்கா வாங்கியே தா மாமா *4*

சனிக்கெழமச் சந்தையிலே ஏ மாமா எனக்கு
சக்கரைக்கட்டி வாங்கித்தாயேன் மாமா *6*

ஞாயித்துக்கெழமச் சந்தையிலே ஏ மாமா எனக்கு
மஞ்சக் கயிறு வாங்கித்தாயேன் ஏ மாமா *8*

திங்கக்கெழமச் சந்தையிலே ஏ் மாமா எனக்கு
திண்பண்டம் வாங்கித்தாயேன் ஏ மாமா *10*

செவ்வாய்க்கெழமச் சந்தையிலே ஏ மாமா எனக்கு
செவந்திப்பூவு வாங்கி நீயும் தா மாமா *12*

புதன்கிழமெச் சந்தையிலே ஏ மாமா எனக்கு
புடவ ஒன்னு வாங்கியே தா மாமா 14

வியாழக்கெழமச் சந்தையிலே ஏ மாமா எனக்கு
வெள்ளிக் கொலுசு வாங்கித்தா மாமா 16

*(தென்காசி வாசுகி பாடிக் காட்டியது)*

## குறவன் குறத்தி காதல் பாடல் எண். 5
## *(இழுவைத் தெம்மாங்கு)*

***குறவன் :*** அடியே,
மலையிலே மலையழகு
மலையைச் சுத்திச் செடி அழகு - நம்ம
நாக மலையழகு - இந்த
நாட்டினிலே கண்டதில்லே 4

***குறத்தி :*** மாமா,
மானிருக்கும் மறவர்குலம்
மயிலிருக்கும் திருமங்கலம்
தேனிருக்கும் நாகமலை - இப்ப
தேடி வந்தா ஆகாதா 8

***குறவன் :*** அடியே,
வட்டவட்டக் கொண்டக்காரி
வளவுக்கொண்ட நெளிவுக்காரி
கண்ட கண்ட நேரமெல்லாம் - இப்போ
கட்டிப் புடிக்கத் தோணுதடி 12

**குறத்தி** : அடே,
மலையான மலையுமில்லே - குறவா
வண்டிவர டைமுமில்லே
மாமன் மகன் கூட்டு வண்டி - இப்ப
ஒத்தையிலே போகுதில்லே

**குறவன்** : இவ,
மதுரைக்குப் போகனும்கிறா - நல்ல
மல்லியப்பூ வேணுங்கிறா
மல்லியப்பூ வச்சொடனே - இவ
மருமகனைப் புருசன்கிறா

**குறத்தி** : அடே,
சந்தையிலே மீனு வாங்கி குறவா
சலசலன்னு கொழம்பு வச்சு
கொத்தமல்லி பத்தலேன்னு குறவன்
குத்துராண்டி டப்பாங்குத்து.

**குறவன்** : ஒன்னைய நான் தொட்டதுக்கு - புள்ளே
நொண்ணன் சாக்கி சொன்னதுக்கு
வடபழஞ்சி மந்தையிலே - இப்போ
மாடா ஒழைக்கிறேண்டி.

செவகங்கை போகணுங்கிறா
செவந்திப்பூவு வேணுங்கிறா
செவந்திப்பூவ வச்சொடனே - இப்ப
செவத்தப்புருசன் வேணுங்கிறா

சீட்டுக்கட்டு வேணுங்கிறா
சினிமாப் பாக்க வேணுங்கிறா
சினிமா பாத்து வந்தொடனே - இவ
சித்தப்பனை புருசன்கிறா

கட்டப்புள்ளே குட்டப்புள்ளே
கருகமணி போட்ட புள்ளே
கட்டிக் குடுக்கலைன்னு
முட்டுறாளே செவத்துமேலே

பச்ச பச்ச முருங்கக்காயாம்
பாடரங்கா முருங்கக்காயாம்
முருங்கக்காயைத் தின்னுப்புட்டு- இவ
மூனு புருசன் கேக்குறாளே

அடியே,
ஆளிலேயும் அழகந்தாண்டி - புள்ளே
அரும்பு மீசைக் காரன்தாண்டி
ஆசை ரொம்ப உள்ளவன்டி - புள்ளே
ஆத்துப்பக்கம் ஓடி வாடி.

***(தென்காசி முத்துலெட்சுமி மற்றும் தென்காசி வாசுகி ஆகியோரிடம் செயற்கைச் சூழலில் பெறப்பட்ட பாடலிது.)***

## குறத்தி மனம் பாடல் எண். 6

*(சிந்து)*

***குறவன் :*** அட, மாமரத்தோப்பிலே
மாரியம்மன் கோவில்
மங்கையே நீ யாரு - எந்தனுக்கு
வடபழஞ்சி ஊரு - செல்லமுத்து
மங்காதே என் பேரு - இந்த

மம்பட்டி எடுத்து
மன்றாடிக் கேட்டாலும்
மாட்டேன் என்கிறாரு - வேலை தர
மாட்டேன் என்கிறாரு

*குறத்தி* : அய்யா,
பூரணச் சந்திரன் போலவே ஒன்முகம்
பொன்னிறமா இருக்கு - வேலை செய்யப்
போகவேணாம் எதற்கு - இந்தப்
பொம்பள மனசு ஒங்களக் கண்டதும்
போதையா இருக்கு - ஏ மச்சான்
போதையா இருக்கு. *14*

அடப் பெண்களைக் கண்டதும்
பேயும் எறங்கிடும்
பேச்சு வெளங்கலையா - பெண்ணிடத்தில்
பேசியதும் இல்லையா *18*

இரண்டும் கெட்டப் பேயே
நீ சொல்லலைய்யா *20*

***(நெல்லை சுப்பையா பாண்டியன் மற்றும் தென்காசி வாசுகி ஆகியோர் பாடிக்காட்டியது)***

## ஒடக்கார இராமசாமி கதை, பாடல் எண். 7
### *(ஓடப் பாடலிசை)*

ஆளக்கடத்தி அக்கறையிலே விடணும். நரிமுகமா இருக்கே- அய்யா ஒங்களைப் பாக்கையிலே அறிமுகமா இருக்கே.

இந்த ரெண்டு புள்ளைகளையும் நாங்களையும் எம்புட்டு ஓடத்திலே ஏத்திகொண்டு போய் அக்கறையிலே விடச் சொல்றீக. அப்படி விடனும்னா நான் ஒரு பாட்டுப் பாடிக்கிட்டே வருவேன். நீங்க அந்தப் பாட்டுக்குத் தோதா அய்யா அய்யான்னு சொல்லனும். அப்புறம் நான் எப்படிச் சொல்லுறேனோ அப்படியே நீங்களும் சொல்லனும்.

சரிங்க ஒரு பேசுக்குத்தானே சொல்லிடுறோம்.
நீங்க பாடுங்க.

ஓடக்கரை ராமசாமி அய்யா,
ஓடையும் கடக்க வேணும்
அக்கரையும் தாண்ட வேணும்
சாமியக் கும்பிட வேணும் - சின்னையா
போயிலுக்குப் போகவேணும் சின்னையா 4

***பின்பாட்டு :*** சின்னையா, சின்னையா

ஆத்தக் கடக்க வேணும்
அக்கரையைத் தாண்ட வேணும்
சாமியக் கும்பிடனும் கொழுந்தா 7

***2 மகன்கள் : பின்பாட்டு :*** கொழுந்தா

***வசனம் :*** இப்படியெல்லாம் பாடமுடியாது.

***ராமசாமி :*** அப்படின்னா நடு ஆத்திலேயே விட்டுட்டு நான் மட்டும் நீந்திப் போயிடுவேன்.

***தந்தை :*** சும்மா, பாட்டுக்குத்தானே சொல்லச் சொல்றாரு, சும்மா சொல்லுங்கம்மா.

*மகன்* : சரிங்கப்பா

ஓடக்கார ராமசாமி அய்யா - எங்கள
ஓடத்திலே ஏத்தி விடு அய்யா,
ஏ, அய்யா
ஏ, அய்யா

ஓடக்கார ராமசாமி அண்ணே - எங்கள
ஓடத்திலே ஏத்தி விடு அண்ணே
ஏ, அண்ணே
ஏ, அண்ணே

ஓடக்கார ராமசாமி மாமோவ் - எங்கள
ஓடத்திலே ஏத்திவிடு மாமா
ஏ, மாமா
ஏ, மாமா

ஓடக்கார ராமசாமி மச்சான் - எங்கள
ஓடத்திலே ஏத்திவிடு மச்சான்
ஏ, மச்சான்
ஏ, மச்சான்

ஓடக்கார ராமசாமி புருசா - எங்கள
ஓடத்திலே ஏத்திவிடு புருசா
ஏ, புருசா
ஏ, புருசா

பாத்திரங்களாகவும், பின்பாட்டாளராகவும் குறத்தியும், கோமாளியும், சில நேரங்களில் மேளதாளக் காரர்களாகவும் பங்கேற்கின்றனர். பிள்ளைகளின் தகப்பன் ஆற்றில் தவறிவிழ இருவரையும் ஓடக்கார ராமசாமி திருமணம் செய்துகொள்ளக் கதை முடிவுறும். கோமாளி பெண் வேடமிட்டுக் கூடுதலாக ஒரு பெண்ணாக மாறி இக்கதையில் பங்கேற்கிறான்.

***(நெல்லை பரமசிவம் - குறவன் வேடமிட்டவர்)***

## ஆட்டிடையன் மாற்று ரூபங்கள்.

### பாடல் எண். 8

*(நாலடித்தெம்மாங்கு)*

*குறத்தி* :
ஆளில்லாக் காட்டுக்குள்ளே
ஆடு மேய்க்கும் சின்னத்தம்பி
கருவேலங்கா முள்ளுக்குத்தி
காலுரெண்டும் நோகுதில்லே 4

*குறவன்* :
கருவேலங்கா முள்ளுக்குத்தி
காலு ரெண்டும் நொந்தாலுமே
பருவமுள்ளப் பையன்கிட்டே
பாசாங்கு செய்யாதேடி 8

*குறத்தி* :
பருவமுள்ள பையன்கிட்டே
பாசாங்கு செய்தாலுமே
அறிவு கெட்டுப் பேசாதடா
அனந்தம் வந்து சேருமடா 12

*குறவன்* :
அறிவு கெட்டுப் போனாலென்ன
அனந்தம் வந்து சேந்தாலென்ன
மனக்கவலை வைக்கமாட்டேன்
மாமன்மயன் சின்னப்பயல் 16

*குறத்தி* :
மாமன் மயன் என்று சொல்லி
மனம் துணிஞ்சு பேசாதடா
தாமதம் இல்லாமலே
தனிவழியே செல்வேனடா 20

*குறவன்* :
தாமதம் இல்லாமலே
தனிவழியே சென்றாயானால் - நான்
பாம்பாக ரூபங்கொண்டு
பாதையை மறைப்பேனடி 24

*குறத்தி* :
பாம்பாக ரூபங்கொண்டு
பாதைய மறைச்சாயானால் - நான்
ஊர்க்குருவி ரூபங்கொண்டு
ஒசரப் பறந்துருவேன். 28

***குறவன் :*** ஊர்க்குருவி ரூபங்கொண்டு
ஒசரப் பறந்தாயானால், - நான்
செம்புறாந்து ரூபங்கொண்டு - ஒன்னை
செந்தூக்காத் தூக்கிடுவேன்.

***குறத்தி :*** செம்புறாந்து ரூபங்கொண்டு - நீ
செந்தூக்காத் தூக்கினாலும்
தவறிவிழுந்து நானும் தரையில்
புல்லா மொளச்சிடுவேன்.

***குறவன் :*** தவறி விழுந்து நீங்க
தரையில் புல்லா மொளச்சாலுமே - நான்
காராம்பசு ரூபங்கொண்டு
கரும்பீருவேன் அந்தப்புல்லை.

***குறத்தி :*** காராம்பசு ரூபங்கொண்டு
கரும்பினாலும் அந்தப்புல்லை
பூமியிலே நான் தரிச்சுப்
பூவா மொளச்சிடுவேன்

***குறவன் :*** பூமியிலே தான் மொளச்சு - நீ
பாவா மொளச்சியின்னா
தூரோடு நான் புடுங்கி
தூரத்திலே போட்டுருவேன்.

***குறத்தி :*** தூரோடுதான் புடுங்கி
தூரத்திலே போட்டாயானால்
மண்ணோடு மண்ணாகியே நான்
மறைபொருளா ஆயிடுவேன்.

***குறவன் :*** மண்ணோடு மண்ணாகியே - நீ
மறைபொருளா ஆனாயின்னா
ஆடிமாத்தக் காத்துப்போல - நான்
அடித்து ஒதுக்கிடுவேன்.

**குறத்தி** : ஆடிமாத்தக் காத்துப்போல - நீ
அடிச்சு ஒதுக்கினாலும்
பள்ளத்தக் கண்டு நானும்
பதுங்கி ஒளிஞ்சிடுவேன் 60

**குறவன்** : பள்ளத்தக் கண்டு நீயும்
பதுங்கி ஒளிஞ்சாலுமே - நான்
சுருளிமலை வெள்ளம்போல
சுருட்டி இழுத்திடுவேன். 64

**குறத்தி** : சுருளிமலை வெள்ளம்போல
சுருட்டி இழுத்தாலுமே
குதித்தோடித்தான் விழுந்து
குளத்துச் சலம் ஆயிடுவேன் 68

**குறவன்** : குளித்தோடி தான் விழுந்து
குளத்துச் சலம் ஆனாலுமே - நான்
தவிக்கின்ற நேரத்திலே
தாகம் தீர்ப்பேனடி. 72

**குறத்தி** : தவிக்கின்ற நேரத்திலே
தாகம் நீ தீர்த்தாலுமே
குரவளைக்குள்ளேருந்து
குணத்தமத்தச் செய்வேனடா 76

**குறவன்** : குரவளைக் குள்ளேருந்து நீ
குணத்தமத்தச் செய்தாயினால் - நான்
வாயிலக் கையை விட்டு
வாந்தி எடுத்திடுவேன். 80

**குறத்தி** : வாயில வெரலவிட்டு - நீ
வாந்தி எடுத்தாயினால் - நான்
பாலன் பெருமாளிடம்
பாதத்தை வணங்கிடுவேன். 84

***(நெல்லை செல்லையா மற்றும் நெல்லை பரமசிவம் பாடிக் காட்டியது)***

## வசவு பாடல்

## பாடல் எண். 9

***(டப்பாத் தெம்மாங்கு கலந்த நையாண்டி இசை)***

சாலையோரம் நெருஞ்சி மரம்
சாம்பக்கோழி வச்ச மரம்
வருவதற்கு அடையாளம்
தென்னம்புள்ளே ரெண்டு மரம்
ஒனக்கும் எனக்கும் சண்டை - இப்ப
ஒடையப் போகுது மண்டை.

*(ஒடையப் போகுது மண்டை என்பதை பகரமும் உகரமும் சேர்த்து உச்சரித்து நிறுத்தி விடுவர்)*

*(குறவன் குறத்தி ஆட்டக் கலைஞர் சித்தார்த்தன், 29 வயது, வடக்கு வாசல், தஞ்சை, 24.6.1987 அன்று சிவகங்கையில் நடந்த நிகழ்ச்சியில் கேட்டது)*

அட,
வட்ட வட்டப் பாறையிலே
வரகரிசி தீட்டையிலே
நான்குடுத்த சாயத்துணி
ஆளவட்டம் போடுதடி
அட நாலும் மூனும் ஏழு - நீ
நாயத்தையே கேளு.

*(நாயத்தையே கேளு என்பதை 'ஓ' என்பதைச் சேர்த்துக் கொச்சைப் பொருளை உணர்த்தி முடிப்பர்)*

*(குறவன் கலைஞர் - பிச்சைமுத்து, புதுக்கோட்டை, 37 வயது, 2.8.1987ல் திருச்சியில் நடந்த குறவன் குறத்தி ஆட்டக்கலை நிகழ்ச்சியில் கேட்டது)*

அடப் பாத்தா நல்ல பகட்டுதா - ஒன்னப்
பரிசம் போடச் சொல்லுதடா.
கேக்க மனம் கூசுதடா - ஒன்
கிளி மூக்கு மாம்பழத்தை

அடப் பச்சைக் குழந்தையப்போல
பசப்பாதடா முன்னாலே
அறிவுகெட்ட நாயே - சும்மா
அடக்கிப்பேசடா வாய
புதுக்கோட்டை மதுக்கரைப்பட்டை - ஒன்னக்
கூப்பிடறது விளக்கமாத்துக் கட்டை

***(ரெட்டிப்பாளையம் செல்வராசு 24.6.87 மேலது, பிச்சை முத்து 2.8.87 மேலது.)***

### காதல் உறவு பாடல்
### பாடல் எண். 10
*(நாலடித் தெம்மாங்கு)*

காடக்கூடை கக்கத்திலே
கருத்த மச்சான் பக்கத்திலே
எட்டிருந்து ஒதுக்காதடா
பக்கமிருந்து பாத்துடுவாங்க

பார்த்தாலும் பச்சபுள்ளே
பார்வைக்கு ஏத்தபுள்ளே
இடுப்பு சிறுத்தபுள்ளே
இந்தப்போடு போடுறாளே

ஊராரு உறங்கட்டுண்டா
நொண்ணன் தம்பி தூங்கட்டுண்டா
நான் வருவேன் சாமத்திலே
நல்ல பாம்பு ரூபத்திலே.

படுத்தா ஒறக்கம் வல்லே
பாயப்போட்டா தூக்கம் வல்லே
தூக்கம் வந்த நேரத்திலே
ஏக்கம் வந்து எழுப்புதடி
வாடி வனக்குறத்தி ஏங்கொறத்தி
வம்பு தும்பு பண்ணாதடி - ஏங்கொறத்தி

பாய விரிச்சுப்போட்டு
பச்சமொளகாயக் கிள்ளிப்போட்டு
வழக்கம் தெரியாத கொறவன்கிட்ட
படுக்கக் கொஞ்சம் பயமாருக்கு
கொறவா அடே பயலே ஏம்புருசா
காய்ஞ்சு போன வெத்தலைக்குச் சுண்ணாம்புதாடா

கொண்டப்பூவு நல்லா குலுங்குதடி - அடியே
கொண்டைப்பூவு வாடுதடி
தஞ்சாவூரு மல்லியப்பூ என்னத்
தாளம் போடச் சொல்லுதடி

சந்தையிலே மீனு வாங்கி
சலசலன்னுக் கொழம்புவச்சு
கொத்தமல்லி பத்தலேன்னு கொறவன்
குத்துறாண்டி டப்பாங்குத்து

*(சாலைக்கிராமம் அழகர்சாமி வாத்தியார்)*

## பிணக்கு

## பாடல் எண். 11

***(டப்பாத்தெம்மாங்கு கலந்த தெக்கத்தி நையாண்டி இசை)***

தங்கத்திலே தங்கம் நானிருக்க
தனித்தங்கம் தானிருக்க
பித்தளத் தங்கத்துக்கு - கொறவன்
பித்துப் புடிச்சு அலையுறானே.

அட வந்தாலும் வாடா - மதுரைச்
சுண்ணாம்பு தாடா.

ஆசவச்சேன் - ஏம்மாமா
ஆசவச்சேன் ஒம்மேலே அப்டி
எம்மேலே நீங்க ஆசவச்சா
என்ன பண்ணுவேன்
ஒங்களுக்காக காத்திருந்தேன்

ஓராறு மாசம் - மாமா
ஓராறு மாசம்

உம்முன்னு வார்த்தை சொன்னா
என்னாங்க மோசம்.

***(சிவகங்கை காந்தி அண்ணாவி)***

## சௌளவம் - 1

*(இழுவைத் தெம்மாங்கு)*

அருப்புக்கோட்டையிலே - நொப்பன்
செருப்புத் தக்கையிலே
நானுமில்லாட்டா - நொப்பன்
நர்ரிப் போவானே

மானா மதுரையிலே - நோத்தா
கருதறுக்கையிலே
நானுமில்லாட்டா - நோத்தா
நாரிப் போவாளே

ஆத்தாடி ஆத்தாடி மூத்தவளே
குசு நங்கு நங்குன்னு போட்டவளே
மேவூட்டுக்கும் கீ வீட்டுக்கும்
பூல் பூல்னு போட்டவளே

கொணட்டி முத்தம்மா
கொணட்டி முத்தம்மா
தண்ணிக்குப் போனாளாம்
தண்ணிக்குப் போனாளாம்
வெரட்டி விட்டான் ராமசாமி
வயித்துப் புள்ளையோட

*(ஜோதி, உறுதிக்கோட்டை)*

## சொளவம் - 2

**(இழுவைத் தெம்மாங்கு கலந்த டப்பாத் தெம்மாங்கு)**

அடிபட்டுக் கோட்டையிலே - நொப்பன்
பருப்பு விக்கையிலே - அட
நானு இல்லாட்டா நொப்பன்
நாறிப்போவாண்டி. 4

அடப் பொள்ளாச்சி சந்தையிலே
புள்ளப் பெத்தவளே
புள்ள உள்ள தலமொறைக்கும்
புடுங்குப் பட்டவளே - நோத்தா
புடுங்குப் பட்டவளே - நொக்கா
புடுங்குப் பட்டவளே - நொய்த்தே
புடுங்குப் பட்டவளே - நொய்த்தே 11

***(சிவகங்கை மாவட்டம், அகிலாண்டபுரம் துரைசிங்கம், தவில் கலைஞர் பாடிக் காட்டியது.)***

## சொளவம் - 3

(தொகையறா)

எட்டாத லட்சணமே
எம்மேலொரு வாகனமே - அடி
குட்டிச்சுவரு கூரையில்லா வீடே
அடப்பொட்டிப்பய மகளே - ஒன்னே 4
எலி கண்டா விட்டுடுமா

அடியே கட்டிக் கரும்பே 6
கருவாட்டு எறும்பே - என்னக்
கடிக்க வந்த கட்டெறும்பே 8
ஹ்ம்..ம்..ம்..ம்.. கண்ணம்மா.........

*(விராமதி அம்மச்சி)*

## கோமாளி பேசும் வசனத்தில் ஒரு பகுதி - 1

கலைஞர்களை அறிமுகம் செய்விக்கும் வசனம்

ஓ! செயம்! அதாகப்பட்டது இன்றைய தினத்திலே நம்ம முனியையா குடி கொண்டிருக்கும் மாரந்தைக் கிராமத்திலே மொளப்பாரித் திருவிழாவை முன்னிட்டு நம்மளையெல்லாம் கூட்டியாந்திருக்காக.

அதுசரி, அடே நீங்களெல்லாம் எந்த ஊருப் பயலுக இங்கே எதுக்குடா வந்தியே அப்படின்னு நீங்க கேப்பீக. அதாகப்பட்டது எப்படின்னா,

நம்ம கற்களத்தூர் மூக்கையா பார்ட்டி மேளம் வாசிக்க, தஞ்சாவூர் மல்லிகா, கோமதி இருவரும் கரகத்துக்கு வந்திருக்காக. புதுக்கோட்டை ஜெயா, குறத்தி வேடக் கட்ட வந்திருக்கு. குறவன் வேசத்துக்கு இந்த வட்டாரத்தில பேர்போன புலியடிதம்மம் தங்கம் வந்திருக்கு.

கோமாளியாக ஒங்க முன்னால நிக்கிற தஞ்சாவூரு சித்தார்த்தன் நான் தான் வந்திருக்கேன்.

இந்த ஆட்டத்தை ஏற்பாடு செஞ்ச இந்த ஊரு நாட்டாண்மைக் காரவுங்களுக்கு, பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லா பேருக்கும் எங்க பணிவான, அன்பான நன்றியக் கும்பிட்டுச் சொல்லிக்கிறோம்.

நாட்டுலயே பேர்பட்ட மாரந்தை கிராமத்து ஜனங்களுக்கும், தாத்தாவுக்கும், பாட்டிக்கும், சின்னவுகளுக்கும், பெரியவுகளுக்கும், வீட்டுல படுத்துத் தூங்குறவுகளுக்கும், இன்னக்கிப் பொறந்த புள்ளைகளுக்கும், நாளைக்குப் பொறக்கப் போற புள்ளையலுக்கும் எங்க ஆட்டச் செட்டுக் காரவுங்க அம்புட்டுப் போரு சார்பிலயும் வணக்கம்.

அய்யா, வந்தனமுன்னா வந்தனம்
வந்த சனங்கல்லாம் குந்தனும்.....

*(இடைக்காட்டூர், [மானாமதுரை], கருப்பையா - [கோமாளி])*

## குறவன் குறத்தி ஆட்டத்தில் பேசும் வசனத்தில் ஒரு பகுதி - 2

**குறவன் :** அடியே! ஒனக்கும் எனக்கும் கல்யாணமாகி 10 வருசமாகுது. ஒன் வயித்து ஒரு புழு பூச்சியக் கூட காணோமடி.

**குறத்தி :** அடேய்! வெட்டிச் சோத்தத் தின்னுப்புட்டு ஒட்டுத் திண்ணையிலே படுத்தா எனக்கு எப்படிடா வயிறு வீங்கும்.

**குறவன் :** அடி போடி அம்மனப்புலுக்கே.

**குறத்தி :** அட! அப்படிச் சொல்லாதடா.
அந்த மூனையும் அறுத்துக் குடுங்க.

**குறவன் :** அடியே இன்னக்கி ஒனக்கும் எனக்கும் சண்டை
செத்தா சண்டையிலே சாகனும்...
இல்லை இந்த மண்டையோட......

**குறத்தி :** அடப்போடா எடுபட்ட பயலே
ஏழுவூட்டுக்கு வாங்கித்தின்ன பயலே
மொள்ளமாரிப் பயலே, முடிச்சவுக்கிற பயலே.

**குறவன் :** வாடி அடிப்பண்ட மகளே
அடியே குண்ட(ன்) மகளே
ஓ! அதச் சொன்னீங்களா
அம்மா அதக் கேக்கலே

**குறத்தி :** ஓ! அதக்கவும் வேணாம்,
பிதுக்கவும் வேணாம்.

**குறவன் :** அம்மா நீங்க சொன்ன வார்த்தைய நான் கேட்கிறேன்.

**குறத்தி :** அடேய் நீ கிண்டவும் வேணாம், நோண்டவும் வேணாம்.

***குறவன்*** : அடிக்குறத்தி ஊருருக்கு மேயப் போயிட்டு இங்கே
எவங்கிட்டேட் வந்தே.......
(அடித்தல் - மிதித்தல் - நடித்தல்)

***குறத்தி*** : கேட்டாலும் கேட்டிருங்க
பஞ்சாயத்துக் காரங்களே
பாய விரிச்சுப் படுத்திருந்தேன்
பசுபதி போல இந்த பாவிப்பய
அடிக்கிறானே குடிவெறியாலே.

பாயப்பே பாட்டுப் படுத்திருந்தேன்
பசுபதியாட்டம் - இப்பப்
பட்ட எடமெல்லாம் வீங்கிப்போச்சு
பணியாரமாட்டாம்.

***(இடைக்காட்டூர் கருப்பையா)***

## குழூஉக் குறிச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பீனை | - | சம்பளம் |
| 2. | சூவை | - | ரூபாய் அல்லது பணம் |
| 3. | ஈவார் | - | பணம் |
| 4. | போரி | - | குமரிப்பெண் |
| 5. | மசை | - | பெண் |
| 6. | சாம்பார் | - | பறையர் |
| 7. | சட்டைக்குஞ்சு | - | சக்கிலியர் |
| 8. | கறம்பை | - | பள்ளர் |
| 9. | ஆட்டம் சித்தையா இருக்கு | - | ஆட்டம் அசிங்கமா இருகிறது. |
| 10. | எத்தா இருக்கு | - | நல்லா இருக்கிறது |
| 11. | தூகல் | - | சாப்பாடு |
| 12. | மொளக்காரன் | - | தவில் |
| 13. | கும்பக்காரி | - | ஆட்டக்காரி, ஆடும் பெண் |
| 14. | கரவன் | - | ஆள் |
| 15. | எத்துக்கரவன் | - | இருக்கப்பட்ட ஆள் |
| 16. | சிந்தைக்கரவன் | - | இல்லாத ஆள் |
| 17. | ஊரி | - | பெண்ணின் மார்பு |
| 18. | பொண்டி | - | பெண்ணின் குறி |
| 19. | பெருமாள் | - | ஆணின் குறி |

## பிற இனத்தார் பட்டியல் (தஞ்சாவூர் நகரில்)

| | பெயர் (பெண்கள்) | வயது | இனம் |
|---|---|---|---|
| 1. | ராணுபாய் | 33 | ராவ் |
| 2. | பொன்னுபாய் | 35 | ராவ் |
| 3. | பானுமதி | 28 | ராவ் |
| 4. | தமிழ்ச்செல்வி | 20 | ராவ் |
| 5. | கீதா | 22 | ராவ் |
| 6. | கிரிஜா | 20 | ராவ் |
| 7. | மல்லிகா | 26 | ராவ் |
| 8. | மல்லிகா | 28 | ராவ் |
| 9. | காமாட்சி | 40 | ராவ் |
| 10. | சாந்தி | 26 | ராவ் |
| 11. | ரத்னா | 28 | ராவ் |
| 12. | லதா | 17 | ராவ் |
| 13. | கோமதி | 18 | கவுண்டர் |
| 14. | ஜரினா பேகம் | 30 | இசுலாம் |
| 15. | சரிபா பேகம் | 35 | இசுலாம் |
| 16. | சூரியகலா | 19 | கள்ளர் |

## ஆட்டப் பாடல்களில் வழக்குச் சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அடப்பாங்கரை | - | அடுப்பறை (அடுப்பு) |
| 2. | எந்திரிச்சு | - | எழுந்து இருந்து |
| 3. | எதுத்த வீட்டு | - | எதிர் வீடு |
| 4. | எறவை | - | இரவல் |
| 5. | எறவப் புருசன் | - | ஓசிப் புருசன், வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளக்கூடியவன். |
| 6. | ஓசர | - | உயர, உயர்ந்த |
| 7. | கழண்ட | - | கழன்றுபோன, கழன்ற |
| 8. | குடுக்கலைன்னு | - | கொடுக்கவில்லை என்று |
| 9. | குத்தங்கொறை | - | குற்றங் குறை |
| 10. | கைப்போவானி | - | கைத் தோள்பட்டையில் தொங்கவிட்ட நிலையில் உள்ள தகர டப்பா |
| 11. | சவதி | - | சகதி |
| 12. | சங்கதி | - | செய்தி, கருத்து |
| 13. | சொரக்குடுக்க | - | சுரைக்காய் நெற்றிலிருந்து எடுக்கப்பட்ட கொள்கலன். |
| 14. | சேதி | - | செய்தி |
| 15. | சைசான | - | வடிவம், வடிவமான |
| 16. | டைமுமில்லே | - | நேரமுமில்லை |
| 17. | திம்போம் | - | திண்போம், தின்னுதல், உண்ணுதல். |
| 18. | தொன்ன நக்கி | - | தொன்னை (தென்னங் கீற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட குடுக்கை, குடிநீர்க் களன்) |
| 19. | நேந்து | - | நேர்ந்து, நேர்த்திக்கடன் |
| 20. | நொப்பன் | - | உன் அப்பன் (நும் அப்பன்) |
| 21. | பூராம் | - | முழுவதும் |
| 22. | பேதகமா | - | தவறாக (பேதம்) |
| 23. | நோத்தாள் | - | உனது ஆத்தாள் |
| 24. | நொய்த்தே | - | உனது அத்தை |
| 25. | நொக்கா(ள்) | - | உனது அக்காள். |




நிப.1



ஐப-3





រូប·4



